www.canadauthayan.ca
வெற்றிகரமான 16 வது ஆண்டில்
இவ்வார உதயன் 80 பக்கங்கள்

UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

416-752-1524
416-752-6703

உதயம் 824 Chief Editor: R. N. Logendralingam 20.01.2012 FRIDAY

MARCH 18
உதயன் சர்வதேச விருது விழா 2012
ஸ்காபரோ நகரில்........ விபரங்களுக்கு: 416-732-1608
UTHAYAN INTERNATIONAL AWARDS 2012
In Scarborough: for more info.: 416-732-1608



தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்க ஒன்றாரியோ மாகாண அரசும் நடவடிக்கைளை எடுக்க வேண்டும்

மார்க்கம் நகர சபை அங்கத்தவர் லோகன் கணபதி மாகாண அமைச்சரிடம் வேண்டுகோள்

எதிர்வரும் 2013ம் ஆண்டு தைப் பொங்கல் தினத்தை கொண்டாடும் வகையில் ஒன்றாரியோ அரசு அதை அங்கீகரிக்க முன்வரவேண்டும். இதற்கு இங்கு சமூகமளித்துள்ள ஒன்றாரியோ மாகாணத்தின் கலாச்சார மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் மைக்கல் சான் முன்வரவேண்டும். இந்த மாகாணத்தில் வாழுகின்ற லட்சக்கணக்கான தமிழ் மக்கள் சார்பில் நான் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்.“

இவ்வாறு கனடாவின் மார்க்கம் நகர சபையின் அங்கத்தவர் திரு லோகன் கணபதி கடந்த சனிக்கிழமையன்று நடத்திய தைப் பொங்கல் விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போது தெரிவித்தார்.

இங்கு காணப்படும் படத்தில் அன்றைய தினம் பொங்கல் விழாவில் கலந்து சிறப்பித்த மாநகர சபை அதிகாரிகள் ,பொலிஸ் திணைக்கள அதிகாரிகள், தமிழர் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரோடு லோகன் கணபதி தம்பதிகள் நிற்பதைக் காணலாம். (படம்: நவஜீவன்)



Liberal Leader, Bob Rae, salutes Jim Karygiannis for his commitment in uplifting the Party

லிபரல் கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ள ஜிம் கரிஜியானிசுக்கு தலைவர் பாப் றே புகழாரம்



கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிறு வரையில் ஒட்டாவா மாநகரில் நடைபெற்ற கனடா லிபரல் கட்சியின் அரையாண்டு மாநாட்டின் இறுதிநாளன்று உரையாற்றிய கட்சியின் இடைக்காலத் தலைவர் திரு பொப் றே நமது பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸை பாராட்டினார்.

தலைவர் தனது உரையில் “இன மத வேறுபாடு இன்றி பல்லின கலாச்சாரத்தை வளர்ப்பதில் தனித்தும் சேர்ந்தும் நின்று பாடுபட்டு உழைக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸை நான் பாராட்டுகின்றேன்.” என்றார். அங்கு உரையாற்றிய திரு ஜிம் அவர்கள் “கனடாவின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு இந்த மாநாட்டில் பெருமளவில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகள் சான்றாக இருக்கின்றார்கள்” என்று பலத்த கரகோசத்தின் மத்தியில் கூறினார்.

LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician

உங்கள் வீடுகளில் மூட்டைபூச்சி, கரப்பான் பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்





Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice


RANJAN: (416) 464-2415

TEL: 416-752-1524 FAX: 416-752-6703

சிறு விளம்பரங்கள் உதயன் CLASSIFIED ADs

PRIMA PEST SERVICES

100% Elimination of:



Mice, Cockroaches, Ants, Earwigs, Fleas, Bed-Bugs, Flies, & Other Insects.
Guaranteed work @ affordable prices!
Work done by University graduates.

TORONTO: (416) 836-5293
BRAMPTON-MISSISSAUGA: (905) 866-6565

கனடாத் தமிழீழச் சங்கம்

பின்வரும் சேவைகள் கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இவை குடிவரவுத் துறையின் பொறுப்பில் நடைபெறும் பணிகளாகும்

- புதிய குடிவரவாளருக்கான ஆங்கிலம் கற்பித்தல் (LINC)
- பொறுப்பேற்றல், குடியுரிமை விண்ணப்பங்கள் நிரப்பல்
- பெண்களுக்கு உதவும் பெண்கள் திட்டம்
- சான்றிதழ்கள் மொழி பெயர்ப்பு
- ஆவணங்கள் உறுதிப்படுத்தல்

வேலை தேடுகின்றீர்களா?

நீங்கள் நிரந்தர வதிவுரிமையாளர் (landed immigrant) அல்லது அகதி நிலை பெற்றவர் (convention refugee) ஆயின் இத்திட்டம் வழியாக வேலை பெறலாம். எந்த வேலை பெற வேண்டுமானாலும் எம்மோடு தொடர்பு கொள்க

பணி நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:00 - மாலை 5:00 வரை.

கூடுதல் விபரங்களுக்கு:

(416) 757-6043
1160 Birchmount Rd. Unit 1A
Scarborough, ON, M1P 2B8

COOK WANTED

Madras Place க்கு South Indian Cook, Thanduri Cook, Waiter, Waiterss, Dishwasher போன்றவர்கள் தேவைப்படுகிறார்கள்
Full Time

Call: (647) 864-8118

AZ DRIVER WANTED

Canada, USA
Long & Short Run
Dry van & Reefer
Experience needed
Dedicated Run

Call: (416) 832-7131
(905) 564-8851

TELE MARKETERS WANTED

Tele marketers தேவை
அனுபவங்கள் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு

Call: (416) 708-7202

GHURUS TOWING

Local / Long Distance Towing
Recovery Specialist
Flatbed Service
Lockout Specialist
Booster service
Flat Tire

We pay scrap $200 up-to $1000



NIRMALAN (ROGER):
(416) 990-7777
(416) 984-7777

US HWY DRIVERS WANTED

Single .42 Cents
Teams .44 Cents
Minimum 1 Year Exp
Dedicated Runs-KS,SC,TX,MI

Call: (905) 458-8852
dispatch@mandmcarriers.com

COOK WANTED

Downtown ல் அமைந்துள்ள Restaurant ஒன்றுக்கு Italian/Canadian Cook தேவைப்படுகிறார்கள் Minimum 3 Years Experience
Delivery Driver & Kitchen Helper போன்றவர்களும் தேவைப்படுகிறார்கள்

Call: (416) 662-7984

UCH INCOME TAX CLINIC

நீங்கள் OW (Social Assistant) ODSP பென்சன் போன்ற வருவாயில் தங்கி இருப்பவர்களாயின், எமது நிறுவனங்களுடன் இணைந்து தொண்டர் சேவை புரிவதன்மூலம் மேலதிக பணத்தை பெற்றுக் கொள்வதோடு பின்வரும் இலவசசேவைகளையும் எமது சட்ட பாடசாலை மாணவ தொண்டர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

- ❑ மொழி பெயர்ப்பு மற்றும் உங்களை பிரதிநிருத் துவப்படுத்தல் (Social service, DDSP, EI, Rev Canada)
- ❑ மிகக்குறைந்த கட்டண வீட்டுத்திட்டம்
- ❑ Immigration சம்மந்தப்பட்ட பூரணசேவை
- ❑ Accidents, Trafic Tickets, Court matters, Community service, OW

Brampton, Mississauga, York Region, Markham, Richm Hill, New Market போன்ற இடங்களில் எமது சேவை வழங்கப்படுகிறது

தொடர்புகளுக்கு: Mr. மாலன் Mr. பத்மநாதன்
2370 Midland Ave. (Midland / Sheppard)
Scarborough, ON, M1S 5C6

(416) 744-4357
www.vegfoodbank.ca

தானம் தர்மம் தொண்டு

SHAWN FORK LIFT DRIVING SCHOOL

40 Nugget Ave. #8

Forklift Licence from $ 75.00

வாரத்தில் 7 நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்



KUMAR: (416) 829-0603
(416) 297-5435

LINE COOK NEEDED

120 Lynn Williams

Aroma Espresso Bar in Liberty Village is now hiring full time experienced line cooks with extensive kitchen experience & open availablity. Work permit is required Plz contact nivslama@gmail.com or J.Segal@live.com include resume

Call: (416) 710-3564

BASEMENT FOR RENT

Warden/Ellesmere

சந்திப்பிற்கு அருகில் உள்ள 2 Bedrooms with separate entrance உடன் வாடகைக்கு உண்டு
Parking & Cable available
Close to 401, Mall & Cosco

Call: (647) 267-0161

CAR FOR SALE

Toyota LE 2000
Color:Gray

Picture may vary




Call: (647) 765-7374

CAR FOR SALE

Toyota Corolla VE
237 KM
$1699 or O.B.O

Picture may vary



Raj: (647) 403-2010

100% GUARANTY SPOKEN ENGLISH WITH GRAMMAR

3 மாதத்தில் இலக்கணப் பிழையின்றி சரளமாக ஆங்கிலம் பேசலாம் புதிதாக கனடாவிற்கு வந்தவர்கள் குறுகிய காலத்தில் மேற்படிப்பைத் தொடர, சிறந்த வேலைவாய்ப்பைப் பெற இருப்பவர்களுக்கும் House wife க்கும் Letter writing, Essay writing பயிற்சி, தேர்ச்சிபெற்ற ஆசிரியரால் வழங்கப்படும்.

Suruthy: (647) 606-1009

3 BDRM APARTMENT RENTAL SPECIAL

In a NEWLY Renovated High-Rice Apartment Building
Utilities Incld, Clean, Free Parking,
TTC, Tamil store in bldg,
Schools nearby

Call : (416) 264-2818

BASEMENT/ROOM FOR RENT

Morningside/Lawrence

சந்திப்பிற்கு அருகில் உள்ள 2 பெரிய அறைகளுடன் கூடிய basement, separate entranceஉடன் வாடகைக்கு உண்டு. அத்துடன் வீட்டின் மேல்தளத்திலும் 1 அறை வாடகைக்கு உண்டு. முதியோர், பெண்கள் விரும்பத்தக்கது

Parking & Cable available

Tel: (647) 344-5044
Cel:(416) 312-6827

பரதநாட்டிய வகுப்பு

Meadowvale / Ellesmere
Lawrence/Orton Park

வகுப்புகள் Scarborough பகுதியில் நடைபெறும்

புதிய வகுப்பில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி:

(647) 836-3563

விழா மேடைகளை அலங்கரிக்க

உங்கள் பிள்ளைகளின் அரங்கேற்றங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், ஏனைய மேடை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை அலங்கரிக்க தேவையான அழகுப் பொருட்கள் சிலைகள் ஆகியவற்றுக்கு Fashion Florist Inc

Call: 416-754 8282
416-297 0959
416-754 8884

முஸ்லீம் பிரியாணி

உங்கள் வைபவங்களுக்கு வரும் விருந்தினர்களை மகிழ்விக்க முஸ்லீம் பிரியாணியை வழங்குங்கள்

கொழும்பு பிளவுஸ் Hotel உணவகத்தின் அதே மணம், தரம், மலிவு விலை



Chicken பிரியாணி - $ 3.99
Mutton பிரியாணி - $ 4.99
Vege பிரியாணி - $ 3.99

call: (416) 919-4965

GENERAL LABOUR

HIRING: GENERAL LABOUR FOR AUTO PARTS ASSEMBLY PLANT
$10.75/ hr + BONUS.
PLUS 4% Vacation Pay + 10 days Public Holiday Pay / yr.
Morning and /or Afternoon Shift Available.
Preference is Male Job Candidates for Assembly Line Work.
In-person interview: Monday to Friday, 9am-5pm:
3440 Pharmacy Ave Unit 10,
Toronto ON. M1W 2P8

SUGI BEAUTY CARE உங்களை மேலும் அழகுபடுத்த

- ▶Bridal Dressing & Makeup
- ▶Hair Styles
- ▶Flower Arrangements
- ▶Cake



- ▶Threading
- ▶Facials
- ▶Waxing
- ▶Manicure
- ▶Pedicure
- ▶Hair Care

Call: (647) 938-6307, (905) 294-1982
Face Book :Sugi's Beauty Care
Email : sugibeautycare@hotmail.com
Address : 22, Holloway Rd, Masterkham, ON. L3S 4P4
Basement (Markham/Steeles)

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள்   Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
CIRCULATION MANAGER: S. J. Sothy
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Yalini, Janani, Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah, Chandran and Bavan


885, Progress Avenue, Unit -107, Scarborough, Ontario. M1H 3G3 (Progress & Markham)
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
Email: uthayannews@yahoo.com Website: www.canadauthayan.ca

UTHAYAN உதயன் கதிரோட்டம்

தை பிறக்க, யாருக்கு வழி பிறந்தது?

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது நல்லதோர் தமிழ்ப் பழமொழி. ஆனால் நமது தாயக மண்ணாம் தமிழர் பூமியில், இது கடந்த பல ஆண்டுகளுகளாக பொய்த்துப் போயுள்ளது என்றே கூறவேண்டும். பொங்கலைப் பொங்கி, சூரிய பகவானுக்கு படைத்து நமது பண்பாட்டின் கோலத்தை கொண்டாடும் அழகு அந்த மண்ணில் இல்லாமல் போய்விட்டது. வாழ்க்கை கசந்து விட்ட நிலையில் பொங்கல் எவ்வாறு இனிக்கப்போகின்றது?. என்று கேட்கின்றார்கள் அங்கு தங்கள் உயிரை மட்டும் "பிடித்து" வைத்துள்ள மக்கள். அரிசி விளையும் பூமியில் நம்மவரின் எலும்புக் கூடுகள் முளைக்கின்போது அந்த மண்ணில் எப்படி பொங்கிக் களிக்க முடியும்? சூரிய பகவா-னின் ஒளிதரும் பகலை மறைக்க எத்தனை அயல் நாட்டு விமானங்கள் நம்மவரின் வான் பறப்பில் பறந்த வண்ணம் உள்ளன? .. ஆமாம் தை பிறந்து விட நமது பிரதேசதங்களில் அயல் நாடாம் இந்தியாவின் தலைவர்கள் விமானங்களில் பறந்து வந்து குதிகின்றார்கள். அவர்களுக்குத் தான் வழி திறந்திருக்கின்றது. நமது மண்ணுக்கு வந்து தங்கள் அதிகாரத்தையும் ஊடுறுவலையும் நிகழ்த்தி விட்டுப் போக. வெறும் எழுத்தில் மட்டும் தான் தமிழர் பிரதேசம். ஆனால் அந்த மண்ணில் ஒரு அதிகாலைப் பொழுதில் அமைதியான வேளையில் காற்றில் வரும் வேற்று மொழிகள் தான் அதிகம். சிங்களம் அங்கு சிறகடித்துப் பறக்கின்றது. இந்திய மொழிகள் இடையில் கலக்கின்றன. தமிழ் அதிகாரிகள் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தான் அதிக நேரம் உரையாடுகின்றார்கள். ஏனென்றால் தமிழர் தாயகத்தில் பெரும்பான்மை மொழி பேசுகின்றவர்தான் ஆளுனர். அவர்தான் அந்த மண்ணில் கற்றவர்களையும் கல்லாதவர்களையும் ஆட்சிபுரிகின்றார். எப்போதும் ஆயுதங்களுடன் அலையும் சிங்கள இராணுவம். இவ்வாறு நமது தாயகம் தவிக்கின்றது. அங்கு உயர் அதிகாரிகளாக இருக்கும் ஓரிரு தமிழர்களும் தங்கள் தாய் மொழியை விட அதிகம் ஆட்சி மொழியை-யத்தான் பேசுகின்றார்களாம். இது ஒரு புறம் இருக்க, தை பிறந்ததும் அங்கு இந்தியத் தலைவர்களுக்குத் தான் வழியும் பிறந்துள்ளது, அதாவது நமது தாயகம் நோக்கிய உல்லாச மற்றும் உள்நோக்க பயணங்களை மேற்கொண்டு சிரித்தபடி வருகின்றார்கள். அங்கு தாங்கள் சந்திக்கும் மக்கள் கவலைகளில் மூழ்கிய முகங்களோடு வந்தாலும், அவர்களும் சிரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள். தங்கள் வாழ்வைச் சிதைத்தவர்கள் வருகின்றார்கள் என்று அவர்கள் மனதுக்குள் புகைகின்றார்கள்.. விடுதலைப் போரில் வெற்றியில் விழிம்பில் நின்றவர்களை சதி செய்த அழித்த சர்வதேசத்தின் பிரதிநிதிகளைப் பார்த்து அந்த மக்கள் எவ்வாறு சிரிபபார்கள்? என்று அந்தக் கயவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இவ்வாறான நேரத்தில் தான் இந்தியாவின் வெளிநாட்டு அமைச்சர் அந்த மண்ணுக்குச் சென்றார். அவர் தன் தாயகம் திரும்ப, அடுத்தவராக முன்னாள் ஜனாதிபதி அங்கு செல்கின்றார். இவர்கள் அனைவருமே தமிழ் மக்களின் கடந்த கால அழிவுகளை மறந்து விட்டுச் செல்லுகின்றார்களா? அல்லது நமது மக்களை மறந்து விடும்படி மறைமுகமாகக் கேட்கின்றார்களா? தை பிறந்து நம் தாயக மக்களுக்கு சிறிய வழியேனும் திறக்காத போது, இந்த உள்நோக்கம் கொண்டவர்களுக்கு அங்கு உலாவுவதற்கு வழி பிறந்துள்ளது. அந்த மண்ணில் வடிந்த குருதியின் ஈரம் காய்வதற்கு முன்பதாக அந்த தலைவர்கள் வருகின்றார்கள். அவர்களை வரவேற்ற நமது மக்கள்தான் அவர்களுக்கு தேவையாம்.

இதை விட அநியாயம் இன்னும் அங்கு நடக்கின்றது. தை பிறந்தும் கூட நமது மக்கள் வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய தங்கள் தமிழ்ப் பிரதிநிதிகளின் வழிகளும் கூட அடைக்கப்படுகின்றன. தங்கள் மக்கள் சார்ந்த விழாக்களில் கூட அவர்கள் கலந்து கொள்வதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது. அந்த மக்கள் பிரதிநிதிகளை புறக்கணித்து பின்கதவால் உள்ளே வரும் அரச சார்பு மந்திரிகள் அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களை நடத்துகின்றார்கள். தங்கள் கிராமத்தில் என்ன நடக்கின்றது என்பது கூட அந்த மக்கள் பிரதிநிதிகளுக்கு மறைக்கப்படுகின்றது. இவ்வாறு தை பிறந்தும் அங்கு வழி பிறவா மனதோடும் துயரத்தோடும் வாழும் நம்மவரை நாம் தேற்ற வேண்டும். ஸ்காபுறோவில் நடைபெற்ற பொங்கல் விழாவில் உரையாற்றிய நக்கீரன் என்னும் விழா ஏற்பாட்டாளர் கூறியது போன்று புலம் பெயர்ந்த நாம் அந்த தாயக மண்ணில் தை பிறந்தும் வழி தோன்றாதவர்களாய் வருந்தும் அவர்களின் துயரம் தீர உதவவேண்டும். இதுவே இவ்வார கனடா உதயனின் வேண்டுகோள் ஆகும்.



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இன்று இலங்கை செல்கின்றார்

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் இன்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கு நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். நாளை சனிக்கிழமை அவர் மாலை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒன்றில், ஜனாதிபதி மகிந்தவுடன் இணைந்து அப்துல் கலாம் மும்மொழிக் கல்வித் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளார். இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் செல்லும் அப்துல் கலாம் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வடமாகாண பாடசாலை மாணவர்கள் மத்தியில் உரையாற்றவுள்ளார். அடுத்து, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அப்துல் கலாம் தனது இலங்கைக்கான பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிச் செல்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

"ஈழநாடு" பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றம் விசனம் தெரிவிக்கின்றது

"கடந்த 13-01-2012 வெள்ளிக்கிழமையன்று வெளியான கனடா ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமான விளம்பரம் ஒன்றில் எமது மன்றத்தின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளதை அறிந்து எமது மன்றம் தனது மறுப்பை தெரிவிக்க விழைகின்றது. அத்துடன் மேற்படி விளம்பரத்தில் தனி நபர் ஒருவரின் சுயமான விருப்பு வெளிப்படுவதாகவே நாம் உணருகின்றோம்" இவ்வாறு மேற்படி விளம்பரம் தொடர்பாக உதயனுக்கு ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கனடாவில் ஆதிபராசக்தி குருமன்றங்களின் தாய் மன்றம் என்று கணிக்கப்படும் மேற்படி சக்தி மன்றம் 80 E Nashdene Road Unit 99 , Scarborough என்னும் விலாசத்தில் அமைந்துள்ளது.

மேற்படி மன்றத்தின் நிர்வாகம் மேலும் தெரிவிக்கையில் அந்த தனி நபரின் விளம்பரத்தில் குறிப்பிட்டதுபோல நிதி சேகரிப்பு விடயங்களுக்கு எமது நிர்வாகம் பொறுப்பேற்க மாட்டாது என்பதையும் தெரிவித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு குருமன்றத்தை 647-436-9647 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.



சென்னை நக்கீரன் பத்திரிகைக்கு மீண்டும் மின்சாரம் வழங்க நீதிமன்றம் உத்தரவு

நக்கீரன் பத்திரிகை அலுவலகத்தில் துண்டிக்கப்பட்ட மின்சாரம், குடிநீர் இணைப்புகளை சனிக்கிழமைக்குள் வழங்க வேண்டும் என்று சென்னை மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. முதல்வர் ஜெயலலிதாவைப் பற்றி அவதூறு செய்தி வெளியிட்டதாக கடந்த 7 ஆம் திகதியன்று நக்கீரன் அலுவலகம் அ.தி.மு.க.வினரால் தாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நக்கீரன் அலுவலகத்தின் மின் மற்றும் குடிநீர் இணைப்பும் துண்டிக்கப்பட்டதால் நக்கீரன் அலுவலகம் இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து, நக்கீரன் அலுவலகத்தின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கி சென்னை மேல்நீதிமன்றத்தில் நக்கீரன் சார்பில் அவசர வழக்கொன்று கடந்த 9 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.இந்த மனு சென்னை மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது நக்கீரன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பெருமாள் வாதிடுகையில், அலுவலகம் தாக்கப்பட்டது தொடர்பான புகைப்பட ஆதாரங்களை காட்டி வாதிட்டார்.

மேலும், அரசு தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்பட்டதை எடுத்துக் கூறினார்.இதையடுத்து குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படுவதற்கு, நீர் அசுத்தமானதே காரணம் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை ஏற்க மறுத்த நீதிபதி, எத்தனையோ இடங்களில் அசுத்தம் ஏற்பட்டுள்ளது. இதுநாள் வரை தூங்கிக் கொண்டிருந்த நீங்கள், எப்படி இந்த விடயத்தில் மட்டும் அவசரமாக துண்டித்தீர்கள்? என்று கேள்வி எழுப்பினார்.

இதனைத்தொடர்ந்து அன்றையதினம் ஒத்தி வைக்கப்பட்ட வழக்கு விசாரணை மீண்டும் நீதிமன்றுக்கு வந்தது. அப்போது எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் நக்கீரன் அலுவலகத்துக்கு மின்சாரம், குடிநீர் இணைப்பு வழங்க நீதிபதிகள் உத்தர விட்டனர். இதைச் செய்து முடித்த பின்னர் நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்றும் அரசுக்கு நீதிபதிகள் அப்போது தெரிவித்தனர்.

அமெரிக்காவின் அட்டகாசங்களுக்கு ஒருபோதும், ஈரான் அடிபணியாது - தூதர் அறிவிப்பு

அமெரிக்காவின் அட்டகாசங்களுக்கு ஒருபோதும் ஈரான் அடிபணியாது என இலங்கையிலுள்ள ஈரான் நாட்டின் பதில் தூதுவர் மு.அய்யித்தி தெரிவித்தார். காத்தான்குடிக்கு கடந்த சனிக்கிழமை விஜயம் செய்த ஈரான் நாட்டின் பதில் தூதுவர், காத்தான்குடி பிரதிநிதிகள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், ஈரானை அமெரிக்கா அதன் காலடியில் மண்டியிட வைக்க முயற்சித்துப் பார்த்தது. ஆனால் அது அமெரிக்காவினால் முடியவில்லை. அமெரிக்கா செய்யும் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் ஈரான் கேட்கும்போது ஈரானை அழிக்க முற்படுகின்றது. தரையிறக்கி ஈரானில் வைத்துள்ளதன் மூலம் ஈரானில் ஆத்மீகப் பலத்தை அனைவரும் தெளிவாக அறிந்துகொள்வர்.

அமெரிக்காவின் எந்த சவாலையும் ஈரான் சந்திக்க ஆயத்தமாக உள்ளது என்ற செய்தியை அமெரிக்காவின் உளவு விமானத்தை ஈரானில் தரையிறக்கியதன் மூலம் ஈரான் அமெரிக்காவுக்கும் அமெரிக்காவை பின்பற்றும் ஏனைய நாடுகளுக்கும் கூறியுள்ளது. ஈரானை அடிபணிய வைக்க அமெரிக்கா பலமுறை முயன்ற போதும் அதற்கு ஈரான் இடம்கொடுக்கவில்லை.

அமெரிக்கா முஸ்லிம் நாடுகளை அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே விரும்புகின்றது. ஈரானை பொறுத்தவரைக்கும் எந்தவொரு முஸ்லிம் நாட்டிலும் ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை.

அமெரிக்காவுக்கு எதிராக ஈரானின் நடவடிக்கையை கண்டு முஸ்லிம் நாடுகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்ற நிலையை அண்மைக்காலமாக நாங்கள் பார்க்கின்றோம் என்றார். இதன்போது ஈரான் முஸ்தபா சர்வதேச பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் குஜ்ஜத்துல் இஸ்லாம் ககீயும் வருகை தந்திருந்தார். தூதுவர் காத்தான்குடி அஸ்ஸஹ்றா கல்வி அபிவிருத்தி அமைப்பின் செயற்பாடுகளையும் பார்வையிட்டார்.

பாகிஸ்தானில் எந்நேரமும் இராணுவப் புரட்சி வெடிக்கும் அபாயம்






பாகிஸ்தான் பிரதமர் யூஸுப் ரஸா கிலானி, அந்நாட்டு இராணுவத்தினதும் புலனாய்வு பிரிவினதும் கடும் கண்டனத்தை சம்பாதித்துள்ளதால் அந்நாட்டில் இராணுவப் புரட்சியொன்று வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளது. பாகிஸ்தான் பாதுகாப்பு செயலாளர் கலீத் நயீம் மோதியை எதுவித முன்னறிவிப்புமின்றி பணிநீக்கம் செய்தமை, அந்நாட்டு இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவு மீது குற்றச்சாட்டுகளை முன் வைதத்தமை, என்பன காரணமாக யூஸுப் ரஸா கிலானி அந் நாட்டு இராணுவத்தினரதும் புலனாய்வு பிரிவினரதும் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளார். இந்நிலையில் இராணுவத் தளபதிகள் ராவல்பிண்டியில் அவசரக் கூட்டமொன்றை கூட்டியமை பதற்ற நிலையை அதிகரிப்பதாக அமைந்துள்ளது.

மேலும் அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதுவர் "ஹுசைன் ஹக்கானி அமெரிக்க அரசாங்கத்திற்கு ஏழுதிய கடிதம் பாகிஸ்தான் அரசியலில் பிரளயத்தை ஏற்படுத்தியுள்ளது. யூஸுப் ரஸா கிலானி சீனாவுக்கான தனது விஜயத்தின் போது அங்கு அளித்த பேட்டியில், பாகிஸ்தான் இராணுவம் அரசியலமைப்புக்கு முரணான விதத்தில் செயற்பட்டு வருவதாக பகிரங்கமாக குற்றஞ்சாட்டியிருந்தார். அத்துடன் இதன் போது அவர் பாகிஸ்தான் புலனாய்வு பிரிவையும் கண்டித்துள்ளார். அண்மைய வாரங்களாக புகைந்து கொண்டிருந்த இந்த உட்பூசல் தற்போது பூதாகார நிலையை அடைந்துள்ளது.

இந்நிலையில் 24 மணி நேரத்தில் ராவல்பிண்டியில் அவசரக் கூட்டமொன்றை கூட்ட இராணுவம் புலனாய்வு பிரிவும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளமை எந்நேரம் இராணுவப் புரட்சியொன்று பாகிஸ்தானில் வெடிக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதால் அந்நாட்டில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

ஒரு வருட பேச்சுவார்த்தையில் ஒரு அங்குலம் கூட நகரவில்லை

- சுரேஷ் எம்.பி. விசனம்



இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான பேச்சுக்களில் அரசுக்கு அக்கறையில்லை. குழுக்கள் நியமிப்பதைத் தவிர அரசு ஆக்கபூர்வமாக எதுவுமே மேற்கொள்ளவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பு பிரதிநிதிகளை நியமிக்காவிட்டால் கூட்டமைப்புடனான பேச்சு நடைபெறாது என பத்திரிகைகளில் செய்தி வெளியான போதும் இது தொடர்பாக உத்தியோக பூர்வமாக எமக்கு அறிவிக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பி.யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் அவர் யாழில் நடத்தினார். அவர் தொடர்ந்து கூறியதாவது,

இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாகவே கூட்டமைப்புடன் அரசு ஒரு வருடத்துக்கு முன்னர் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. ஒரு வருடம் கழிந்த நிலையிலும் பேச்சுவார்த்தை ஒரு அங்குலம் கூட முன் நகரவில்லை.

இனப்பிரச்சினை தீர்வுக்காக நாம் வழங்கிய தீர்வுத்திட்டம் குறித்தும் அரசு காத்திரமான பதிலெதுவும் தரவில்லை. யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களாகின்றன. இருந்தும் யாழ்.குடா நாடு இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. உயர் பாதுகாப்பு வலயங்கள் இன்னும் இருக்கின்றன.

காணாமல் போன தமது பிள்ளைகளை உறவுகளை இன்றும் ஆயிரக் கணக்கானோர் தேடியலைகின்றனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களை ஒரு வருடத்துக்குள் மீள் குடியமர்த்துவதாக அரசு இந்தியாவுக்கு உறுதியளித்தது. ஆனால் இன்றும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை. மொத்தத்தில் இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு காற்றில் பறக்கவிட்டுள்ளது.

புலிகள் மீண்டும் செயற்பட முனைவதாகவும் அரசு பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் இந்தியாவின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி விடக்கூடும். இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

கல்வி இல்லாதவரால் சமூகத்திற்கு பலனே கிட்டாது

கல்வி இல்லாத ஒருவர் எவ்வளவு தான் பொருளாதார வளத்தோடும் ஏனைய சொத்துக்களுடனும் இருந்தாலும் எந்தவிதமான பிரயோசனம் இல்லை. ஒரு மனிதன் இவ்வுலகில் சிறப்புற்று வாழ கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. கிழக்கு மாகாணத்திற்கான காணி அமைச்சராக இருக்கும் எனக்கு காணி இல்லை. ஆனால் கல்வி உண்டு. பணம் இல்லை. ஆனாலும் கல்வி உண்டு. ஆகவே கல்வியின் முக்கியத்துவம் மேலானதாகும். இவ்வாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க குறிப்பிட்டார்.

கல்முனை கல்வி வலயத்தில் அறுபத்து மூன்றாவது பாடசாலையாக உருவாக்கப்பட்ட அக்பர் வித்தியாலயம் அக்பர் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துல்ஹர் நயீமின் பெரு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட அக்பர் வித்தியாலய ஆரம்ப விழாவில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ. போல், மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கே.எம்.ஏ.ரஸ்ஸாக் (ஜவாத்), கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்..ஏ. தௌபீக், கல்முனை மாநகர சபை உறுப்பினர் அமீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. ஜலீல் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

அங்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க மேலும் பேசுகையில், இப் பாடசாலை பல்வேறுபட்ட எதிர்ப்புக்களையும் கஷ்டங்களையும் தாண்டி உருவாக்கப்பட்டதாகும். இதற்காக உழைத்த துல்ஹர் நயீமிற்கு நீங்கள் நன்றி பாராட்ட வேண்டும். எமது மாகாண அமைச்சர் உதுமாலெப்பை, மாகாண சபை உறுப்பினர் றசாக் போன்றோர் அதிகமாக கல்வி பற்றியே பேசுவார்கள். அவர்கள் என்னை அடிக்கடி சந்தித்து கல்முனை பிரதேச கல்விக்காக உழைப்பார்கள்.

எமது அரசாங்கம் உங்களுக்கு எல்லா வகையான சேவைகளையும் வழங்கிக் கொண்டு இருக்கின்றது. தேர்தல் காலத்தில் வெற்றிலைக்கு வாக்களிக்குமாறு நாம் கேட்டால் நீங்கள் வாக்களிக்க மாட்டீர்கள். றசாக் வந்து மரத்துக்குப் போடுமாறு கேட்டால் நீங்கள் யாவரும் மரத்திற்கு வாக்களித்து வெல்ல வைப்பீர்கள் என்றார்.

வன்னியில் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு அனைவரும் உதவவேண்டும்

வன்னியில் இருக்கின்ற மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் துன்பநிலைமையில் காணப்படுகின்றனர். யுத்தத்தினால் அனைத்தையும் இழந்த நிலையிலும் தமது பிள்ளைகளுக்கான கல்வியை வழங்குவதில் ஆர்வமாக இருக்கின்றார்கள்.

இத்தகைய வறிய நிலையில் உள்ள பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவ வேண்டியது சமகால தேவைப்பாடகவுள்ளது என துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தெரிவித்தார். துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்ற சிவத்தமிழ்ச் செல்வி அறக்கொடை வழங்கும் நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்கும் திறமையுடைய வறுமை நிலையிலுள்ள மாணவர்கள் 100 பேருக்கு வழங்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதித் தொகையைப் பெற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:

பல்வேறு துன்பங்களின் பின்னும் வன்னிப் பிரதேசத்து மக்களால் வெளியே எடுத்துவரப்பட்ட சொத்தாக கல்வி விளங்குகின்றது. பல்வேறு இழப்புக்களை சந்தித்த போதிலும் எஞ்சியுள்ளது கல்வி மட்டுமே. எங்களுடைய குழந்தைகள் இப்பொழுது எதை இழந்தாவது கல்வியை பெற வேண்டும் என்ற மிகப்பெரிய ஆதங்கத்தில் உள்ளனர். பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து அவர்கள் கல்வியை வளம் பெற நாம் கடுமையாக உழைக்கவேண்டும் என்றார்.

வன்னியில் இன்னும் மூடிக்கிடக்கும் அறநெறிப் பாடசாலை

வன்னி விளாங்குளம் கிராமத்தில் மாணவர்களின் சமய அறிவு வளர்ச்சிக்காக உதவி அரசாங்க அதிபர் வழங்கிய நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அறநெறிப்பாடசாலை பல மாதங்களாகியும் செயற்படாமல் முடங்கிக் கிடக்கிறது. இந்த நிலைப்பாடு குறித்து கவலை தெரிவித்துள்ள பெற்றோர்கள் மாணவர்களின் பண்பாட்டிற்காக இப்பாடசாலையை விரைவாக ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 2010ம் ஆண்டு டிசம்பர் மாதம் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

வன்னி விளாங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 116 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். இந்த கிராமத்தில் வசிக்கும் மாணவர்களின் சமய அறிவு வளர்ச்சிக்காக மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வழங்கிய 75 ஆயிரம் ரூபா நிதியிலிருந்து பிரசித்தி பெற்ற முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கருகாமையில் அறநெறிப் பாடசாலை கட்டப்பட்டது.

இப்பாடசாலையின் கட்டிட வேலைகள் முடிவடைந்து பல மாதங்களான பின்பு பாடசாலை திறக்கப்படவுமில்லை. வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுமில்லை. இப்பாடசாலையில் சமய அறிவைக் கற்கவுள்ள மாணவர்களுக்காக இந்து கலாசார அமைச்சினால் ஒரு தொகுதி சமய நூல்களும் சீருடைகளும் வழங்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் பாடசாலை மூடப்பட்டிருப்பது குறித்து விசனமடைந்துள்ள பெற்றோர்கள் பாடசாலையை மிக விரைவாக திறப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் பொதுமக்கள் காணிகள் அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் பெருமளவு காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவீகரிப்புக்காக அடையாளப் படுத்தப்பட்டவற்றில் பொதுத் தேவைகளுக்கும், பொதுமக்களுக்கும் உரிய காணிகளும் அடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான காணிகள் சுவீகரிப்பின் போது தவிர்க்கப்பட்டுள்ள போதிலும் பெருமளவு காணிகளை சுவீகரிப்பதற்கான அனுமதியை அதிகாரிகள் வழங்கியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றி தெரியவருவதாவது: துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட அனிச்சியன்குளம், தேராங்கண்டல், ஐயன்குளம், ஆலங்குளம், பழைய முறிகண்டி, கோட்டைகட்டிய குளம், தென்னணியன் குளம், அமைதிபுரம் ஆகிய 8 கிராம சேவகர் பிரிவுகளில் காணிகளை சுவீகரிப்பதற்காக இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 915 ஏக்கர் காணிகளில் 650 ஏக்கர் காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கான அனுமதி அதிகாரிகளினால் வழங்கப்பட்டிருப்பது தெரிகின்றது. எஞ்சிய 265 ஏக்கர் காணிகளும் பொதுத் தேவைக்குரியதும், பொது மக்களின் குடியிருப்பு காணிகளும் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

படையினர் மற்றும் பொலிஸாரின் பாவனைக்காகவே இவ்வான காணிகள் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், அடையாளப்படுத்தப்பட்ட சில காணிகளில் ஏற்கனவே படையினரும் பொலிஸாரும் நிலைகொண்டிருப்பதாகவும், அவற்றை சட்ட ரீதியாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவு வந்துள்ளது.

கடைத் தொகுதிகள், மக்கள் குடியிருப்புக்களென அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணிகளும், குடியேற்றத்திட்டக் காணிகளும், சுவீகரிப்பதற்காக அடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் அடங்குவதாகவும், இவற்றிற்கு அனுமதி வழங்குவதற்கு அதிகாரிகள் மறுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையடுத்து துணுக்காய் பிரதேச மக்கள் மத்தியில் சந்தேகமும் அச்சமும் ஏற்பட்டுள்ளதையடுத்து, மக்கள் பிரதிநிதிகளின் ஊடாக அவர்களது அச்சத்தையும் சந்தேகத்தையும் நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அரச படைகள் மற்றும் பொலிஸாரின் தேவைகளுக்காக நிரந்தரமாகக் காணிகளை சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், எனினும் அவை தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் விபரங்கள் என்பன வெளியிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பான பரிந்துரைகள் இடம்பெறவில்லை

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடத்தக்க பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளன. இவை நல்லிணக்கம் மற்றும் இனப்பிரச்சினை என்ற விடயங்களில் அமைந்துள்ளனவேயன்றி இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து உரிய பரிந்துரைகள் இடம்பெறவில்லை என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது. பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் அலிஸ்ரர் பூட் இது தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் கருத்துரைக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவே இலங்கைக்கு பரீட்சைக்களமாக இருக்கும் குழுவின் சில பரிந்துரைகள் சில மாதங்களில் நடைமுறைப்படுத்தக்கூடியவை. ஏனைய பரிந்துரைகள் நடைமுறைப்படுத்த காலம் செல்லும். இந்த நிலையில் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதிலேயே இறுதியாக நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் வெற்றியும் தோல்வியும் தங்கியுள்ளது.

எனினும் போர்க்குற்றம் தொடர்பில் நல்லிணக்க அறிக்கையில் உரிய பரிந்துரைகள் இடம்பெறவில்லை. போர்க்குற்றம் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் மனித உரிமை மீறல்கள், சனல் 4 காணொளி, ஐக்கிய நாடுகள் நிபுணர்களின் போர்க்குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இந்த அறிக்கையில் பதில்கள் வழங்கப்படாமை திருப்தியளிக்கவில்லை. இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் இருந்து படைகளை குறைத்து பொது மக்களின் நிர்வாகத்துக்கு இடம்தரப்பட வேண்டும் என்ற விடயத்தில் அரசாங்கம் உடனடியாக நடைமுறையை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

அரசாங்கத்தை எதிர்க்க வேண்டியவர்கள் எம்மை எதிர்க்கின்றார்கள்

- ரணில் கவலை



நாட்டுக்காகவும் பொதுமக்களுக்காகவும் அரசாங்கத்தை எதிர்த்து போராட வேண்டிய தருணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தா மீது தாக்குதல் நடத்தியவர்கள் துரோகிகளாவர். இத் தாக்குதலுடன் தொடர்புடையவர்களுக்கு எந்த மன்னிப்பும் கிடையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கௌரவமான வரலாறு உள்ளது. அதேபோன்று பாதுகாப்பதற்கு கலாசாரம், நாடு மற்றும் பொதுமக்கள் என பல விடயங்கள் உள்ளன. எனவே இதற்கு எதிராக செயற்படுபவர்களை தோற்கடித்து நாட்டையும் மக்களையும் முன்னகர்த்த ஒன்றிணைவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சேதமாக்கப்பட்ட ஸ்ரீ கொத்தாவின் புனரமைப்புக்கு சேதவத்தை புராண விகாரையின் தலைமை விஹாராதிபதியினால் திங்கட்கிழமை நிதி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாட்டுக்கும் மக்களுக்கும் ஸ்ரீகொத்தா மீதான தாக்குதல் பாரிய இழப்பாக உள்ளது. இதனால் தான் விஹாராதிபதிகள் ஐ.தே.க. விற்கு நிதி உதவி வழங்கி ஸ்ரீகொத்தாவை கட்டியெழுப்ப உதவுகின்றனர். ஆட்சியில் இருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தாலும் எப்போதும் நாட்டுக்காகவும் மக்களுக்காவும் ஜனநாயகத்திற்காகவும் செயற்பட்டு அதனை பாதுகாப்பதற்காக பாடுபட்டவர் நான் என்றார்.

2012ம் ஆண்டு இலங்கைக்கு ஒன்பது இலட்சம் உல்லாசப் பயணிகளை அழைப்பதே இலக்கு

நாட்டில் 2012 ஆம் ஆண்டில் ஒன்பது இலட்சத்து 50 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று பதில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இலங்கையில் சுற்றுலாத்துறை பாரிய வளர்ச்சிப் பாதையில் பயணிக்கின்றது. எனவே, இந்தத் துறையில் முதலீடு செய்ய வருமாறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்புவிடுக்கின்றோம் என்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன கூறினார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே பதில் அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:

கடந்த வருடம் நாட்டுக்கு எட்டு இலட்சத்து 54 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். ஏழு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகளே எமது இலக்காக இருந்தனர். ஆனால் அதனையும் தாண்டி சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டில் 30.8 வீதமான வளர்ச்சி காணப்படுகின்றது.

அதேபோன்று, 2012 ஆம் ஆண்டில் ஒன்பது இலட்சத்து 50 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதே அரசாங்கத்தின் இலக்காகும். அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதற்கான அனைத்து வதிகளும் ஏற்படுத்தப்படும்.

காரணம், தற்போது எமக்கு இருக்கின்ற வசதிகளுடன் பார்க்கையில் 2012 ஆம் ஆண்டில் 10 இலட்சம் சுற்றுலாப் பயணிகளையே வரவழைக்க முடியும். அதனால் தான் ஒன்பது இலட்த்து 50 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

சிறப்புற நிகழ்ந்த கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பொங்கல் விழா

-கலாரசிகன்

தைப்பொங்கல் தினத்தன்று (15.01.2013) பி.ப. 5:30க்கு செல்லச் சந்நிதி ஆலய மண்டபத்தில் இணைத்தின் தலைவர் த. சிவபாலு தலைமையில் மேற்படி விழா இடம்பெற்றது. மாவிலி மைந்தன் சண்முகராஜாவின் தலைமையில் தைப்பொங்கல் பற்றிய கவியரங்கமும், பேராசிரியர் சிவா. பசுபதி அவர்களின் தலைமையில் "தமிழரன் பண்பாட்டில் மரபும் புதுமையும்" என்னும் பொருள்பற்றிய கருத்தரங்கமும். கலாநிதி ஸ்ரீ மதிபாஸ்கரனின் நெறிப்படுத்தலில் "முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தனர்" என்னும் தென்மோடியில் அமைந்த நாட்டுக் கூத்தும் இடம்பெற்றன.

முத்தமிழ் விழாவாக இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியைக் கண்டுகளித்தவர்கள் அனைவருமே மிக அருமையான கருத்துக்கள் கவிதைகளிலும், கருத்தரங்கத்திலும், கூத்திலும் முன்வைக்கப்பட்டிருந்ததை மிகச் சிறப்பாகப் பாராட்டினார்கள்.

எழுத்தாளர் இணையத்தினால் நடத்தப்பட்ட கவிதை வகுப்புக்களில் கலந்துகொண்டு பயிற்சி பெற்ற கவிவல்லாளர்களான திரு. கனிவிமலநாதன், திருமதி, மீரா இராசையா, பல்கலைச் செல்வர் ஜனாப் கன்சீர், திரு, சுரேஸ் (அகணி) திரு, கா. காந்தரூபன், அருட்கவி, ஞானகணேசன் ஆகியோர் கவிதையரங்கில் கலந்து சிறப்பித்தனர்.

அதன்பின்னர் இடம்பெற்ற பட்டிமன்றத்தில் முன்னைநாள் இலங்கைப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களான முனைவர்கள். இ.பாலசுந்தரம், பார்வதி கந்தசாமி, க. இரகுநாதன், ஜனாப் இசாக் ஆகியோர் கலந்து அருமையான கருத்துக்களை முன்வைத்தனர். பண்பாட்டின் பாரம்பரிய விழுமியங்களும், இன்றைய போக்கும் என்னும் பொருளில் கருத்துரைகள் அள்ளிவீசப்பட்டன. கனடிய மண்ணில் பண்பாட்டுக்கோலங்களைத் தக்கவைக்க பெற்றோராற்றவேண்டிய கடமையும் தமிழ்ச்சமூகத்தின் கடப்பாடும் என்னும் கருத்தும் முன்வைக்கப்பட்டதோடு பல்கலைக்கழகத்தில் மற்றைய மொழிகள் போன்று தமிழையும் தக்கவைக்கவேண்டும் என்னும் கருத்தும் முன்வைப்பட்டது. இதற்கு தலைமைதாங்கிய பேராசிரியர் பசுபதி அவர்கள் இங்கு பங்குபற்றி கருத்துரை வழங்கியவர்கள் அனைவருமே பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக இருந்த அனுபவம் பெற்றவர்கள். அவர்களின் கருத்துக்கள் மிகத் துல்லியமாக எடுத்துக் கையாளப்பட்டுள்ளது என்பதனைக் குறிப்பிட்டதோடு. கலாச்சாரம் என்ற சொல்லிற்குப்பதிலாக தமிழ் லெக்சிக்கனில் சம்பந்த முதலியார் முதன் முதலில் 1920களில் 'பண்பாடு" என்ற சொல்லைப் புகுத்தியிருந்தார் என்ற கருத்தை முன்வைத்திருந்தார்.

பண்பாடு என்பதற்குச் "சால்பு" என்னும் அருமையான தமிழ்ச்சொல் வள்ளவரால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டிருந்தது. புலம்பெயர் மண்ணில் எமது பண்பாட்டுக் கருவூலங்களைச் சிதையவிடாது பாதுகாக்கப் பெற்றோரும் கற்றோரும் இணைந்து பாடுபடவேண்டும் என்னும் கருத்துப் பொதுவாகவே அனைவராலும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மட்டுக்களப்பிற்கே உரித்தான தென்மோடி நாட்டுக்கூத்தினை மிக சாதுரியமாகக் கையாண்டு மேடையேற்றினார் மருத்துவக் கலாநிதி ஸ்ரீ மதிபாஸ்கரன். அவரோடு இணைந்து பாடசாலை குடியமர்வு அலுவலர் திரு. தங்கவேலு அவர்களும் பிரதம பாத்திரத்தினை ஏற்று நடித்தனர். அவர்களோடு நட்டுவாங்கம், கட்டியக்காரன் ஆகியோரும் மேடையில் தோன்றினர். இவர்களோடு இன்னும் பலர் பாடல்களை இசைத்துக் கூத்தை மெருகூட்டினர். கூத்தைப்பார்திருந் சபையோர்கள் ஆட்டத்தின் தன்மையைப் பார்த்துப்பாராட்டினர். லயசுத்தத்தோடு அமைந்திருந்த அந்த ஆட்டவகை பரவசமூட்டியதோடு ஈழமண்ணிற்கு அனைவரையும் அழைத்துச் சென்றது எனப் பண்டிதர் மா.செ. அலெக்சாந்தர், கவிநாயகர் கந்தவினம், கலைஞர் திவ்வியராஜன் ஆகியோர் பாராட்டியதைக் கேட்கமுடிந்தது. இவற்றிற்கு மேலாக ஆலய அர்ச்சகர் புவனேஸ்வரன் ஐயா அவர்கள் எனது வாழ்நாளில் இப்படியான ஒரு நாட்டுக் கூத்தை இன்றுதான் பார்த்தேன் என வாயாரப் பாராட்டினார்.

வாழ்க்கையில் அனைத்து வெற்றிகளையும் தரும்

அபிராமி அந்தாதி மந்திரங்கள் துர்க்கேஸ்வரத்தில் 22-1-2012

ஞாயிறு மாலை 7.00 மணிக்கு

விதியை வெல்லும் நாளாக
அம்பாள் நல்கிய
தை அமாவாசை தினத்தில்
பக்தர் நிகழ்த்தும்
தரிசன அர்ச்சனை

வேண்டிய பலன்களை நல்கும் அபிராமி அந்தாதியின் மந்திர சக்தியைக் பெறுவதற்காக உரிய பக்குவம் தரும் கிரியா பாவங்கள் மூலம் தூய்மை பெற்று, அபிராமிக்கு மிக விஷேடமான குங்கும அர்ச்சனையை நிகழ்த்தும் பக்தர்கள் தரிசனம், சமர்ப்பணம் ஆகிய ஆகிவற்றிலும் கலந்துகொள்வர்

பதிவு செய்து கொள்க
416-759 9648

மாணவர்களுக்கு

நல்வித்தையும் ஞானமும் பெற : அபிராமி மந்திரம் 1
மனச்சஞ்சலம் உண்டாகாதிருக்க : அபிராமி மந்திரம் 23
சொல்வன்மையும் செல்வாக்கும் பெருக : அபிராமி மந்திரம் 26
அகால மரணம் உண்டாகாதிருக்க : அபிராமி மந்திரம் 32
வித்தையில் தேர்ச்சி பெற : அபிராமி மந்திரம் 39
நல்லறிவு உண்டாக : அபிராமி மந்திரம் 63
பக்தி பெருக : அபிராமி மந்திரம் 64
கவி பாடும் ஆற்றல் பெற : அபிராமி மந்திரம் 66
கலைகளில் வல்லமை பெற : அபிராமி மந்திரம் 70
கவன சக்தி பெருக : அபிராமி மந்திரம் 82
அச்சம் நீங்க : அபிராமி மந்திரம் 86

இளைஞர்களுக்கு

கன்னிகைகளுக்கு நல்ல வரன் கிடைக்க : அபிராமி மந்திரம் 17
நினைத்த காரியம் இடையூறின்றி ஈடேற : அபிராமி மந்திரம் 25
அடுத்தடுத்து வரும் ஆபத்துக்கள் நீங்க : அபிராமி மந்திரம் 30
காதல் திருமணம் கைகூட : அபிராமி மந்திரம் 35
வேண்டிய பொருளை அடைய : அபிராமி மந்திரம் 38
உலகம் நமக்கு வசியப்பட்டிருக்க : அபிராமி மந்திரம் 42
நடத்தை தோஷங்கள் தீர : அபிராமி மந்திரம் 46
வசீகரிக்கும் ஆற்றல் உண்டாக : அபிராமி மந்திரம் 56
எத்தகைய அச்சமும் அகல : அபிராமி மந்திரம் 62
செயற்கரிய செயல்களைச் செய்து புகழ் பெற : அபிராமி மந்திரம் 87

இளம் தம்பதிகளுக்கு

பிரிந்தவர் ஒன்று சேர : அபிராமி மந்திரம் 2
மன வியாகூலம் தீர : அபிராமி மந்திரம் 5
சர்வ வசியம் உண்டாக : அபிராமி மந்திரம் 9
இல்வாழ்க்கையில் இன்பம் பெற : அபிராமி மந்திரம் 11
உலக அபவாதம் நீங்க : அபிராமி மந்திரம் 45
புத்திர பாக்கியம் உண்டாக : அபிராமி மந்திரம் 65
பெண்களுக்குக் கர்ப்பப் பிராப்தி உண்டாக : அபிராமி மந்திரம் 73
தனக்குரிய பொருள் தப்பாமல் வந்து சேர : அபிராமி மந்திரம் 76
சர்வ போக சௌக்கியங்களும் உண்டாக : அபிராமி மந்திரம் 78
பிரிந்த தம்பதிகள் மனம் ஒன்றி சேர : அபிராமி மந்திரம் 90

குடும்பத்தவர்களுக்கு

மலையென வருந்துன்பம் பனியென நீங்க : அபிராமி மந்திரம் 7
பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற : அபிராமி மந்திரம் 15
வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக : அபிராமி மந்திரம் 20
பயிர் செய்ய ஏற்ற நிலபுலன்கள் கிடைக்க : அபிராமி மந்திரம் 34
நவரத்ன பிராப்தி உண்டாக : அபிராமி மந்திரம் 37
இம்மையில் பொருட்செல்வம் உண்டாக : அபிராமி மந்திரம் 52
கடன் தொல்லை தீர : அபிராமி மந்திரம் 54
வறுமை ஒழிய : அபிராமி மந்திரம் 57
துர்நடத்தை உள்ள பிள்ளை திருந்தி வர : அபிராமி மந்திரம் 59
பகைவர்கள் அழிய : அபிராமி மந்திரம் 67
வீடுவாசல் போன்ற செல்வம் அடைய : அபிராமி மந்திரம் 68
சகல சௌபாக்கியங்களும் உண்டாக : அபிராமி மந்திரம் 69
மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி பெருக : அபிராமி மந்திரம் 71
செய் தொழிலில் தலைமை எய்த : அபிராமி மந்திரம் 74
பகைவர்களால் உண்டாகும் அச்சம் நீங்க : அபிராமி மந்திரம் 77
நிலையான மனமகிழ்ச்சி உண்டாக : அபிராமி மந்திரம் 80



துர்க்கேஸ்வரம் திருக்கோவிலில் அபிராமி அம்மன் தரிசனம் அபிராமிப்பட்டர் விழா

22-1-2012 ஞாயிறு இரவு 7 மணி

துர்க்கேஸ்வரம் திருத்தலம், அம்பாளின் உறைவிடம். சக்தியின் நிறைவிடம். குறைவிலாச் செல்வம் தரும் இறைஇடம். இந்த ஸ்தலத்தில் தை அமாவாசை தினத்தில் அம்பாள் அபிராமியாகக் காட்சி அளிக்கிறாள். இந்த நாளில் பக்தர்களின் விருப்பங்களை ஈடேற்றி வைக்கிறாள். இதன் காரணமாக, தை அமாவாசை தினத்தில் ஆயிரக்கணக்கான பக்தர் இங்கு கூடுவர். அபிராமியை வழிபாடு செய்வர். அம்பாளின் அருள் பெறுவர். அபிராமி அந்தாதி என்னும் தமிழ் மந்திரங்களை அம்மனுக்கு சமர்ப்பணம் செய்வர்.

22-1-2012ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தை அமாவாசை தினம் அமைந்திருக்கிறது. அன்றைய தினம் துர்க்கேஸ்வரத்தில் அபிராமிப் பட்டர் விழாவில் அபிராமி தரிசனம் தரவிருக்கிறாள். கடந்த 10 ஆண்டுகளிலும் இவ்விழாவில் பங்கேற்று வழிபட்டு நிறைந்த பலன்களைப் பெற்ற பல அடியார்களும் தம் அனுபவங்களைக் கூறும்போது, மெய்யுருகும். சிறப்புமிகு இந்த நாளிலே, இவ்வாண்டு மேலும் விஷேட வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னர், திருக்கடவூரில் தை அமாவாசை தினத்தில் அம்பாள் அபிராமியாக காட்சி அளித்து, அமாவாசை தினத்தில் வானத்தில் நிலவை வரவழைத்த அற்புதம் நிகழ்ந்தது. அதே தினத்தில் ஒவ்வொரு ஆண்டும் அபிராமி அம்மனின் அருள் பொலிவதாய் ஐதீகம்.

இந்த நாளிலே, வழமைபோல, இம்முறையும் மிருதங்க சங்கீத கலாவித்தகர் இசைக்கலைமணி திரு. வர்ண ராமேஸ்வரன் அவர்களும் பக்கவாத்திய குழுவினரும் அபிராமி அந்தாதி இசை நிகழ்ச்சியை தருகின்றனர்.

தொழில் வெற்றிக்கு

உயர் பதவிகள் அடைய : அபிராமி மந்திரம் 4
தலைமைத்துவம் பெற : அபிராமி மந்திரம் 14
தீமையெல்லாம் ஒழிய : அபிராமி மந்திரம் 43
ஏவலர் பலர் உளராக : அபிராமி மந்திரம் 83
தர்மசங்கட நிலமைகள் நீங்க : அபிராமி மந்திரம் 84
அரசாங்க காரியங்களில் வெற்றி உண்டாக : அபிராமி மந்திரம் 91
எங்கும் தலைமையும் புகழும் பெற : அபிராமி மந்திரம் 96
புகழும் தர்மமும் வளர : அபிராமி மந்திரம் 97
வஞ்சகர் செயலால் தளராது இருக்க : அபிராமி மந்திரம் 98

ஆரோக்கியத்துக்கு

மரண பயம் நீங்க : அபிராமி மந்திரம் 18
தீராத வியாதிகள் தீர : அபிராமி மந்திரம் 24
மனநோய் தீர : அபிராமி மந்திரம் 27
பேதபுத்தி நீங்க : அபிராமி மந்திரம் 44
மரணாவஸ்தை இல்லாது ஒழிய : அபிராமி மந்திரம் 49
வலிமை மிக்க விதியையும் வெல்ல : அபிராமி மந்திரம் 75
நன்னடத்தை உண்டாக : அபிராமி மந்திரம் 81
பைத்தியம் தெளிய : அபிராமி மந்திரம் 94

தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்க கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

மார்க்கம் நகர சபை அங்கத்தவர் லோகன் கணபதி மாகாண அமைச்சரிடம் வேண்டுகோள்






எமது மார்க்கம் நகரசபை தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அங்கீகரித்த காரணத்தால்தான் நாம் இன்று இந்த மார்க்கம் நகர சபையின் சபா மண்டபத்தில் தைப்பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுகின்றோம். ஒரு உள்ளூராட்சி அமைப்பு எமது தமிழர் சமூகத்திற்கு அளித்த கௌரவத்தைப்போல கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசும் தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்க வேண்டும். இந்த திட்டத்தை முன்னெடுத்து இனிவரும் 2013ம் ஆண்டு தைப் பொங்கல் தினத்தை கொண்டாடும் வகையில் ஒன்றாரியோ அரசு முன்வர வேண்டும். இதற்கு இங்கு சமூகமளித்துள்ள ஒன்றாரியோ மாகாணத்தின் கலாச்சார மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் மைக்கல் சான் முன்வர வேண்டும். இந்த மாகாணத்தில் வாழுகின்ற லட்சக்கணக்கான தமிழ் மக்கள் சார்பில் நான் இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்."

இவ்வாறு கனடாவின் மார்க்கம் நகர சபையின் அங்கத்தவர் திரு லோகன் கணபதி கடந்த சனிக்கிழமையன்று நடத்திய தைப் பொங்கல் விழாவிற்கு தலைமை தாங்கி உரையாற்றும் போது தெரிவித்தார். அங்கு சமூகமளித்திருந்த மாகாண அமைச்சர் திரு மைக்கல் சான் அவர்களிடம் இந்த வேண்டுகோளை அவர் விடுத்தபோது அமைச்சர் சிறிய புன்முறுவலுடன் அதனை ஏற்றுக் கொள்ளுவதாக தலையை ஆட்டினார்.





தொடர்ந்து திரு லோகன் கணபதி அங்கு உரையாற்றிய போது "கனடாவில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் நாம் பலவற்றை சாதிக்கலாம். இங்குள்ள மாகாண மற்றும் மத்திய அரசாங்கங்கள் கூட பல்வேறு இனங்களின் தனித்தன்மைகளை மதித்து வருகின்றன. எனவே நாம் எமது இனத்தை மற்றவர்கள் மதிக்கும்படியாக வாழ்ந்து காட்ட வேண்டும். இந்த வருடத்தைப் போல இனிவரும் ஆண்டுகளும் நாம் இந்த நாட்டில் தலை நிமிர்ந்தவர்களாக வாழ வழிகள் தோன்ற வேண்டும்" என்றார்.

மேற்படி பொங்கல் விழாவில் பிராந்திய பொலிஸ் திணைக்களத்தின் துணை அத்தியட்சகர் திரு ரிக்கி வீரப்பன் மற்றும் மாநகர சபையின் அதிகாரிகள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அமைச்சர் திரு மைக்கல் சான் அங்கு வாழ்த்துரை வழங்கியபோது "எனது நண்பர் என்னிடம் வேண்டிக் கொண்ட வண்ணம் இன்னும் சில மாதங்களுக்குள் எமது மாகாண முதலமைச்சரிடம் தொடர்பு கொண்டு தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அமுல் செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை நான் எடுப்பேன் என்றார்.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம்பெற்றன.

யாழ் மாவட்டத்திற்கு ஒரு கீதம் இயற்றப்படவுள்ளது

யாழ். மாவட்டத்திற்கான கீதம் ஒன்று இயற்றவேண்டிய தேவை உள்ளதால் கவிஞர்களிடமிருந்து தரமான ஆக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. இதற்கு அமைய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கியதாக ஆக்கங்கள் இருக்கவேண்டும்.

கவிதையில். உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் நல்லாட்சியே நமது நோக்கு என்னும் வாசகம் அல்லது கருத்து உள்ளடங்கியதாகவும் வினைத்திறனும் பயனுறுதியும் கொண்ட பொதுச்சேவை பற்றிய கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும் யாழ். மாவட்டத்தின் கடல்வளம், நீர்வளம், விவசாயம், மற்றும் கல்வி, சமயம், கலை, கலாசாரம், பண்பாடு போன்றவற்றை உள்வாங்கியதாகவும் அமைவதுடன் கவிதை 15-20 வரிக்குட்பட்டதாகவும் யாப்பிலக்கண விதிகளுக்கு அமைவாகவும் இயற்றப்படுதல் வேண்டும். கவிதையாக்கங்களை எதிர்வரும் 25ம் திகதிக்கு முன்னர் அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

தங்கம்மா அப்பாக்குட்டி ஞாபகார்த்தமாக மாணவர்களுக்கு நிதியுதவி



சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த தின அறக்கொடை வழங்கல் விழா துர்க்காதேவி தேவஸ்தான மண்டபத்தில் துர்க்கா தேவி தேவஸ்தான தலைவரும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபருமாகிய செஞ்சொற்செல்வன் ஆறு திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

அறக்கொடை நிதியாக யாழ். போதனா வைத்தியசாலை என்பு முறிவு பிரிவுக்கும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கும் சிவத்தமிழ் செல்வி மருத்துவ நிதியத்தில் இருந்து நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டது. சிவத்தமிழ்ச் செல்வி கல்வி நிதியமாக துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரத்தில் கல்வி கற்கும் திறமையின் உச்சமும் வறுமை நிலையிலுமுள்ள மாணவர்களுக்கு கல்வி நிதி வழங்கப்பட்டது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கான நிதியினை வடபிராந்திய சுகாதார திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். துணுக்காய் வலய பாடசாலை மாணவர்களுக்கான நிதியினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெளிற்றன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் 2012ம் ஆண்டிற்கான சிவத்தமிழ் விருது பின்வரும் அறிஞர்களுக்கு வழங்கப்பட்டது. சிற்பி சரவணபவன், சைவத்திரு பொன்னையா செல்லப்பா, சிவபாக்கியம் பாலநாதன், சிற்பகலைஞர் கலாபூசணம் ஏ.வி.ஆனந்தன், புகைப்பட ஊடகவியலாளர் சங்கரகம்பர் கதிரவேலு ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

இந்தியாவும் அமெரிக்காவும் தமிழ் மக்களின் காணிகளை கொள்ளையடிக்கவே வருகின்றன

இந்திய அமெரிக்க ராஜதந்திர குழுக்கள் இலங்கை வருவது தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அல்ல மாறாக அம்மக்களின் காணிகளை கொள்ளையடிப்பதற்காகவேயாகும் என்று இடதுசாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். தமது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திற்கு அழுத்தத்தை இவர்கள் கொடுப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவிக்கையில், நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதோடு அதன் பரிந்துரைகளை நிறைவேற்றவும் விருப்பம் தெரிவித்துள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யவே இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வருகிறார். இதேபோன்று அமெரிக்க ராஜதந்திகளும் இதற்காகவே வருகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தமிழ், வர்த்தக சமூகத்தையும் திருப்திப்படுத்துவதே இவர்களின் நோக்கமாகும்.

ஏனெனில் அவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே தமிழ் மக்களின் காணிகளை கொள்ளையடித்து முதலீடுகளை மேற்கொள்ள முடியும். அத்தோடு இவ்வாறான முதலீடுகளை மேற்கொள்வதை சம்பந்தன் எம்.பி. தலைமையிலான கூட்டமைப்பு எதிர்க்காது. ஏனென்றால் கூட்டமைப்பும் முதலாளித்துவக் கொள்கையை ஆதரிக்கிறது.

எனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு இந்திய அமெரிக்க பிரதிநிதிகளின் வரவால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. மாறாக தமிழ் மக்கள் தமது காணிகளை இழக்கும் நிலைமையே உருவாகும் என்றார்.

தனது ஊதியத்தை அபிவிருத்திக்கு வழங்கிய பிரதேச சபை உறுப்பினர்

பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்த வேதனத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பாத வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தனது வேதனத்தைப் பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துமாறு செயலருக்கு அறிவித்துள்ளார்.

பிரதேச சபைகளின் மாதாந்த கூட்டங்களில் சமூகமளிக்கும் உறுப்பினர்களுக்கு பிரதேச சபையினால் மாதா மாதம் வேதனம் வழங்கப்பட்டு வருகிறது. தவிசாளருக்கு ரூபா.10 ஆயிரம் உபதவிசாளருக்கு ரூபா.7 ஆயிரத்து 500ம் ஏனைய உறுப்பினர்களுக்கு ரூபா 5 ஆயிரமும் வழங்கப்பட்டு வருகின்றது. வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவருமான கே.கௌரிகாந்தன் தனது மாதாந்த வேதனத்தை பிரதேசத்தின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துமாறு செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர், தனக்குரிய மாதாந்த வேதனத்தைப் பெற்று வறுமைப்பட்ட, போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வழங்கி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


'நீதியை, தருமத்தை எடுத்துரைக்கின்ற நாவலர் பரம்பரை உருவாக வேண்டும்'

கொழும்பில் ஆறுதிருமுருகன் உரை

ஒவ்வொரு காலப் பகுதியிலும் சில பெரியார்களை பெரியார்கள் வாழ்ந்த வாழ்க்கையை நாங்கள் மறப்பதுண்டு. மீளவும் சில நேரம் நினைப்பதுண்டு. காலத்திற்கு ஒவ்வக்கூடிய காரியங்களை செய்தவர்கள் இறப்பதில்லை என்று திரு வள்ளுவர் சொன்னது முழுக்க முழுக்க உண்மை. நாவலர் பெருமான் இறந்து இன்றைக்கு எத்தனை ஆண்டுகள்? 150 ஆண்டுகளுக்கு அப்பாலும் நாவலர் பெருமானுக்கு தலைநகர் கொழும்பிலே தக்கதோர் விழாவை எடுத்து நாவலர் பெருமானை மீண்டும் மனதிலே நிலை நிறுத்திய கொழும்பு தமிழ் சங்கத்திற்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

நாவலர் வாழ்ந்த காலத்தில் வாழாதவர்கள் எல்லாம் கூடி இருக்கிறோம். தன்னுடைய வாழ்வை 56 வருடங்களும் 11 மாதங்களும் மட்டும் இந்த உலகத்திலே வாழ்ந்த மனிதன் சாதித்த சாதனை தான் அவரை இன்றைக்கு இந்த அளவில் வைத்து மீளவும் நினைந்து பூஜிப்பதற்கும் போற்றுவதற்கும் காரணம். அன்று வெஸ்லியன் கல்லூரி என்று அழைக்கப்பட்ட யாழ். மத்திய கல்லூரியில் கல்வி கற்ற நாவலரின் திறமையை அறிந்த அதிபர் பேர்சிவல் பாதிரியார் பாடசாலை முடிந்த பின் நாவலரிடம் தமிழ் பாடங்கள் படித்தார். நாவலரும் கற்றுக் கொடுத்தார். இதனால் இருவரிடமும் நல்ல நட்பு இருந்தது.

ஆனால் அங்குள்ள ஆசிரியர்கள் எல்லாம் அங்கு ஞானஸ்நானம் பெற்று ஆசிரியர் தொழிலை தொடர்ந்தனர். நாவலர் மட்டும் ஞானஸ்நானம் பெறாமல் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார். இந்த வாய்ப்பை பெற்ற நாவலரிடம் பாதியார் பைபிளை மொழி பெயர்த்து தர முடியுமா என்று கேட்க அவரும் பைபிளை தமிழில் மொழிபெயர்ப்பு செய்து கொடுத்தார். முற்று முழுதான சைவனாக நெற்றியில் விபூதியுடன் தான் செய்த பிழையின் விளைவின் மாற்றத்தை கண்ணாலேயே நாவலர் காண்கிறார். சிறுபராயத்திலேயே தான் செய்த விளைவின் மாற்றத்தை அவதானித்தார். அந்த மாற்றம் என்னவென்றால் எல்லோருடைய கையிலும் இலவசமாய் பைபிள் கொடுக்கப்பட்டது. நல்லூர் வீதிகளில் உள்ள ஒழுங்கைகளில் இருந்து பிரசாரத்திற்கு வருபவர்கள் நாவலர் மொழி பெயர்த்த பைபிளை வேதாகமம் என்ற பெயரில் கொண்டு வந்தார்கள். "வேதம்" என்ற சைவ சமயத்தவருடைய மூல நூலாக இருந்த நிலை மாறி வேதாகமம் என்ற நூலைக் கொண்டு வருபவர்களைப் பார்த்து வேதக்காரர்கள் என்று ஊரே பெயர் மாற்றத் தொடங்கியது. அந்த துன்பத்தை நாவலர் கண்ணாரக் கண்டார். தான் செய்த காரியத்தால் தன்னுடைய புலமை ஆற்றல், அறிவு வளர்ந்தது.



ஆனால் இதனுடைய தாற்பரியம் என்னவாகப் போகிறது என்று உணர்ந்த நாவலர் பெருமான் முதலில் தன்னுடைய ஆசிரியர் பதவியை துறந்து ஒரு பாடசாலை கட்டினார். தன்னிடம் படிக்க வந்தவர்களை அந்தப் பாடசாலை மாணவர்கள் ஆக்கினார். இருந்தும் அந்த பாடசாலைக்கு மாணவர்களை ஈர்ப்பதற்கும், படிப்பதற்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும் மிகவும் கஷ்டப்பட்டார். இவன் இந்த சேவையை அறிந்த கொழும்பு கொச்சிக் கடையில் பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்கு அருகில் வாழ்ந்த சேர்.பொன் இராமநாதனின் தாய்மாமனான நன்னித்தம்பி முதலியார் இவருக்கு உதவ முன்வந்தார். 40 தடவைகள் 400 ரூபாய் வீதம் அனுப்பி அங்கு வர்த்தக நிலையங்களை சொந்தமாக பெற்று அவற்றை வாடகைக்கு விட்டு அதில் வரும் பணத்தில் பாடசாலைக்கு தேவையானவற்றை செய்யவும் சொந்தமாக ஒரு கடையை நடத்தவும் நாவலருக்கு கடிதம் மூலம் கேட்டுக் கொண்டார். அதன்படி நாவலரும் செயல்பட்டார்.

அவரின் பரிட்சார்த்த முயற்சியின் பயனாய் இன்று எத்தனை இந்துக் கல்லூரிகள் சைவப் பிரகாச வித்தியா சாலைகள் இப்படி சைவ மக்களுக்காக எவ்விதம் பாடுபட்டார் என்பதை அறிய அவர் சரித்திரத்தை படித்துப் பார்க்க வேண்டும். இந்த பாடசாலைகளை நடத்தி வரும் காலப்பகுதியில் நாவலர் நெல்விளையும் பூமி எல்லாம் சென்று விவசாயிகளிடம் பிள்ளைகளின் உணவிற்காக பிடி அரிசி பெற்று வந்தார். இதன் பயனாய் பிடி அரிசி பெறச் சென்ற இடங்களிலும் பாடசாலை அமைக்கும் முயற்சி இடம்பெற்றது. அந்த முயற்சியின் பயனாய் இணுவில் சைவப் பிரகாச வித்தியாசாலை வித்திடப்பட்டது. இதேபோல் புலோலி, மூளாய் போன்ற இடங்களிலும் பாடசாலை உருவானது.

இந்த முயற்சியில் நாவலர் பட்ட கஷ்டங்களுக்கு எல்லை இல்லை. ஒரு சமூக சேவையாளராகவும் சமயச் சீர்திருத்தவாதியாகவும் தமிழிற்காக வாழ்வை அர்ப்பணித்த நாவலரின் வேதனையின் பக்கம் பார்ப்போமானால் மிருகங்களை கோவில்களில் பலி கொடுப்பதையும் எதிர்த்து பிரசாரம் செய்த காலத்தில் பிழையான புராண உரை சொல்பவர்களை கண்டித்தார். கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக கண்டனம் செய்தார். இப்படி உலகத்திற்காக வாழ்ந்த நாவலருக்கு அவ்வூர் மக்கள் பனம்காய் பணியாரத்தை கழுத்திலே கோர்த்து அவர் செல்லும் வீதிகளில் ஊர்வலமாக நின்று நளினம் செய்தனர். அதனை பொருட்படுத்தாத நாவலர் சிவத்துரோகம் செய்ய வேண்டாம் என்று சொல்லி அந்த இடத்தை விட்டு அகன்று தன் கடமையை செய்தார்.

தன் நாக்கை சுட்ட விஸ்வநாதபிள்ளை

சுதுமலையில் சைவப் பாரம்பரியத்தில் பிறந்து சிவபெருமானின் பெயரைக் கொண்ட விஸ்வநாதபிள்ளை உதய தாரகை (ஆங்கிலப் பத்திரிகை) ஊடாக நாவலரை மிக ஏளனமாக எழுதி துன்பப்படுத்தியதோடு சிதம்பரத்தில் கூட நாவலருக்கு எதிரான வேலைகளை செய்தார். இப்படி நாவலரை துன்பப்படுத்திய காலத்திலும் நாவலர் பொறுமை காத்தார். ஆனால் அதே விஸ்வநாத பிள்ளைக்கு கிறிஸ்தவ மிஷனாருடன் ஏற்பட்ட சர்ச்சையை அடுத்து இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பி நாவலரிடம் சென்று ஊசியை விளக்கில் சூடுகாட்டி நாவலரை ஏளனம் செய்த, சுடுவார்த்தை சொன்ன தன் நாக்கை சுட்டு மன்னிப்புக் கேட்டார்.

எனவே ஒருவருடைய வாழ்க்கை பொன்னாடையும் பரிவட்டம் என்று நினைத்து விடாதீர்கள். ஒரு மனிதனுடைய வேதனையும் சோதனையும் அவன் பட்ட துன்பம் தான் இன்றைக்கு எத்தனையோ சைவப் பாடசாலைகள், தமிழ் நூல்கள், அச்சுப் பதிவுகள், உலகம் பூராவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

(தொடரும்.......)

தமிழ்பேசும் கல்விமான்களுக்கு புகழாரம்சூட்டிய இலங்கை அமைச்சர்

அன்று வடபகுதி மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடினார்கள். அதாவது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தவறில்லை. 1948 சுதந்திரத்துக்குப் பின்னர் வடக்கில் அபிவிருத்தி நடைபெறவில்லை. அதன் காரணமாகவே வடக்கு இளைஞர்கள் யுத்தத்துக்கு தள்ளப்பட்டனர். வடக்கு மக்கள் நாட்டைப் பிரிக்க யுத்தத்தில் ஈடுபடவில்லை என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழக அபிவிருத்தி தொடர்பாக இந்தியா மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் உதவியைப் பெறுவது குறித்து அந்நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். இந்நாடுகளின் உதவியுடன் தற்போது நிலவுகின்ற அனைத்து குறைபாடுகளையும் தீர்க்க முடியும் என்றும் அவர் சொன்னார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2009 - 2010 பொது பட்டமளிப்பு வாத்தாறு மூலை வளாக மண்டபத்தில் வேந்தர் பேராசிரியை யோகா இராசநாயகம் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

ஐந்து வருடங்களுக்கு முன்னர் இந்த பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக நீங்கள் அனுமதி பெற்றபோது இந்த பிரதேசத்தில் யுத்தச் சூழ்நிலை காணப்பட்டது. தற்போது பட்டம் பெற்று வெளியேறும் போது அமைதியும் சமாதானமும் நிறைந்த சூழ்நிலையில் பட்டதாரிகளாக மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில் வெளியேறுகிறார்கள்.

இலங்கையில் பல்கலைக்கழகங்கள் கேம்பிறிஜ் மற்றும் ஒக்ஸ்போர்ட் ஆகிய சர்வதேச பல்கலைக்கழகங்களின் மரபை பின்பற்றியே ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பல்கலைக்கழகங்களில் கிழக்குப் பல்கலைக்ழக வேந்தரும் உபவேந்தரும் பட்டம் பெற்றதாக என்னால் அறியமுடிகிறது.

நான் அண்மையில் அமெரிக்காவிலுள்ள 11 பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்தபோது அங்கு நமது நாட்டைச் சேர்ந்த 11 தமிழர்களும் 2 சிங்களவர்களும் பேராசிரியர்களாக பணியாற்றுவதை அறிய முடிந்தது. அதுபோல், ஓரிரு நாட்களுக்கு முன்பு மலேசியாவிலுள்ள 7 பல்கலைக்கழகங்களுக்கு விஜயம் செய்தபோது அங்கும் எமது நாட்டைச் சேர்ந்த பலர் பேராசிரியர்களாகப் பணியாற்றுகின்றார்கள். அவர்களில் 99 சதவீதமானவர்கள் தமிழ் கல்விமான்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நினைவுபடுத்துகின்றேன்.

1870 ஆண்டு காலப்பகுதியில் உங்களைப் போல மாணவனாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட போது ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திகு வர்த்தகத் துறைக்கு 70 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 23 பேர் தமிழ் மாணவர்கள். அவர்கள் தமிழைப் போல் ஆங்கிலமும் சரளமாகப் பேசக்கூடியவர்களாக இருந்தனர். இந்த 23 பேரில் 4 பேர் இப்பொழுது பேராசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இன்னும் 15 பேர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் பதவிகளில் உள்ளனர்.

1965 ஆண்டு வரை மலேசியாவிலுள்ள தபால் நிலையங்களிலும் புகையிரத நிலையங்களிலும் அதிபர்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழர்களே பணியாற்றினார்கள். இப்படி வடக்கு கிழக்கு தமிழர்களே கல்வித் துறையில் முன்னேற்றமடைந்தவர்களாகவும் உயர்ந்த இடத்திலும் இருந்துள்ளார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று எமது நாட்டில் யுத்தம் ஓய்ந்து அமைதியான சூழ்நிலை காணப்படுகிறது. நாட்டில் அன்றைய யுத்தநிலைக்கு காரணம் சிங்களவர் அல்ல. அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உட்பட இந்த தவறைவிட்டவர்கள் நூற்றுக் கணக்கில் உள்ளனர் என்றார்.

அநீதிக்கு எதிரான தேசிய இயக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது

அநீதிக்கு எதிரான தேசிய இயக்கம் என்றதொரு அமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாடும் மக்களும் பாரிய அநீதிக்குள்ளாக் கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தே ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய ஊழியர் சங்கத்தினால் இந்த அமைப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை ஐ.தே.க.வின் மாத்தறை மாவட்ட எம்.பியான மங்கள சமரவீரவை தலைமையாகக் கொண்டமைந்த அக்கட்சியின் உத்தியோகபூர்வ ஊடகங்களாக எக்ஸ் ரேடியோ ஒன்லைன், எக்ஸ் பத்திரிகை மற்றும் www.srilankaxnews.com என்ற இணையத்தளம் ஆகிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன. தேசிய ஊழியர் சங்க கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை மேற்படி நிகழ்வு இடம்பெற்றது. எனினும் இதில் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாசா உள்ளிட்ட குழுவினர் கலந்துகொள்ளவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் நலவேலைத்திட்டங்கள் மற்றும் கட்சியின் மீள் கட்டுமானம் ஆகிய நடவடிக்கைகளில் மக்கள் பிரதிநிதிகள் ஐக்கியமாக செயற்பட வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அழைப்பு விடுக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளாதோர் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மதுவுக்குள் விழுந்து மரணத்தை தழுவிய மதுபானத் தொழிலாளி

உலகப் புகழ் பெற்ற மதுபான வகையை தயாரிக்கும் ஸ்கொட்லாந்திலுள்ள மதுபானத் தொழிற்சாலையொன்றில் பணியாளர் மதுபானத்தை கொண்ட 16 அடி உயரமான தாங்கிக்குள் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். பன்பஷியரில் டப் நகரிலுள்ள கிளென்பிடிச் வடிசாராய தொழிற்சாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து பிரித்தானிய ஊடகங்கள் புதன்கிழமை செய்தி வெளியிட்டுள் என. அத்தொழிற்சாலையின் சிரேஷ்ட பணியாளரான பிரையன் எட்லெஸ் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பிரையன் எட்லெஸ் (46 வயது) தனது மனைவியின் 54 ஆவது பிறந்த தின கொண்டாட்டத்திற்கு மறுநாளே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார். இந்நிலையில், இரு பிள்ளைகளின் தந்தையான பிறையன் எட்லெஸின் மரணம் குறித்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நேர்மையுடனும், விசுவாசத்துடனும், உங்களுக்காக வீடுகள்,
வியாபார நிலையங்கள் வாங்கவும், விற்கவும் உங்கள் கனவுகளை நனவாக்கும்
ஒரு நம்பிக்கையான முகவர் உங்களுக்குத் தேவையா?

உங்கள் நண்பனான என்னை அழையுங்கள்



Century 21

Century 21 innovative Realty Inc. Brokerage
2250 Markham Road, Unit 3, Toronto On M1B 2W4
Tel: 416-298-8383 Fax: 416-298-8303
www.c21innovativerealty.com
Info@c21innovativerealty.com

Arul Sivasubramaniam
Sales Representative
Cell: 416-518-9782
arulendran@rogers.com



Markham / Sheppard
Detached Backsplit 4
BR 4+1 WR 2
$325,000



Kennedy / Park
Detached Bungalow
BR 2+2 WR 1
$329,900



Morningside / Sheppard
Link 2 Storey
BR 3+1 WR 3
$339,800



Sheppard / Neilson
Detached 2 Storey
BR 3+1 WR 2
$339,900



Brimley / McNicoll
Townhouse 2 Storey
BR 3+1 WR 2
$344,900

arulhomes.com
People can find their own homes, mortgage calculations or Land transfer taxes and benifit

Home Inspection free for the Listings call for Details.



Bellamy / Porehester
Detached Bungalow
BR 3+2 WR 2
$359,900



Neilson / McLevin
Detached Back split 5
BR 4, WR 2
$359,900



Markham / 401
Detached Bungalow
BR 3+2, WR 2
$375,000



Guildwood / Kingston
Detached Bungalow
BR 3, WR 1
$385,000



9th Line / Reeves way Blvd
Semi Detached 2 Storey
BR 3, WR 3
$389,900



HWY 7 / Bullock
Link 2 Storey
BR 3, WR 2
$399,000



Steeles / Middlefield
Link 2 Storey
BR 3, WR 2
$409,000



Steeles / Brimley
Link 2 Storey
BR 3+1 WR 3
$419,000



9th Line / HWY 407
Townhouse 2 Storey
BR 3 WR 3
$425,000



Bur Oak / McCown
Townhouse 3 Storey
BR 4 WR 4
$439,900



Kennedy / McCowan
Semi Detached 2 Storey
BR 3 WR 3
$449,000



Markham / Bur Oak
Semi Detached 2 Storey
BR 3+1, WR 4
$459,900



9th Line / 14th Line
Townhouse 2 Storey
BR 3+1, WR 4
$469,900




Kennedy / Bur Oak
Townhouse 3 Storey
BR 4, WR 3
$472,000



Kingston / Eglinton
Condo Town House
BR 3, WR 2
$153,900



Neilson / Ellesmere
Condo Townhouse 2 Storey
BR 3, WR 3
$179,900




Neilson / Tapscott
Condo Townhouse 3 Storey
BR 3, WR 2
$197,000




Neilson / McLevin
Condo Town house
BR 3, WR 2
$209,999




Bayview / John
Condo Townhouse 3 Storey
BR 2+1 WR 2
$321,000



Leslie / John
Condo Townhouse 2 Storey
BR 3 WR 2
$340,000



Bayview / John St.
Condo Townhouse
BR 2+1 WR 2
$379,900



Bayview / John
Condo Townhouse
BR 3 WR 3
$379,900



Don Mills / Steeles
Condo Townhouse 2 Storey
BR 3 WR 3
$418,800



Westney / HWY 2
Detached Side Split 3
BR 3, WR 1
$249,999



River / Pine
Detached 2 Storey
BR 3, WR 2
$274,900



Altona / Strouds
Townhouse 2 Storey
BR 3, WR 2
$281,900



Harwood / Taunton
Detached 2 Storey
BR 4, WR 3
$449,888



Finch / Whites
Detached 2 Storey
BR 3+1, WR 4
$419,900

House For Sale

Hurontario in Mississauga Area .Link House for Sale ,Close to all Amenities (Squire one Mall)
call for details.

For Rent

Markham area close to Middlefield & Elson . Denision & McCowan areas Basements apartments for rent
call for details


DAILY NEWS
2012
FAMILY SKI TRIP
SUMMER GETAWAY
SUNDAY DRIVE
YEAH, IT DOES THAT
ALL-NEW 2012
CR-V
FORMULA Honda
New standard features on all models include: One of the most fuel-efficient vehicles in its class • Heated power side mirrors • Heated front seats • Multi-angle rearview camera • Intelligent Multi-Information Display (i-MID) with SMS feature • Bluetooth wireless phone and audio interface • Easy-fold-down 60/40 split rear seatback
LOWER STARTING PRICE FOR 2012
2012 CR-V LX
LEASE A 2012 CR-V LX FOR
$298 @ 3.99% APR
PER MONTH FOR 48 MONTHS*
$0 SECURITY DEPOSIT
$3,400 DOWN PAYMENT/OAC
அதீசன் (Shan)
2240 Markham Road Scarborough, ON (Markham/Finch) 416.720.1184
TOTALLY REDESIGNED FOR 2012
HONDA
HondaOntario.com
Ontario Honda Dealers
MADE IN CANADA
HONDA

திருமண நாள் - வெள்ளி விழா வாழ்த்து!


(19.01.2012)



தமிழீழம், யாழ். புத்தூரில் பிறப்பெடுத்து, கனடாவில் புலம் பெயர்ந்து,
தேசியத்தலைவரின் சிந்தனையை உயிர் மூச்சாய் கொண்டு தமிழினத்
தொண்டாற்றும், தன்னலமற்ற தன்மானத் தமிழர், எங்கள் உள்ளம் நிறைந்த,
... இணையர்களின் வெள்ளி விழாத் திருமண நாளில், இனிது வாழ்க
பல்லாண்டு! என மனம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.



செல்வரத்தினம் ... குடும்பத்தினர்



தேனிசை செல்லப்பா இளங்கோ



செ.வீரராகவன்



(gtr.com வானொலி)

அன்புள்ளங்கள்
தமிழகம் - தமிழீழம்


க. அறிவழகன் பி.ஏ., பி.எல்.,

இளஞ்செழியன்

சீபன் சிறீதரன்
குடும்பத்தினர், சென்னை

சிறுத்தை புத்து
குடும்பத்தினர், திருநெல்வேலி

தொடர்புக்கு
9994169816, 9941179867, 9444019440



... குடும்பத்தினர்
(Ex.IPKF-Havilthar - தஞ்சாவூர்)

கனடிய நண்பன்

CANADIA NANPAN

ஈழத்துத் திருக்கோவில்கள்



- 455 -

மேலதிக தகவல்களுக்கு :

திருமதி. வசந்தா நடராசன் B.A.,
416 – 332 - 0269

எல்லைக் காளி அம்மன் கோயில்

பறையன்குளம், திருகோணமலை

திருகோணமலை, தமிழரசர்களுடைய ஆட்சிக்குட்பட்ட இராசதானியாக, வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதல் விளங்கியுள்ளது. சோழமன்னனாகிய குளக்கோட்டுமன்னன் தன்னுடைய ஆட்சிக் காலத்திலே, திருகோணமலையைச் சூழவுள்ள கிராமங்களில் மக்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்தி, குளங்களையும் வெட்டுவித்து, ஆலயப் பணிகளை மக்கள் செய்யும் வகையில் பல பணிகளைச் செய்துள்ளான். இவ்வாறு சோழமன்னர்களுடைய ஆட்சிக்காலத்திலே, கந்தளாய், சம்பூர் போன்றவை திருகோணேஸ் வரத்தின் எல்லைக்காணிகளாக விளங்கியுள்ளன. அவ்வாறே எல்லைக் காளிஅம்மன் கோயில் அமைந்த பிரதேசமும், எல்லைக்காணியாக விளங்கியிருக்கவேண்டும் என்ற கர்ணபரம்பரைக் கதை வழக்கிலே காணப்படுகின்றது.

பறையன்குளம், தமிழரசர்களின் ஆட்சிக்குட்பட்ட பெருமையைக் கொண்டதாக விளங்கியமைக்கு, அதன் பெயர்க்காரணமே ஒரு சான்றாகக் காணப்படுகின்றது. அத்தோடு, இப்பிரதேசத்திலே காணப்படுகின்ற எல்லைக் காளியம்மன் கோயிலிலே எழுந்தருளியிருக்கும் சிலையும், தொன்மைமிக்கதான எழிலுடன் காணப்படுகின்றது. காலவோட்டத்தில் இயற்கையின் மாற்றங்கள், இச்சிலையின் அழுத்தத்தில் சிறிது மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தாலும், அம்மன் திருவுருவத்தில் எவ்வித பின்னமும் ஏற்படாமல், காலங்காலமாக அழகுடன் மிளிர்வது ஆச்சரியத்திற்குரியதே.

பறையன்குளம் என்ற இடத்திற்கு முன்னாளில், புலிகண்டி என்ற காரணப்பெயரும் காணப்பட்டுள்ளது. காட்டிற்கு வேடர்கள் வேட்டையாடச் சென்றுள்ளார்கள். அப்பொழுது ஒரு புலியிலே பெண்ணொருவர் அமர்ந்தவாறு செல்வதைக் கண்டுள்ளனர். ஆச்சரியமும், பயமுங்கொண்ட வேடர்கள், அதனைப் பின்தொடர்ந்து சென்றபோது, ஒரு குறிப்பிட்ட இடத்தில் புலி மறைந்துவிட்டது. இக்காரணத் தினால் இவ்விடத்திற்கு புலிகண்டி என்ற பெயர் ஏற்பட்டது. புலிகண்டகுளம் என்ற பெரோடு, ஒரு குளமும் இப்பகுதியில் காணப்படுகின்றது. இவற்றோடு பிடாரி அம்மன் சோலை என்றும் இக்காட்டுப் பிரதேசத்தைக் கூறுகின்றார்கள். இங்குள்ள எல்லைக்காளி அம்மனைக் கருத்திற்கொண்டே இவ்வாறான பெயர்களை மக்கள் வழங்கி வணங்கியிருக்க வேண்டும்.

திருகோணமலையைச் சூழவுள்ள கிராமங்களைச் சூழ, ஆறும் குளமும் காணப்படுவதால் விவசாய பூமியாக விளங்குவதோடு, பசுமைநிறைந்த பிரதேசங்களா கவும் காணப்படுகின்றன. அத்தோடு நீர்நிறை வளத்தோடு இப்பிரதேசங்கள் விளங்குவதால், அடர்ந்த வனங்களும் இங்கு பரந்து காணப்படுகின்றன. குறிப்பாக எல்லைக்காளி அம்மன் கோயில் அமைந்துள்ள பிரதேசத்தில், பறையன்குளம், புலிகண்டகுளம், கொக்கு விழுந்தான் குளம், கற்கட்டன்குளம், இரணைமடுக் குளம், விளாங்குளம், குறிஞ்சாக்குளம், முதலிய பல குளங்கள் காணப்படுகின்றன. இக்காரணங்களினால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இப்பிரதேசத்திலே வாழ்ந்த தமிழ் மக்கள், விவசாயத்தை தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்துள்ளமை புலப்படும்.

சுமார் ஆறு தசாப்தங்களுக்கு முன்பு இப்பிரதேசத்திலே புகழ்பெற்ற காளிகோயில் ஒன்றிருப்பதை, முத்தையாச்சாமியார் என்பவர் அறிந்துகொண்டார். முத்தையாச் சாமியாருடன் கொமரங்கடவையில் வாழ்ந்த அப்புகாமி, தட்டையா என்போரும் சேர்ந்து இக்கோயிலைத் தேடிச் சென்றனர். அடர்ந்த வனங்கள், பயங்கர மிருகங்களின் வாழ்விடங்கள் என காணப்பட்ட சூழலையும் பொருட்படுத்தாது, மூவரும் கோயிலைத் தேடி அலைந்தனர். இறுதியில் இவர்களுடைய விடாமுயற்சிக்குப் பலன் கிடைத்தது. வரலாற்றுப் புகழ்பெற்ற காளியம்மன் சிலை கழுத்துமட்டம்வரை மண்ணில் புதைந்திருப்பதை கண்டுபிடித்தனர்.

மூவரும் தாம் சென்றபாதையில் அடையாளங்களையிட்டு தமதிடத்திற்கு மீண்டுவந்து, உரிய உபகரணங்களை எடுத்துச்சென்று இடத்தைத்தோண்டிப் பார்த்தபொழுது, காளியம்மன் ஒருபாறைமீது அமர்ந்தநிலையில் இருப்பதைக்கண்டுபிடித்தனர். சூழவுள்ள இடத்தில் ஆலயமொன்று இருந்தமைக்குச் சான்றாக, எட்டடி உயரமான கற்தூண்களும், செங்கற்களும் காணப்பட்டன. இவற்றோடு சதுரவடிவான பல தூண்கள் சரிந்தும் நின்றநிலையிலும், சிதைந்த நிலையிலும் காணப்பட்டமை, இவ்விடத்திலே புராதனமான பெரிய ஆலயமொன்றிருந்து அழிந்தமையை பறைசாற்றியது. இச்சூழலிலே வேறும் பல ஆலயங்கள் இருந்து அழிந்தமைக்கான சுவடுகள் இன்றும் காணப்படுகின்றன.

அயரா முயற்சியெடுத்து இவ்வாயத்தைக் கண்டுபிடித்த முத்தையாச்சாமியார், இவ்விடத்தைத் திருத்தி கொத்துப்பந்தரிட்டார். பின்னர் களி மண்ணினா லும், கல்லினாலும் சிறுகோவில்கட்டி வழிபட்டுவந்தார். இவ்விடதிலே கோயில் கட்டப்பட்டபின்னர், சுற்றுச்சூழலில் வாழ்ந்த மக்களிடையே நல்ல மாற்றங்கள் பல ஏற்பட்டன. அத்தோடு முத்தையாச்சாமியாரின் விடாமுயற்சியினா லும் மக்கள் வருகை பெருகியது. ஆரம்பத்தில் மக்கள்வந்து வழிபாடியற்றிச் சென்றனர். நாளடைவில் தைப்பூசத் திருநாளன்று அனைவரும் கூடி, பொங்கலிட்டு காளிஅம்பாளை வணங்கி வழிபாடியற்றும் வழக்கம் ஏற்பட்டது. பின்னாளில் முத்தையாச் சாமியார் இக்கோயில் பொறுப்பை திருகோணமலை இந்துஇளைஞர் மன்றத்திடம் ஒப்படைத்துள்ளார்.

அம்பாள் திருவுருவத்தைக் கண்டுபிடித்த முத்தையாசாமியாருக்கு, காளிஅம்பாள் பல அற்புதங்களைக் காட்டியுள்ளார். இவ்வாலயத்தைச் சுற்றி இடும்பன்மலை, வெள்ளாட்டி மலை, நாச்சியார் மலை, மச்சமலை, அசுவத்மலை, பிள்ளையார்மலை எனப் பல மலைகள் காணப்படுகின்றன. இம்மலைகளுள் மிக விசேடமானதாக இடும்பன்மலை காணப்படுகின்றது. ஞானியரும், யோகிகளும் தவம்செய்த இடம்போன்று, பல குகைகளைக் கொண்டதாக இம்மலை காணப்படுகின்றது. இவ்வாறான பல வரலாற்றுப்பெருமைகளைக் கொண்டதாக, பறையன்குளம் எல்லைக்காளியம்மன் கோயில் விளங்குகின்றது.

000

தொடரும்.....

சமுதாயம்

(52)

- த.சிவபாலு
B.Ed Hons, M.A

பயாசி சுத்த Payasi Sutta 3

கடந்தவாரத் தொடர்:

(தத்துவவியலாளர் பியாசிக்கும் பொத்த தத்துவ வியலாளராக விளங்கிய துறவியாகத் தன்னை மாற்றிக் கொண்ட காசிப இளவரசருக்குமிடையே மறுபிறப்பு என்னும் கொள்கை தொடர்பாக நடந்த உரையாடலின் ஒரு பகுதியை கடந்தவாரம் தந்திருந்தோம். தொடர்ந்து அவர்களிடையே இடம்பெற்ற கருத்து முரண்பாடுகள் பற்றிய விவாதத்தை இங்கே தருகின்றோம்)

வணக்கத்திற்குரிய குமாரனே உங்களால் தரப்பட்ட காரணங்களின்படி நாங்கள் எப்போதோ அவர் தேவலோகத்தில் மூன்று நாட்கள் இருக்கும்போது நாங்கள் இறந்துபோவோம். எப்படியானாலும் அந்த 33 கடவுளரும் மிக நீண்டநாட்களுக்க வாழ்வார்களானால் அவர்கள் மோட்சத்தில் பிறப்பார்கள் என்பதனை நான் நினைக்கவில்லை, அல்லது அந்தக்காலம் வேறு காலமாக இருக்கலாம். அவர்களின் வாழ்க்கை வட்டத்தை அல்லது வாழ்க்கைக் காலத்தை நீங்கள் எப்படி அறிவீர்கள்? எனக் கேட்டார். அதற்கு காசிபரோ "ஆ.. . அன்புக்குரிய இளவரசனே ஒரு மனிதன் பார்வையற்றவனாகப் பிறக்கின்றான் எனக் கற்பனை செய்துபார், அவன் இருள், வெளிச்சம், மற்றும் நீலம் சிவப்பு, மற்றும் சந்திரன் சூரியன் போன்றனவற்றைக் கண்டு அனுபவம் பெற்றிருக்கமாட்டான். இந்த மனிதன் மிக நன்றாகச் சொல்லுவான் "ஒளி மற்றும் இருள் என்பன உண்மையற்றவை, அவை இருக்கமுடியாது, அவை குழந்தையின் கனவுப் பொருட்களாகும்" அல்லது நிறமா? அவை முழுமையாக எண்ணங்கள் அல்லது அறிவின் உருவகப்பாடாக அல்லது விருப்பத்தின் விளைவின் வாய்ப்பாகவும் இருக்கலாம், நான் இவற்றைப் பற்றி அறியவில்லை, எனவே அவை உண்மையிலேயே இருக்கமுடியாதவை." எனவே அவனது எண்ணம் சரியானதா இளவரசனே? என்றார். அதற்கு சுத்த "என்ன? இல்லை. நாங்கள் இருக்கும் இந்த அறையில் வெளிச்சமும் இருளும் வேறுபட்டுக்காணப்படுகின்றது. நிறம் எங்களைச் சுற்றி இருக்கின்றது. அப்படியான மனிதன் சரியானவனாக இருக்கமுடியாது. இளவரசனே நீங்கள் ஒரு கண்தெரியாதவனைப் போன்றவர். ஊனக்கண்களுக்கு நீங்கள் நம்புவது போன்று மற்றய உலகம் காணப்படமாட்டாது. தம்மைப் புடம்போட்டுக் கொண்ட தூய்மையானவர்களின் கண்களுக்கு அவை புலப்படும். அவர்களது கண்கள் சாதாரண கண்களைவிட வலிமைவாய்ந்தவை. அந்தக் கண்களால் அவர்கள் மற்றய உலகத்தில் உள்ள பேய்கள், ஆவிகள், தேவதைகளைக் காணமுயும். அதே போன்று எங்களைப்போன்ற தூயவர்களால் மற்ற உலகத்தைப் பார்க்க முடியும். அதுதான் நாங்கள் எப்படி வேதாளர்களையும் தேவதைகளையும் பற்றி அறிந்து கொள்கின்றோம், அத்தோடு தேவலோகத்தில் யார் வாழ்கின்றார்கள் என்பதனையும் அறிந்துகொள்கின்றோம். இதன்படியே ஒவ்வொரு செயலுக்கும் பலாபலன்கள் உண்டு என்பதனையும் நாம் அறிகின்றோம்" என்றார்.

அதற்கு சுத்த சொன்னார் "நீ என்ன சொன்னாலும் பரவாயில்லை எனதுபார்வை இன்னும் உறுதியாகவே இருக்கின்றது எனதருமை வணக்கத்துக்குரிய குமாரா," இதனைக் கேட்ட கௌசிகர் "ஏன் நீ நம்ப மறுக்கின்றாய்" என்றார்.

"அ. . உங்களைப் போன்ற சிறப்புமிக்க மனிதர்கள் இறப்பின்பின்னர் மிகச் அற்புதமான வாழ்க்கை உண்டு என பூசி மெழுக்கிட்டு கவிதைவடிவிலே மிகப் பெரியளவிலான வாழ்வியல் சொகுசுத்தன்மையினை கூறி அவர்களை இதற்காகக் காத்திருப்பதற்கு வைக்கிறீர்கள். ஆனால், இதனை கவனியுங்கள் குமாரா: எந்த ஒரு தனிமனிதனும் துன்பத்தையோ இறப்பையோ தீர்மானிப்பதில்லை. அவர்கள் எல்லோருமே மிக வசதியான தற்கும் முடியுமானளவிற்கு நீண்ட நாட்கள் வாழவும் நினைக்கின்றார்கள். வானுகலகம் இருக்குமானால் அதனை புனிதர்கள் கண்டுகொள்ளமுடியும், ஏன் அவர்கள் ஒரு கத்தியை எடுத்து அல்லது நஞ்சை அருந்தித் தங்கள் உயிரை முடித்து இந்த உடலிலிருந்து தாவி வானுலகத் திற்குச் செல்லமுடியாது? அவர்களால் முடியாது! அதுதான் தேவதைகளையோ, வேதாளர்களையோ அல்லது கர்மா வினையோ நம்பதாதற்கு இன்னொரு காரணம்" என்றார். இதனைக்கேட்ட கௌசிகர் இதனைக் கேட்டு அதனைச் சற்றுச் சிந்தித்துப்பார்: ஒரு செல்வந்தன் தனது இரண்டு மனைவியர்களுடன் இருந்தான். ஒரு மனைவி கற்பினியாக இருந்தாள், மற்றவளுக்கு பத்து அல்லது பன்னிரண்டு வயதான ஒரு மகன் இருந்தான். இந்த செல்வந்தனின் வாரிசாகவேண்டியவன் மகன்தான். இந்த தந்தை இறந்துவிட்டார், மகன் தனது சொத்துக்கு உரிமை கோரினான். ஆனால் அந்த கற்பிணித்தாயார் "எனது மகன் பிறக்கும் வரையும் பொறு! அந்தக் குழந்தை ஒரு ஆணாக இருந்தால் அந்தச் சொத்தை இரண்டாகப் பிரித்து ஒருபகுதியைப் பெற்றுக்கொள்ளும், ஆனால் அந்தப் பிள்ளை பெண்ணாக இருந்தால் அந்தப் பிள்ளை உனது பணியாளாக வரும்" அந்தச் சொத்தில் அரைப்பங்கைத் தனக்கும் தனது பிள்ளைக்கும் பெற்றுக்கொள்ள விருப்பினாள். அவள் சொத்தில் உரிமை கோருவதற்காக ஒரு கத்தியை எடுத்துத் தனது வயிற்றைக் கிழித்து குழந்தையை வெளியே எடுத்தால் அவளும் இறந்து குழந்தையும் இறந்துவிடும். அதேபோன்று ஒரு மனிதன் தனது வாழ்வை நல்ல எதிர்காலம் கிடைக்கும் என எண்ணிச் செய்தால் அவன் தனது வாழ்வை அழிப்பதோடு மட்டுமல்லாது அவனது எதிர்காலத்தையும் அழிக்கின்றான். உணவினை அது அவிய முந்தி நீங்கள் உண்ணமுடியாது. அப்படி அரைகுறையாக அவியாத உணவினால் உங்கள் பல்லையும், வயிற்றையும் பழுதாக்கவேண்டிவரும். புனிதர்கள் வளர்ச்சியை உருவாக்குவது நல்ல வாழ்க்கைக்கும் நீண்டகாலம் வாழ்வதற்குமே. இப்பொழுது நீங்கள் தவறு என்பதனை உணர்ந்து ஏற்றுக்கொள்வீர்கள் என்றார்.


அதற்கு பயாசி "இல்லை நீங்கள் சொன்னது அவர்களை மாற்றவில்லை, நான் இன்னும் எனது பார்வையில் நிலையாகவே உள்ளேன்" என்றார். அதனைக் கேட்ட கௌசிகர் ஓ! அப்படியானால் இன்னும் வேறு காரணம் உண்டா? எனக்கேட்டார்.

ஆம் ஆம் இன்னும் பல உள. என்ற பயாசி: " வணக்ககத்துக்குரிய அரசனே, ஒருமுறை ஒரு மனிதன் என்னிடம் கொண்டுவரப்பட்டான், ஒரு கள்வன், அவன் களவெடுக்கும்போது பிடிபட்டவன். அவனைத் தண்டிக்கவேண்டி வந்தது. தண்டனையாக ஒரு பெரிய பானையில் இட்டு அதனை பச்சைக் களிமண்ணால் அடைத்து நெருப்பிலிட்டு எரியூட்டினார்கள். எரிந்து முடிந்ததும் அந்த மூடிய பானையைத் திறந்தபோது அதிலிருந்து ஆவி, அவனது உயிர், அவனது உள்ளிருப்பு அல்லது வாசனை வெளியேறும் எனப்பார்த்தோம் ஆனால் அப்படி எதுவுமே வெளியேறவில்லை. அதனால்தான் நான் மறு உலகம் இருப்பதை நம்பவில்லை" என்றார்.

அதற்கு கௌசிகர், "நீங்கள் சற்று உறங்கிக் கொண்டிருக்கும்போது, அல்லது தூங்கிக் கொண்டிருக்கும் போது, தடாகங்கள், அழகான நந்தவனங்கள், அல்லது முகில்களிடையே உள்ள மாட மாளிகைகள் போன்ற

(A11ம் பக்கம் பார்க்க)

நடுக்கமடையாத 'நக்கீரன்' கோபால்



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மிக பிரதான எதிரி நக்கீரன் கோபால். திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இணைய முடியாத இரு துருவங்கள். கருணாநிதியும் ஜெயலலிதாவும் மாறி மாறி அறிக்கை விடுகிறார்கள். ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுகிறார்கள். இருவருக்கும் விசுவாசமானவர்கள் அதனை நம்புகின்றனர். ஜெயலலிதாவின் பரம எதிரி கருணாநிதி. ஆனால் வெளியே தெரியாத இன்னொரு பரம எதிரி நக்கீரன் கோபால்.

தமிழகத்தின் அரசியல் அசிங்கங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் சில சஞ்சிகைகள் உள்ளன. அவற்றில் முதன்மையானது நக்கீரன். நக்கீரனில் வெளிவரும் கட்டுரைகளில் அதிகமானவை மக்களிடம் மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தின. ஜெயலலிதாவைப் பற்றி பல தகவல்களை நக்கீரன் வெளியிட்டதால் கடந்தகாலங்களில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது பல நெருக்குதல்களைச் சந்தித்தது நக்கீரன். நக்கீரன் அலுவலகம் மீது பலமுறை தாக்கு தல் நடத்தப்பட்டன. நக்கீரன் ஊழியர்கள் மீது குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. நக்கீரன் ஊழியர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த அச்சுறுத்தல்களினால் நக்கீரன் கோபால் கலங்கிப் போய்விடவில்லை. நக்கீரனின் மிக முக்கிய குறியாக ஜெயலலிதா இனங்காணப்பட்டார். மாட்டுக் கறி சாப்பிடும் மாமி நான் என்ற கட்டுரை அண்ணா திராவிட முன்னேற்றத் தொண்டர்களை ஆத்திரமடையச் செய்தது. நக்கீரன் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் தாக்குதல் நடைபெற்ற போது பொலிஸார் வழமை போல கையைக் கட்டி கொண்டு நின்றனர். வன்செயல்களைத் தடுக்க வேண்டிய பொலிஸார் ஆளும் கட்சியின் நடவடிக்கையை பார்த்துக் கொண்டிருக்கும் நிலை தொடர்கிறது. ஆட்சி மாறினாலும் இப்படிப்பட்ட காட்சி மாறவில்லை. நக்கீரன் அலுவலகம் மீது இரண்டாம் நாளும் தாக்குதல் நடத்தப்பட்டது. முதல் நாள் தாக்குதல் நடைபெற்ற போது இரண்டாம் நாள் பொலிஸார் தயாராக இருந்திருக்க வேண்டும். இரண்டாம் நாளும் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்பே பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

முதல்வர் ஜெயலலிதாவைப் பற்றி அவதூறாக கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்ததால் அதனைச் சட்டப்படி சந்தித்திருக்க வேண்டும். உணர்ச்சி வசப்பட்ட தொண்டர்கள் தாக்குதல் நடத்தியிருந்தால் வன்செயல்களை கைவிடுமாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனது தொண்டர்களுக்கு அறிவுறுத்தி இருக்க வேண்டும். முதல்வர் ஜெயலலிதாவை பற்றிய அவதூறுக் கட்டுரை பிரசுரமானதால் சினமடைந்த அரச இயந்திரம் நக்கீரன் அலுவலகத்துக்கான நீர், மின் விநியோகங்களை இடை நிறுத்தியது. நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நீரும். மின்சாரம் விநியோகிக்கபடுகின்றன. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீது நக்கீரன் கோபாலும் நக்கீரன் கோபால் மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகர்களும் பொலிஸில் புகார் செய்துள்ளனர். நக்கீரன் அலுவலகம் மீது தாக்குதல் நடத்திய போது கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படுமா என்ற கேள்விக்கு தமிழக அரசுதான் பதில் கூற வேண்டும்.

மதுரை தினகரன் அலுவலகம் மீது அழகிரியின் விசுவாசிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் மூன்று உயிர்கள் பலியாகின. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அந்த வழக்கு அமுங்கிப் போனது. நக்கீரன் மீதான தாக்குதல் வழக்கும் அதே நிலை தான் இன்று ஏற்படும். முன்னாள் அமைச்சரும் மாநில அமைப்புச் செயலாளராகவும் இருந்த தளவாய் சுந்தரம் திருநெல்வேலி புறநகர் தெற்கு மாவட்ட செயலாளராக இருந்த பி.ஜி. ராஜேந்திரம், முன்னாள் அமைச்சரும் திருநெல்வேலி மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய நயினார் ராஜேந்திரன் ஆகியோர் கட்சிப் பொறுப்பில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். கட்சிப் பொறுப்பில் இருந்து இவர்கள் நீக்கப்பட்டதற்கான இந்த அறிக்கையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளராக முதல்வர் ஜெயலலிதா உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

சசிகலாவும் அவரது பரிவாரங்களும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர் அவரது ஆதரவாளர்கள் என இனங்காணப்பட்டு ஒவ்வொருவராக வெளியேற்றப்படுகின்றனர். சசிகலாவும் அவரது கூட்டம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஆடிய ஆட்டம் அடாவடிகளும் ஜெயலலிதாவுக்கு ஏற்கனவே தெரிந்தவைதான். அவர்களைக் கட்டிப் போடும் துணிவு ஜெயலலிதாவுக்கு வரவில்லை. தனது தலைக்கு ஆபத்து இல்லாத நிலையில் அதனை மௌனமாக அங்கீகரித்தார் ஜெயலலிதா. தனது தலைக்கு ஆபத்து வரப்போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து விழிப்படைந்துள்ளார். கழகத்துக்கு விசுவாசமற்றவர்கள் என்ற முத்திரையுடன் சசிகலா குழுவினர் வெளியேற்றப்பட்டனர்.

சசிகலா குழுவினர் அண்ணா திராவிட முன்னேற்றக கழகத்தில் இருந் வெளியேற்றப்பட்டதனால் முக்குலத்தோரின் வாக்குகளை ஜெயலலிதா இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அவரது எதிரிகள் கருதுகிறார்கள். எம்.ஜி.ஆர். என்ற மூன்றெழுத்து மந்திரத்தின் மீது அதி தீவிரபற்றுக் கொண்ட முக்குலத்தோர் சசிகலாவின் வெளியேற்றத்தினால் மனமுடைந்து போய்விடமாட்டார்கள்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் எம்.ஜி.ஆரின் மீது மக்கள் மதிப்பும் விசுவாசம் தொண்டர்கள். எம். ஜி.ஆருக்கு அடுத்து ஜெயலலிதாவின் பெயரே அவர்களின் மனதில் பதிந்துள்ளது. ஆகையினால் சசிகலா குழுவினர் வெளியேற்றத்தினால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வாக்கு வங்கியில் எதுவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

தூணாய் நின்ற தமிழன் துரும்பானதற்கான காரணங்கள்

அனலை நிதிஸ் ச. குமாரன்

ஒருவர் மீது பழியைப் போட்டுவிட்டு தப்பிக்கும் தந்திரம் ஒட்டுமொத்த இனத்தையே அழித்துவிடும். பாரம்பரியமிகு தமிழினத்திற்கு இக்கேடு நிகழ்ந்துவிடக்கூடாதென்கிற நோக்கில் சமீபத்தில் ஒரு கட்டுரையை தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் அவர்கள் எழுதியிருந்தார். அக்கட்டுரையின் தலைப்பு என்னவென்றால், "தூணாக நின்ற தமிழன் துரும்பானது ஏன்?" இக்கட்டுரையை ஒவ்வொரு தமிழனும் வாசித்து சிந்தித்து செயற்படுவது இக்காலத்தின் இன்றியமையாத கடமையாகும்.

நெடுமாறன் அவர்களின் கட்டுரையை சற்று அலசுவதற்காகவே இக்கட்டுரை எழுதுவதற்கான காரணம். பழ நெடுமாறன் அவர்கள் தனது கட்டுரையில் வட இந்திய ஆதிக்க சக்திகளையும், தற்காலத்து தமிழக அரசியல்வாதிகளையும் விமர்சித்து எழுதியுள்ளார். ஒவ்வொரு செய்கைக்கும் எதிர்வினை உண்டு. ஒருவரின் ஆக்கத்தை விமர்சிப்பதன் மூலமாக நல்லதொரு சமூகத்தை உருவாக்கலாம்.

தனது கட்டுரையில் நெடுமாறன் அவர்கள் எழுதியுள்ளதாவது: "இந்திய மக்கள் தொகையில் ஏறத்தாழ பதினாறில் ஒரு பங்கு தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்குரிய அங்கீகாரம் என்பது இந்திய அரசியலில் அளிக்கப்படவில்லை. இந்திய அரசும் சரி, அகில இந்திய அரசியல் கட்சிகளும் சரி தமிழர்களின் தலையாய பிரச்னைகளைக் குறித்துக் கொஞ்சமும் கவலைப்படுவதில்லை."

நாம் சோம்பேறிகளாக இருக்கும்போது மற்றவன் எம்மை சீண்டிப் பார்த்துக்கொண்டேதான் இருப்பான். அந்த வகையில், தமிழ் அரசியல்வாதிகளே தமது சுகபோக வாழ்விற்காக தமது குரல்களை எழுப்பாமல் இருக்கும்போது எப்படி நாம் இந்திய மத்திய அரசையோ அல்லது அகில இந்திய அரசியல் கட்சிகளையோ ஆதரவளிக்கும்படி கேட்க முடியும்?"

வெறும் அரசியல்வாதிகளை மட்டும் குற்றம் சொல்லிவிட்டு ஒன்றும் தெரியாத பாப்பாக்கள் மாதிரி தமிழ் மக்கள் இருந்தால் எப்படி நீதியைப் பெற முடியும். நீதியைப் பெற வேண்டுமாயின் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஓரணியில் திரண்டால் அனைத்து அரசியல்வாதிகளும் எமக்குப் பின் வருவார்கள். அரசியல்வாதிகளுக்கு வேண்டியதெல்லாம் மக்களின் வாக்கே. மக்கள் தெளிவாக ஓரணியில் திரண்டால் அரசியல்வாதிகள் எமக்கு ஆதரவாக இருப்பார்கள். மக்கள் சார்பு தன்னலமற்ற அமைப்புக்கள் மற்றும் தமிழ் மக்களின் உயர்வில் அக்கறை கொண்ட அனைத்து இயக்கங்களும் ஒன்றிணைந்து மக்களை ஓரணியில் திரட்டி போராடினால் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

மற்றவர்களை வாழவைத்தே பழக்கப்பட்ட தமிழினம்

சீனத்து மக்கள் தமக்குள் அதீத ஒன்றுமையைக் கடைப்பிடிப்பவர்கள். தமது இனத்தவர் ஒருவருக்கு தீங்கு விளைந்தால் ஒட்டுமொத்த சீனத்தவர்களும் ஓரணியில் திரண்டு விடுவார்கள். தமிழர்கள் அப்படியல்ல. இன்னொரு தமிழன் அடிவாங்கும் போது மற்றவர்களுடன் இணைந்து தானும் அடித்தே பழக்கப்பட்டுவிட்டான் தமிழன் என்பதே உண்மை. தமிழீழ விடுதலைப் போர் ஆரம்பித்த பின்னர்தான் ஓரளவிற்கு தமிழர்களுக்குள் ஒன்றுமை வந்தது. இவ் ஒற்றுமை என்பது பரிதாபத்தினால் வந்ததே. பரிதாபத்தினால் வந்த ஒற்றுமை காலப்போக்கில் இல்லாமல் போய்விடும்.

தமிழகத் தமிழர்கள் சினிமா மோகத்தில் மூழ்கி இருக்கிறார்கள் என்பதே உண்மை. குடிசையில் வாழ்ந்தாலும், ஒரு வேளைக்கு சாப்பாடு இல்லாமல் இருந்தாலும் தொலைக்காட்சிக்கு முன் உட்கார்ந்து நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் வெள்ளித்திரை நிகழ்ச்சிகளைப் பார்த்து ஆனந்தம் அடையும் நிலையே தமிழகத்தில் பட்டிதொட்டி அனைத்தும் அன்றாட நிகழ்வுகளாக இருக்கிறது. ஏழு கோடித் தமிழர்களில் எத்தனை பேர் செய்திகளைப் பார்க்கிறார்கள் என்கிற கேள்வி எழும்போது, விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே செய்திகளை பார்க்கிறார்கள் என்கிற பதில் வருகிறது. செய்தி நேரம் வந்துவிட்டால் தமக்கு இடைவேளை வந்துவிட்டதாக எண்ணி தமது அன்றாட வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள் பலர். இதற்கு ஒரு முடிவுகட்ட தமிழ் மக்கள் மீது கரிசனை கொண்ட தலைவர்கள் யாராவது முன்வருகிறார்களா என்று கேட்டால் இல்லை என்று தான் பதில் வருகிறது.

மக்களை வழிநடத்த வேண்டிய அரசியல்வாதிகளே தொலைக்காட்சி நிறுவனங்களை நடத்துவதென்பது வெட்கக்கேடான இன்னொரு விடயம். கேட்டால் தமது கட்சிக் கொள்கையை மக்கள் அறியும் வண்ணம் செய்யவே தொலைக்காட்சிகளை ஆரம்பிப்பதாக கூறுகிறார்கள் குறித்த அரசியல்வாதிகள். குறித்த தொலைக்காட்சிகளில் தமிழரின் கலாச்சாரத்திற்கு எதிரான நிகழ்ச்சிகளை பல மணித்தியாலங்களாக ஒளிபரப்படுகிறது. இதனை யாராலும் மறுக்க முடியுமா என்று கேட்டால் இல்லை என்றுதான் பதில் வருகிறது.

பழ நெடுமாறன் தனது கட்டுரையில் எழுதியுள்ளதாவது, "தமிழ்நாட்டின் அண்டை மாநிலங்கள் தமிழகத்திலிருந்து உணவுப்பொருள்கள், துணி, சிமெண்ட், மின்சாரம் போன்ற பலவற்றை எவ்விதமான தங்குதடையுமில்லாமல் பெற்றுக்கொள்கின்றன. இயற்கையிலேயே தண்ணீர்ப் பற்றாக்குறையான தமிழகத்துக்குத் தங்களிடம் மிகையாக உள்ள தண்ணீரைக்கூடத் தர அவர்களுக்கு மனமில்லை. பிடிவாதமாக மறுக்கின்றன."

நெடுமாறன் அவர்களுக்குத் தெரியாத பல விடயங்கள் இருக்க முடியாது. இந்திய அரசியலில் விதை விதைத்து பழம் சாப்பிட்டவர்தான் அவர். ஆகையினால், இவருடைய ஆதங்கங்களுக்கு காரணம் உண்டு. யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் பல தமிழக தொழில் நிறுவனங்கள் இருக்கிறதென்று நெடுமாறன் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தமிழக மக்கள் இன்றும் தமது மாநிலத்திலேயே அடிமைகளாகத்தான் வாழ்கிறார்கள் என்பதனை யாராலும் மறுக்க முடியுமா?

யூதர்களின் கட்டுப்பாட்டின் கீழ்த்தான் பல நிறுவனங்கள் மேற்கத்தைய நாடுகளில் இருக்கின்றன. அதன் காரணத்தினால் பல உலக நாடுகள் யூதர்களைப் பகைக்க விரும்பவில்லை. சிறிய நாடான இஸ்ரேல் பாலஸ்தீனத்திற்கு எதிராக பல காலங்களாக போரைச் செய்து வருகிறது. பாலஸ்தீனர்களின் தாயகப் பூமியை அபகரிக்கும் நடவடிக்கைகளை உலக நாடுகள் அறிந்தும் யூதர்களைப் பகைக்கக்கூடாது என்கிற காரணத்தினால் இஸ்ரேலுக்கு ஆதரவாக குரல் கொடுக்கிறார்கள். அதைப்போலத்தான் யாரின் கையில் அதிகாரங்கள் இருக்கிறதோ அவர்கள் செய்யும் ஒவ்வொரு விடயத்தையும் கண்டும் காணாமல் இருந்தால்த்தான் தமிழகத் தமிழர்கள் வாழலாமென்கிற நிலையே இன்று தமிழகத்தில் நிலவுகிறது.

தமிழகத்திலிருந்து உணவுப்பொருள்கள், துணி, சிமெண்ட், மின்சாரம் போன்ற பலவற்றை எவ்விதமான தங்குதடையுமில்லாமல் அண்டை மாநிலங்களுக்கு செல்வதை தமிழக மக்கள் தடுக்க முடியாது. ஆதிக்கத்தை தம் கையில் வைத்துள்ளவர்கள் இயற்கையாகக் கிடைக்கும் தண்ணீரைக் கூட தடை செய்யலாம்.

அண்டை மாநில மக்களே முன் நின்று தடுக்கும் நிலை வந்ததற்கு காரணம் குறித்த மாநிலங்களில் இயங்கும் வல்லாதிக்கம் படைத்த நபர்களே. தமிழகம் சொல்வதைக் கேட்க வேண்டிய அவசியம் மத்திய அரசிற்கு இல்லை. கேரளம் என்ன சொல்கிறதோ அதனை உடனேயே அமுல்ப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் மத்திய அரசு இருக்கிறது. மலையாளிகளின் ஆதிக்கம் இந்திய நடுவன் அரசில் மித மிஞ்சிப்போய் இருக்கிறது

(27ம் பக்கம் பார்க்க)

கலாநிதி விக்கிரமபாகு கூறுகின்றார்:

உரிமைக்காக போராடும் தகைமை தமிழர்களுக்கு உண்டு



நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை முழுமைபெற்ற அறிக்கை என ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் இந்த அறிக்கை ஏற்ககக்கூடிய விதத்தில் அமைந்திருக்கவும் இல்லை. தமிழ் அமைப்புகள் எதுவும் இந்த ஆணைக்குவிற்கு முழுமையான பங்களிப்பை வழங்குவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு இந்த அறிக்கைக்குப் பெறப்படவில்லை. அவசரம் அவசரமாக மேற்கொள்ளப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளால் மக்கள் சுதந்திரமாகச் சாட்சியம் அளிக்கும் சூழ்நிலை இல்லாத நிலையே இருந்தது. இதைவிட பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரித்த நிலையும் காணப்பட்டது.

எனவே, மக்கள் சுதந்திரமாக சென்று தமது கருத்துகளை கூறுவதற்குய ஒழுங்குகள் எதனையும் அரசாங்கம் செய்யவில்லை. என்றே கூறவேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைவெளிவந்திருக்கும் நிலையில், சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்புகள் இவ் அறிக்கை தொடர்பாக எதிர்மாறானதாகவே காணப்படுகின்றது. சர்வதேச சமூகம் முழுமையான பிரதிபலிப்பை இந்த அறிக்கை தொடர்பாக வெளியிடவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழுவினால் வெளியிடப் பட்டிருக்கும் இந்த அறிக்கையில் சில உண்மைகள் வெளிவந்துள்ளன. மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசாங்கம் பல விடயங்களை முன்னெடுக்க வேண்டும் என ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. அரசாங்கம் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கூறப்பட்டிருப்பதுடன் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. யார் இந்த குற்றங்களுக்கு பொறுப்பு எனக் கூறப்படாவிட்டாலும் சில அதிகாரிகள் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

மீள் குடியேற்றங்கள் உரிய முறையில் நடைபெறவில்லை என்றும், யுத்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்ற நடவடிக்கைகள் உரியமுறையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் ஆணைக்குழு குற்றங்களை முன்வைத்து உள்ளது. இதேநேரம், இந்த நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவாக அதிகாரப் பகிர்வின் அவசியம் பற்றியும் ஆணைக்குழு அறிக்கையில் கருத்துகள் காணப்படுகின்றன. அதிகாரப்பகிர்வின் அவசியம் பற்றி கூறப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இன்று அரசியல் சாசனத்தில் உள்ள அதிகாரமே வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது.

பொலிஸ், காணி அதிகாரங்கள் தேவை என்பதை நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ வலியுறுத்தப்பட்டுள்ளது. இன்று அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை ஏற்றுள்ளது. மேற்படி அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்ததுடன், தாம் அதை நிறைவேற்றப் போவதாகவும் சூழ் உரைத்துள்ளனர். வெளிநாட்டு விசாரணைகள் எதுவும் தேவையில்லை உள்நாட்டு செயற்பாடுகள் மூலம் சகலதும் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இவை ஒருபுறமிருக்க பேரினவாதப் பக்கம் இருந்து அரசாங்கத்திற்குக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன. அரசாங்கம் கண்டித்தனமாக பிழையை விட்டுள்ளது என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழுவானது காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவை என வலியுறுத்தி இருப்பதால் ஆணைக்குழுவானது தனது எல்லையைத் தாண்டிச் சென்றுள்ளது என பேரினவாத முகாமின் பிரதான தலையாகக் காணப்படும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே, தற்போது அரசாங்கம் இரட்டை வேடம் பூண்டு செயற்படுகின்றது என்றே கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஒருபுறத்தில் சர்வதேசத்திற்கு காட்ட நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை முதன்மைப்படுத் தப்படுகிறது. மறுபுறத்தில் அரசாங்கத்தின் பிரதான அமைச்சர்கள் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு எதிராக கடுமையான விமர்சனத்தை முன்வைக்கின்றார்கள். ஏற்கனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தமிழ் மக்கள் முற்று முழுதாக நிராகரித்த நிலை காணப்படுகின்றது. வெளிநாட்டில் உள்ள தமிழ் அமைப்புகள் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கை தொடர்பாக காறி உமிழும் நிலைக்கு சென்றிருந்தன. மறுபுறத்தில் இலங்கையின் பேரினவாதத் தளத்தில் இருந்தும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் வெளிவந்துள்ளன.

எனவே, எம்மைப் பொறுத்த வரையில் நல்லிணக்க ஆணைக்குழு வெளிப்படுத்தியிருக்கும் உண்மைகளை நாம் வலியுறுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவான போது இலங்கையில் இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்திய ஆதிக்கம் ஏற்பட்டுள்ளது என்ற நிலை காணப்பட்டாலும் நீண்ட காலமாக இருந்து வந்த தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அது தீர்வை உள்ளடக்கி இருந்ததால் நாம் அதை பாதுகாக்கப் போராடினோம். இதற்காக 26 போராளிகளை நாம் களப்பலி கொடுத்துள்ளோம். மேற்படி ஒப்பந்தத்தின் ஊடாக உருவானதே 13ஆவது அரசியலமைப்பு திருத்தமாகும்.

அதனை நடைமுறைப்படுத்துமாறே நாம் போராடி வந்தோம். எனவே, இன்று தமிழ் மக்களுக்கு வழங்கப்படப் போகின்ற உரிமைகளுக்கு எதிராக கிளம்பும் பேரினவாத செயற்பாடுகளை முறியடிக்க நாம் தயாராக இருக்கவேண்டும். பேரினவாதம் இவை தொடர்பாக எடுக்கும் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் எதிராக நாம் மீண்டும், மீண்டும் அணிவகுத்து போராடத் தயாராக வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிய உண்மையான தீர்வு அவர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று அவர்களின் தாயகத்தை அங்கீகரித்து அதிகாரங்கள் உள்ளடங்கிய அதிகாரப் பகிர்வின் மூலமே தீர்வைக் காணமுடியும். அத்தகைய நிலை ஏற்படும்போதே தமிழ் மக்கள் திருப்தியுறுவார்கள். அமைதி அடைவார்கள்.

எனவே தமிழ் மக்கள் தமக்கு எத்தகைய உரிமைகள் வேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்தும் உரிமை அவர்களுக்கு உண்டு. அது கிடைக்கும்வரை தொடர்ந்தும் அவர்கள் போராடும் தகைமை அவர்களுக்கு உண்டு. நாம் தமிழ் மக்களுக்காக வழங்க முன்வரும் உரிமைகளை பாதுகாக்க பேரினவாத சக்திகளுக்கு எதிராக உறுதியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

சனிப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?



கலாநிதி துன்னாலையூர்
ராம் தேவலோகேஸ்வரக்குருக்கள்
சாரதாபீடம் ஜோதிடம், கொழும்பு.
(009411) 2554328, 0777915685

மீன ராசி

(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)



மிடுக்கும் அதிகாரமும், துணிவான செயற்பாடும் கொண்ட மீன ராசி அன்பர்களே! எடுக்கின்ற விடயங்களில் உங்களின் முதன்மை செயற்பாடு இருக்கவேண்டும் என்கின்ற எண்ணமும், அதற்கு ஏற்ப செயற்பாடு காரியத்திறனும் படைத்தவர்கள் நீங்கள். உங்களின் ஒவ்வொரு விடயமும், வெளிப்படையான செயற்பாடாகவே இருக்கும். அதிகாரத் தொனியோடு உங்களின் காரியங்களை செயல்படுத்தி கொள்வீர்கள். ஆனால் உங்களுக்குள்ளே ஒரு நேர்மை நிறைந்திருக்கும். நியாயமான செயற்பாடுகளுக்காக நீங்கள் போராடிக் கொள்வீர்கள். குடும்ப நிலையிலும் சரி சமூக நிலையிலும் சரி சற்றுப் பிரபல்யமாக இருக்கின்ற நிலை உங்களுக்கு இருக்கும். எதையும் சமாளிக்கின்ற ஆற்றல் அதிகமாகவே அமைந்திருக்கும். உங்களுக்கு அமைகின்ற சனிப்பெயர்ச்சியானது அட்டமஸ்தானமாகிய 2ம் இடம் அமைகின்றது. எடுக்கின்ற முயற்சிகளிலே நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் மனச்சஞ்சல நிலைகள் ஏற்பட்டு மறையும் நிலை இருக்கும். பணவரவு மத்திமமாக அமைகின்ற நிலை இருக்கும். தேவையற்ற வீண் பிரச்சினைகளில் தலையீடுகள் அமையும் பலன் இருக்கும். வாக்கு வாதங்களில் ஈடுபாடு கொள்வதை தவிர்த்துக் கொள்ளுங்கள். தேவையற்ற அவமானம் மனநிலையில் சஞ்சலம், உறவினர் நண்பர்களுடன் கருத்து வேறுபாடு போன்ற பலன்கள் அமையும் நிலை இருக்கும். எந்த விடயத்திலும் பொறுமையுடன் செயற்படுவது மிகவும் நல்லது. பெண்களுக்கு எதிர்பார்ப்புகளில் ஏமாற்ற நிலைகள் அமையும். மாணவர்கள் கல்வி நிலையில் நிதானத்துடன் செயற்பட வேண்டும். கடன் பிரச்சினைகளில் சிக்கல் நிலைகள் ஏற்படும். புதிய விடயங்களில் எதிர்பார்க்கின்ற நன்மைகள் பெறமுடியாது. உங்களின் ராசிநாத தெய்வம் தெட்சணாமூர்த்தி வழிபாட்டுடன் சனீஸ்வரனையும் எள் பொட்டலம் எரித்து வழிபட்டு வரவும். தேவையற்ற விடயங்களில் மூக்கு நுழைக்காமல் நீங்கள் உண்டு உங்கள் பாடு உண்டு என அமைதியாக இருப்பதே உங்களுக் சாலச்சிறந்தது.

சென்னை விமான நிலையத்தில் திருடிய இலங்கையர் ரகுராஜ்

சென்னை விமான நிலையத்தில் அமெரிக்கா செல்வதற்காக சென்ற அம்பத்தூரைச் சேர்ந்த எஞ்ஜினியரிடம் திருடிய இலங்கையரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அம்பத்தூரைச் சேர்ந்த வெட்கட்ராமன் என்பவர் அமெரிக்காவில் சொப்ட்வெயார் எஞ்ஜினியராக பணியாற்றி வருகிறார். விடுமுறைக்கு அமெரிக்கா செல்வதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

அவரிடம் அதிகாரிகள் சோதனை நடத்தினர். பின்னர் அவர் டுபாய் விமானத்தில் ஏற கைப்பையுடன் தயாராக நின்று கொண்டிருந்தார். சில நிமிடங்கள் கழித்து கைப்பையை திறந்து பார்த்தார். அதிலிருந்து ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள டொலர்கள் திருடப்பட்டிருந்தது. இதனையடுத்து இது குறித்து சென்னை விமான நிலைய அதிகாரிகளிடம் அவர் புகார் செய்தார். இதைத் தொடர்ந்து அதிகாரிகள் மற்றும் பொலிஸார் அங்குள்ள ரகசிய கேமராவில் பதிவான காட்சிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது வெங்கட்ராமன் அருகில் நின்று கொண்டிருந்த இன்னொரு பயணி கைப்பையை திறந்து பணம் திருடுவது தெரியவந்தது.

அவரிடம் நடத்திய விசாரணையில் அவர் இலங்கையைச் சேர்ந்த ரகுராஜ் எனப்து தெரியவந்தது. ரகுராஜிடம் இருந்து பொலிஸார் பணத்தை மீட்டு வெங்கடராமனிடம் ஒப்படைத்தனர். மேற்படி ரகுராஜிடம் விமான நிலைய பொலிஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

(A5ம் பக்கத் தொடர்ச்சி)

சமுதாயம்

மற்ற இடங்களைப்பார்ப்பதற்கு அனுமதிப்பீர்களா?" எனக் கேட்டார். அதேபோன்ற சிலவற்றை நான் பார்ப்பதற்கு விளைவேன். எனக்கு அப்படியான கனவுகள் உண்டு" என்றார். நீங்கள் பணியாளர்களையும் ஆண்களோடு சரசம்பொழிந்து பாலியல் தொடர்பு கொள்ளும் பெண்களையும் காணவில்லையா அல்லது அவர்களின் நடத்தைகளில் சந்திக்கவில்லையா? எனக் கேட்டார். அதற்கு பியாசி: "ஆம், நான் கண்டேன்" அவர்கள் நீங்கள் உறக்கத்தில் இருக்கும்போது உங்கள் உயிர் வெளியே வந்து மீண்டும் செல்வதைக் காண்டார்களா? அதற்கு பியாசி இல்லை என்றார்.

"நல்லது இளவரசா, நீங்கள் உயிரோடு இருக்கும்போது உங்களது உயிரைக் காணமுடியவில்லையென்றால் அந்த மனிதன் இறந்த பின்னர் எப்படி அவனது உயிரைக் காணமுடியும் என எதிர்பார்க்கலாம்" என்றார்.

இவ்வாறாக கௌசிகர் ஒவ்வொரு முறையும் விளக்கமளிக்கும் போதும் பியாச அதற்கு மாறான கருத்துக்களைக் கூறிக்கொண்டே வந்தார் எனினும் அவை ஒவ்வொன்றிற்கும் தக்க விளக்கத்தை அளித்தார் கௌசிகர்.

அவர்களது விவாதம் மீக நீண்டதாக அமைந்திருந்தது ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுப்பதாக இல்லை. இறுதியில் புத்தரது தர்மத்தின் வழியை எடுத்துக்கூறி ஏழைகளுக்கு உதவி செய்யும் பணியைக் குறிப்பிட்டார். அதனைத்தான் தான் செய்வதாகக் குறிப்பிட்ட பயாசி. தானம், தர்மத்தின் சிறப்பை உணர்ந்து அதன்வழி செயற்பட்டார் எனப்படுகின்றது. அவர் செய்து புண்ணியங்கள் அவரைத் தேவலோகத்திற் பிறப்பெடுக்க வைத்தது என்பது கதையாகும்.



தந்தை செல்வா

ஒரு அரசியல் வாழ்க்கைச் சரிதை

ரி. சபாரத்தினம்

49

வாலிபர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டிய நிலைக்கு அப்பொழுது கட்சித் தலைமையை வகித்துவந்த வன்னிய சிங்கம் தள்ளப்பட்டார். அவர் தன் தலைமையுரையின் பண்டா - செல்வா பேச்சுக்கள் நடந்த சூழ்நிலையை விவரித்த பின்பு இவ்வாறு சொன்னார்: இந்த உடன்பாட்டைப் பலர் வரவேற்கின்றார்கள். ஆனால் அதில் அதிருப்தி தெரிவித்தவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். வெளியில் எவ்விதம் அபிப்பராய பேதம் இருக்கிறதோ அதே அபிப்பாராயபேதம் ஓரளவு கட்சியிலும் பிரதிபலிகிறதைக் காண்கிறோம்.

ஒப்பந்தத்தை எதிர்த்த வாலிபர்களைத் திருப்திப் படுத்துவதற்காக தாங்கள் கட்சியின் கொள்கையைச் சிறிதளவும் விட்டுக்கொடுக்கவில்லை என்று வன்னிய சிங்கம் சொன்னார். மொழி விஷயத்தில் என்றால் என்ன, சமஸ்டிக் கொள்கையில் என்றால் என்ன, குடியுரிமைப் பிரச்சினையில் என்றால் என்ன நாங்கள் எவ்விதமேனும், எங்கள் கொள்கையைச் சிறிதளவேனும் விட்டுக்கொடுக்க வில்லை என்பது உடன்பாட்டில் தெளிவுபடுத்தப்பட்டிருக் கிறது. அத்துடன் அவர் நிறுத்தவில்லை. தமிழரசுக் கட்சி தனது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்குத் தொடர்ந்து கிளர்ச்சி செய்வதையோ போராடுவதையோ ஒப்பந்தம் தடுக்கவில்லை என்று கூறி வாலிபர்களைச் சாந்தப்படுத்த முயன்றார். ஆகஸ்ட் 20ல் தாங்கள் ஆரம்பிக்கவிருந்த சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைப்பதற்கு மட்டுமே இணங்கியுள்ளதாக அவர் சொன்னார்.

அடுத்து எங்கள் அடிப்படைக் கொள்கைகளைத் தாரை வாரத்துக்கொடுத்து விட்டீர்களே என்ற வாலிபர்களின் கோஷத்துக்கு வன்னியசிங்கம் பதிலளித்தார். எங்கள் அடிப்படைக் கொள்கை எதனையும் நாங்கள் தாரைவார்த்து விடவில்லை என்றும் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை முதற்படி எனவும் சமஷ்டி அமைப்புக்கான அடித்தளம் என்றும் வன்னியசிங்கம் வர்ணித்தார். ஜி.ஜி. பொன்னம்பலம் இந்த வாலிபர்களின் அதிருப்தியை தன் அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்தினார். 1957 இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஒப்பந்த எதிர்ப்புக் கூட்டத்தில், தமிழுக்கு சம அந்தஸ்து கேட்டார்கள். வடக்கிலும் கிழக்கிலும் நிர்வாக மொழியாக இருப்பதற்கு ஒப்புக்கொண்டு விட்டனர். தமிழரசு கேட்டார்கள். பிரதேச சபைகளுடன் திருப்தி யடைந்து விட்டனர். மலையைக் கேட்டனர். எலியைத் தான் பிடிக்க முடிந்தது என்றார் பொன்னம்பலம். அவருக்கு தந்தை செல்வா அளித்த பதில்:

நாங்கள் எமது இலட்சியத்தைக் கைவிடவில்லை. நீண்ட பயணம் போறவர்கள் வழியில் தங்கித் தங்கிச் செல்வது வழக்கம். அதுதான் புத்திசாலித்தனமானது. ஓரேயடியாக முயன்றால் இலட்சியத்தை அடையமுடியாது போனாலும் போகலாம் போகாமலும் விடலாம். அதனால்தான் வழியில் தங்கிப் போக முடிவு செய்துள்ளோம். நாம் எமது இலட்சியத்தைக் கைவிடவில்லை. தமிழ் மக்களுக்ளே எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக, இது ஓர் இடைக்கால ஒழுங்கு மட்டுமே. என்று அதிருப்தியாளர்களை அழைத்து தந்தை செல்வா சொன்னார்.

சிங்களத் தீவிரவாதிகளும் சிங்கள சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் இந்தத் துரும்பைப் பற்றிக் கொண்டனர். சிங்களத் தீவிரவாதம் தலைவிரித்தாடுவதற்கு அந்தத் துரும்பு உதவியது. பண்டா - செல்வா ஒப்பந்தத்தை இடைக்கால ஒழுங்கு என்று தமிழரசுக் கட்சி கூறுகிறது. அது உண்மையில் தமிழ் மக்கள் தனி நாட்டை அமைப்பதற்கான முதற்படி என்ற வகையில் சிங்கள தீவிரவாத சக்திகள் தமது எதிர்ப்புப் பிரச்சாரத்தை ஆரம்பித்தன.

1956ல் படுதோல்வி கண்ட யு.என்.பி. குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன குழு மீண்டும் தலைதூக்குவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது. பொஸ்ற் ஸ்ரெப் (முதற்படி) என்ற தலைப்பில் ஒரு துண்டுப் பிரசுரத்தை அச்சிட்டு அவர்கள் விநியோகித்தனர். அப்பிரசுரத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்லாயிரக்கணக் கான ஏக்கர் காணிகளை தமிழருக்குப் பண்டாரநாயக்கா விற்று விட்டார் என்று குற்றம் சாட்டினர்.

ஒப்பந்த எதிர்ப்புப் பிரச்சாரம் தீவிரம் அடைவதைக் கண்டதும் தந்தை செல்வா கவலை யடைந்தார். பண்டாரநாயக்காவைச் சந்தித்து ஒப்பந்தத்தை அமுல் செய்யுமாறு கோரினார். பண்டாரநாயக்கா தனது நிலைமையைச் சுட்டிக்காட்டி பொறுமையுடன் இருக்குமாறு கேட்டார். அதேநேரத்தில் பொது நிர்வாக அமைச்சு சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்வதைத் தீவிரப் படுத்தியது. இதையிட்டு தமிழ் அரசாங்க அதிகாரிகள் கவலை கொண்டனர். தமிழரசுக் கட்சியை உருப்படியான நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தினர்.

1958 மார்ச் 1-2 திகதிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு களனியில் நடந்தது. அந்த மகாநாட்டிலும் ஒப்பந்தத்தை ஆதரித்துப் பண்டாரநாயக்கா உரையாற்றினார். தமிழரசுக் கட்சித் தலைவர்கள் என்னுடன் நடத்திய பேச்சுக்களின் போது கௌரவமான தீர்வு ஒன்று காணப்பட்டது என்று அவர் சொன்னார்.

அந்தக் கௌரவமான தீர்வை ஆயுதமாக உபயோகித்து மீண்டும் பதவிக்கு வர யு.என்.பி திட்ட மிட்டது. இதற்கிடையில் டட்லி சேனநாயக்காவும் மீண்டும் அரசியலுக்கு வந்துவிட்டார். பிரதேச சபைகள் என்ற போர்வையில் இலங்கையை இன ரீதியில் துண்டாடும் பண்டாரநாயக்கா- செல்வநாயகம் ஒப்பந்தத்திலிருந்து, எனது உயிரைக் கொடுத்தாலும், நாட்டைக் காக்கத் தயாராகவுள்ளேன் என்று அவர் அறிக்கை விடுத்தார். இந்த அறிக்கையை உபயோகித்து ஜெயவர்த்தனா சிங்கள உணர்வைத் தூண்டிவிட்டார்.

ஒப்பந்தம் கிழிப்பு

கண்டி யாத்திரை

பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதைத் தடுப்பதற்காக கண்டி தலதா மாளிகை யில் வழிபாடு நடத்துவதாக் கூறி கண்டி யாத்திரையை ஒழுங்கு செய்தார் ஜெயவர்த்தன. கொழும்பிலிருந்து யாத்திரை புறப்பட்டது. டட்லியும், ஜே.ஆரும் ஊர்வலத்தின் முன்னால் சென்றனர். பாலத்துறைச் சந்தியை ஊர்வலம் அடைந்ததும் கற்கள் எறியப்பட்டன. (தொடரும்...)

வடபகுதி மக்களை கடனாளியாக்கி விட்ட வங்கிகளின் வருகை

ஒரு காலத்தில், வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி, சீட்டுக் கட்டிச் சம்பாதித்துச் சீதனத்துக்குக் காசு சேர்த்தவர்கள் ஈழத்தமிழர்கள். பிறகு, தங்களின் சம்பாத்தியங்களை வங்கிகளில் வைப்பிலிட்டுச் சேமித்தார்கள். வங்கிகளில் சேமிப்பது பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருந்தது அவர்களுக்கு. யுத்தச் சூழலில் இது இன்னும் பாதுகாப்பானதாகத் தோன்றியது. இலக்கங்கள் கூடக்கூட சேமிப்பின் மகிழ்ச்சி உச்சத்துக்கு ஏறும். அதைவிட அதிலொரு பெருமை வேறு.

இதனால், தமிழ்ப்பகுதிகளில் இயங்கிய வங்கிகள் சேமிப்பில் முதலிடம் வகித்தன. ஆனால், தெற்கு மற்றும் மேற்கிலுள்ள சிங்களப்பகுதிகளின் வங்கிக் கிளைகள், சேமிப்புக்குப் பதிலாகக் கடனைத் தாராளமாக வழங்கிக் கொண்டிருந்தன. சிங்களவர்கள் சேமிப்பதற்குப் பதிலாகக் கடனை வாங்கிக் கொண்டிருந்தனர்.

இதை மறுவளமாகப் பார்த்தால், தமிழர்களின் காசில் சிங்களவர்கள் வாழ்ந்தனர் எனலாம். அவர்கள் வங்கிகளில் குறைந்த வட்டிக்குக் கடனை வாங்கி, தங்களுடைய தொழில் முயற்சிகளைச் செய்தனர். முதலீடுகளிலும் தாராளமாக ஈடுபட்டனர். வடக்குக் கிழக்கையும் விட ஏனைய பகுதிகளில் நிலவிய ஒப்பீட்டளவிலான அமைதிச் சூழல் இதற்கு மேலும் சாதகமான வாய்ப்புகளை வழங்கியது. சேமிப்பதற்குப் பதிலாகத் தாராளமாகச் செலவு செய்யும் பழக்கம் சிங்களவர்களுக்கு எப்போதும் அதிகம். செலவு செய்வதற்காகவே சிங்களவர்கள் கடுமையாக உழைப்பார்கள் என்று தென்பகுதியில் நீண்டகாலம் இருந்த நண்பர்கள் சொல்வர்.

உழைப்பதைத் தாராளமாகச் செலவழிக்கும் இயல்பு அவர்களிடம் உண்டு. விதவிதமாகச் சாப்பிடுவதிலும் சுற்றுலாக்களுக்குப் போவதிலும் கொண்டாட்டங்களில் தாராளமாகச் செலவழிப்பதிலும் அலாதிப்பிரியம் அவர்களுக்கு.

முன்னைய காலத்தில் தெற்கிலிருந்து தினம் பஸ்களில் சுற்றுலாவாக ஏராளமான சிங்களவர்கள் வடக்கே வருவர். வசதியுள்ளவர்கள்தான் இப்படி வருவதாக யாரும் எண்ணவேண்டாம். மிக வசதி குறைந்தவர்கள்கூட குடும்பம் குடும்பமாக வருவார்கள். அப்படி வருகிறவர்களுடைய உடற் தோற்றத்திலும் உடைகளிலும் அவர்கள் உடல் உழைப்புச் செய்யும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரியும். ஆனால், ஊர்களைப் பார்ப்பதிலும் பயணங்களைச் செய்வதிலும் அவர்களுக்கு நிறைய விருப்பம் என்றபடியால், செலவைப் பற்றிக் கவலைப்படாமல் இப்படி வருவார்கள். இப்படியான இயல்புள்ள சிங்களவர்கள் முதலீடுகளைச் செய்யவும் ஏதாவது தொழில்களை ஆரம்பிக்கவும் வங்கிகளில் தாராளமாகவே கடன்களை எடுத்தார்கள்.

வடக்கிலே குறைந்த வட்டியைக் கொடுத்துத் தமிழர்களின் சேமிப்பைப் பெற்றுக் கொண்ட வங்கிகள், கூடுதலான வட்டிக்குச் சிங்களவர்களுக்குக் கடன்களைக் கொடுத்தன. போதாக்குறைக்கு போர் நடந்த காலத்தில், அரசாங்கமே தமிழர்களின் சேமிப்பைப் போருக்குப் பயன்படுத்தியதாகவும் ஒரு அபிப்பிராயம் உண்டு. வெளிநாடுகளில் இருந்து போருக்காகப் பட்ட கடன் போதாதென்று வங்கிகளில் இருந்த சேமிப்பை அரசாங்கம் கடனாகப் பெற்றுப் போருக்குப் பயன்படுத்தியதாக அந்த நாட்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எது எப்படியோ அன்று இப்படியாக இருந்த ஒரு நிலைமை இன்று மாறியிருக்கிறது. இப்பொழுது தமிழர்களும் வங்கிகளில் தாராளமாகக் கடன்களை எடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதிலும் வன்னியில் வங்கிக் கடன்களைப் பெறாத குடும்பங்களே இல்லை. கடன்படவில்லை என்றால் அவர்களால் வாழவே முடியாது என்ற நிலையில் எப்படி கடனை எடுக்காமல் இருக்க முடியும்? வன்னியில் நடந்த இறுதிப்போர், எல்லோரையும் அகதிகளாக்கியது.

அகதிகளோ எல்லாவற்றையும் இழந்து விட்டவர்கள். எனவே, இந்தப் போர் இன்று எல்லோரையும் கடனாளிகளாக்கி விட்டது. இவர்கள் சாதாரண கடனாளிகளில்லை. பெருங்கடனாளிகள். எதற்கும் கடன் எடுக்க வேண்டும் என்பதால், எல்லோரும் இரண்டு மூன்று கடன் என்று எடுத்துப் பெருங்கடனாளிகளாகிக் கொண்டேயிருக்கிறார்கள். வங்கிகளும் தவிச்ச முயலை அடிப்பதைப் போல பாதிக்கப்பட்ட மக்களை வைத்துக் கொண்டு கடனைக் கொடுத்து வட்டியையும் முதலையும் கறக்கின்றன.

கடன் கொடுப்பதற்காகவே ஏராளமான வங்கிகள், கிளைகள் திட்டங்கள். போருக்குப் பிந்திய வடக்கில் 64 நிதி நிறுவனங்கள் தங்களுடைய கிளைகளைத் திறந்து கடன் திட்டங்களை ஆரம்பித்திருக்கின்றன. ஊர் ஊராக, வீடு வீடாகக் கடன் திட்டங்களைப் பற்றிய பிரசாரம் வேறு. மக்களைக் கடனாளிகளாக்குவதற்கே அரசாங்கம் திட்டமிட்டுள்ளது போலும். இல்லையென்றால், அது பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவித்திட்டங்களையும் நிவாரணத்தையும் வழங்கியிருக்கும். அழிவுகளை முழுமையாகப் புனரமைத்திருக்கும்.

ஆனால், அப்படியான எதையும் அது செய்யவில்லை. அப்படியான எதையும் செய்யவும் அது யோசித்திருப்பதாகவும் தெரியவில்லை. சிறு உதவிகள் எந்த நிலையிலும் இந்த மக்களுக்குப் போதியதாக இருக்காது. முற்றாக இழந்த மக்களுக்கு முழுமைப்படுத்தப்பட்டதொரு உதவித்திட்டமே அடிப்படையான ஆதாரத்தை உருவாக்கும். அந்த அடிப்படையில் இருந்தே அவர்கள் தங்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களாக இருப்பது வேறு. போரினால் முழுதாகவே அழிவடைந்த ஊர்களில் எல்லாவற்றையும் இழந்த மக்களாக இருக்கும் நிலை வேறு. இரண்டுக்கும் வித்தியாசள்ளது. அரசாங்கம் எந்த வேறுபாட்டைப் பற்றியும் சிந்திக்கவும் இல்லை. எந்த வித்தியாசங்களைப் பற்றியும் அக்கறைப்படவும் இல்லை.


ஆனால், போர் வாழ்க்கையையே மாற்றி விட்டது. தமிழர்களின் பொருளாதாரச் செயற்பாட்டையும் நோக்கு நிலையையும் கூட மாற்றிவிட்டது. அது சேமிப்புகளைச் சிதைத்து விட்டது. சேமிப்பாளர்களையும் சேமிப்புக்கான அடிப்படைகளையும்கூடச் சிதைத்தே விட்டது. ஆகவே, சேமிப்புக்குப் பதிலாக இப்போது வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் கடனுக்காகவே உழைக்கிறார்கள். கடனையும் வட்டியையும் கட்ட வேண்டும் என்ற கடப்பாட்டுக்காக ஓடிக்கொண்டிருக்கிறார்கள். கடன் அவர்களைத் துரத்துகிறது. ஓய்வில்லாமல் ஓடும்படி அது துரத்திக் கொண்டிருக்கிறது.

(A27ம் பக்கம் பார்க்க)

ஓம் சாமியே சரணம் ஐயப்பா



கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104

அருள்மிகு நாகபூசணி அம்பாள் கும்பாபிஷேக விழா

29.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிமுதல் 12.00 மணிவரை

நிகழும் மங்களகரமான கர வருடம் தை மாதம் 15ம்நாள் 29.01.2012 ஞாயிற்றுக்கிழமையும் ரேவதி நட்சத்திரமும் சப்தமி திதியும் அமிர்தயோகமும் கூடிய சுப தினத்தில் காலை 11.00 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள மேஷ இலக்கின சுபமுகூர்த்தத்தில் பரிவார மூர்த்தியாகிய அருள்மிகு நாகபூசணி அம்பாளுக்கு கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. அன்றைய தினம் இலங்கையில் நயினாதீவு அம்பாளுக்கு அதே நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது என்பது மிகவும் சிறப்பு மிக்கதாகும். எனவே அடியார்கள் அனைவரும் கிரியா காலங்களில் தவறாது ஆலயத்திற்கு வருகைதந்து அம்பாளை தரிசனம் செய்து இஷ்ட சித்திகளை பெற்றுயுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தெய்வீக கிரிஜா கால நிகழ்வுகள்

23-01-2012 திங்கட்கிழமை காலை கணபதி ஹோமம்.
24-01-2012 செவ்வாய் காலை தான்னியாதி வாசம் ஜலதிவாசம், நையனோன் மீலனம்.
24-01-2012 செவ்வாய் மாலை சயன ரோகணம். 25-01-2012 புதன் மாலை கிராம சாந்தி.
26-01-2012 வியாழன் மாலை வாஸ்து சாந்தி. 27-01-2012 வெள்ளி காலை மிர்ச்சங்கிரகணம்.
27-01-2012 வெள்ளி மாலை அங்குரார்ப்பணம். இரஷ்சபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், தூபிஸ்தாபனம், தீபஸ்தாபனம், யந்திரஸ் தாபனம், பிம்பஸ் தாபனம், அஷ்டபந்தனம், யாகபூஜை ஹோமம், பூர்ணகுதி, தீபராதனை, வேதஸ்தோத்திர கீத நாத சமர்பணம், பிரசாதம் வழங்கல்.

சுமங்கலிப்பெண்கள், கன்னிப் பெண்கள் கலந்து கொள்ளும் தீபபூஜை. 27-01-2012 வெள்ளி மாலை

28.01.2012 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை பக்தர்கள் கலந்து கொள்ளும் எண்ணைக் காப்பு

காலை யாகபூஜை ஹோமம், பஞ்சசூத்த ஹோமம், லாலிதா சகஸ்ர நாம பாரயணம் ஹோமம், விஷேட திரவிய ஹோமம், பூர்ணாகுதி தீபாராதனை வேதஸ்தோத்திர ஆகம நாதகீத நாட்டிய சமர்ப்பணம். மாலை 5.00 மணிமுதல் விநாயகர் வழிபாடு யாகபூஜை ஹோமம், பிம்பசுத்தி, நியாசங்கள், பூர்ணகுதி தீபாரதனை வேதஸ்தோத்திர ஆகம நாத கீத நாட்டிய சமர்ப்பணம், விஷேட கலை நிகழ்ச்சி

29.01.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு

விநாயகர் வழிபாடு யாகபூஜை ஹோமம், ஸ்பரிசகுதி மஹாபூர்ணகுதி தீபாரதனை, வேத ஸ்தோத்திர ஆகம நாத கீத நாட்டிய சமர்ப்பணம், பலிதானம் ஸ்தூபி அபிஷேகம், பிரதான கும்பம் வீதி பிரதட்சணம், சர்வ மங்கள வாத்திய சகீதம் பகல் 11.00 மணிமுதல் 12.00 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம், தசமங்கள தரிசனம் எஜமான் அபிஷேகம், மஹா அபிஷேகம், விஷேட பூஜை, வசந்த மண்டப பூஜை சுவாமி வீதி வலம் வருதல். தொடர்ந்து அன்னதானம்.

உபயம்: திரு. N சந்திரமோகன் குடும்பத்தினர் - நீர்கொழும்பு

தை அமாவாசை அபிராமிப்பட்டர் விழா 22-01-2012 ஞாயிற்றுக்கிழமை

22-01-2012 ஞாயிற்றுக்கிழமை மாலை 7.00 மணிக்கு, மாலை 6.00 மணிக்கு அம்பாளுக்கு அபிஷேகம் நடைபெற்று விஷேடபூஜையுடன் அபிராமிப் பட்டர் அருளிய 100 அபிராமி அந்தாதி பதிகப்பாடலும் பாடப்பட்டு(79) ஆவாது பாடலின் போது பூரணச்சிந்திரன் தோன்றிய அருட்காட்சி நடைபெற்று தொடர்ந்து அம்பாள் வீதி உலாவரும் காட்சி நடைபெறும்

அடியார்கள் அனைவரும் வருகை தந்து இவ்விழாவில் ஒவ்வொரு பாடலையும் உபயமாக ஏற்று பாடி அன்னையின் அருட் கடாட்சம் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்களாக.

தைப்பூசப் பெருவிழா, தைப்பூச பால்குட அபிஷேகம் 06-02-2012 திங்கள்

தைப்பூசத்தை முன்னிட்டு காலை 10.00 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் முருகப் பெருமானுக்கு பால்குட அபிஷேகம் ஆரம்பமாகும். அடியார்கள் அனைவரும் சங்கற்பம் செய்து பால்குடம் மேளவாத்திய சகீதம் ஆலயம் வலம் வந்து அபிஷேகம் நடைபெற்று விஷேட பூஜையுடன் சண்முகார்சனையுடன் சுவாமி வீதி வலம் வரும் அருட்காட்சி நடைபெறும். பால்குட அபிஷேகத்தில் கலந்து கொள்ளும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.

தைப்பூசத்தை முன்னிட்டு காலை 7.00 மணிமுதல் மாலை 9.00 மணிவரையும் ஏடுதொடக்குதல் அன்னமூட்டல் வைபவம் நடைபெறும்.

அனைவரும் வருக அன்னை அருள் பெறுக. நன்றி!

பக்தியுடன் ஆலய அறங்காவலர் சபை



THE LAW OFFICES OF
MELENI DAVID
வாகன விபத்துக்கள் !!!
துரதிஷ்டவசமான
நிகழ்வுகள் ...
நம்பிக்கையுடன் அழையுங்கள் LAW OFFICE OF MELENI DAVID. உங்களுக்கு உதவிக்கரம் வழங்க ஆவலாக உள்ளார்கள்.
தமிழ் சமூகத்தில் கடந்த 7 வருடங்களாக வாகன விபத்துக் கோரிக்கைகளில் முதன்மை வகிக்கும் ஒரே நிறுவனம்.
தமிழ் மக்களின் வாகன விபத்துக் கோரிக்கைகளை வெற்றிகரமாக தீர்த்து, அனேகரின் பாராட்டுக்களை குவித்த ஒரே நிறுவனம்.
2010 தமிழர் வர்த்தக சம்மேளனத்தில் விருதை பெற்ற நிறுவனம்.
உங்கள் வாகன விபத்துக் கோரிக்கைகள் அனைத்திற்கும் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே சட்ட நிறுவனம் LAW OFFICE OF MELENI DAVID.
4 சட்டத்தரணிகள், 2 சட்டமாணவர்கள், 2அனுபவமிக்க இலங்கை மருத்துவர்கள், இவர்களுடன் 35ற்கு மேற்பட்ட பயிற்றப்பட்ட சட்ட உதவியாளர்கள் உங்கள் சேவைக்காக காத்திருக்கிறார்கள்.
885 Progress avenue
Suite 110
Scarborough, Ontario
M1H 3G3
T : 416.430.0044
F : 416.430.0049
5200 Dixie Road
Suite 114
Mississauga, Ontario
L4W IE4
T : 905.232.3004
MDLAW.CA
LANDLINE
416.430.0044
HOTLINE
416.271.5992

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மடியில்: 08-02-1933

இறைவன் அடியில்: 21-01-2010

யாழ்ப்பாணம் புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பை வதிவிடமாகவும்,
தற்பொழுது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான
அமரத்துவமாது. சரஸ்வதி நாகராஜாவின்
இரண்டாம் ஆண்டு நினைவஞ்வலி.

அன்பிற்கரசியே அணையா ஜோதியே!
ஆகல் விளக்காய் எம்மை நிழல் போல்
அரவணைத்து காத்திட்ட ஒளிவிக்கே!
ஆண்டுகள் பல கடந்திட்டாலும் உங்கள் பசுமையான
ஆற்றலை எங்கள் இதயத்தில் நீங்காத நினைவு
ஆலைகள் அலைமோதி எங்கள் கண்களில் கண்ணீரை
அருவியாக கரைபுரள வைத்த எங்கள் ஆருயிரே
இருப்பதைக் கொண்டு சிறப்பாக எங்களை அனை-
வரையும் இறுதிவரை
கண் இமைகாப்பது போல் கண்கலங்காமல்
பாதுகாத்திட்ட காவல் தெய்வமே
உங்கள் மீதுள்ள நீங்காத நினைவுகள் எங்கள்
இதயத்தை விட்டு
விண்ணும் மண்ணும் உள்ளவரை உங்கள் நினைவுகளை
எங்கள் நெஞ்சம் மறக்காது (மலரால்) எங்களனைவரின்
நினைவஞ்சலியை
கண்ணீர் மலரால் தங்கள் பாதக் கமலத்தில்
சமர்பிக்கிறோம்...

தங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
சகோதர்கள், சகோதரிகள், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள்

தகவல்:

நாகராஜா (கனடா): (416) 282-8715
மோகன் (கனடா): (905) 794-5914
சந்திரன் (ஜேர்மனி): 01149 6299160
பாலன் (கனடா): (905) 826-0012
அனுசுயா (கனடா): (416) 283-9451
சாந்தி (கனடா): (647) 987-5133

ஸ்ரீமதி அமரத்துவமாது. சரஸ்வதி நாகராஜா

(யாழ்ப்பாணம், புளியங்கூடல்)

தொன்மையும் திறனும் மிக்க யாழ்ப்பாணச் சமூகம்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பேராசிரியர் சி.பத்மநாதன்

வாசகம் தமிழில் அமைந்திருப்பின் புள்ளியை அநுஸ்வாரமாகக் கொள்ளவியலாது. அநுஸ்வாரம் சமஸ்கிருத மொழி வழக்கிலுள்ளது. தமிழ்மொழி ஆவணங்களில் அது இடம்பெறுவதில்லை. இலக்கண நூலாசிரியர்களும் அதனைப் பற்றிச் சொல்வதில்லை. தொல்காப்பியம் புள்ளி இட வேண்டிய இடங்களைப் பற்றியே குறிப்பிடுகின்றது.

அநுஸ்வாரம் பற்றியோ அதனைப் போன்ற வேறொன்றைப் பற்றியோ அவர் குறிப்பிடவில்லை. கோ என்னும் எழுத்துக்குப் பின்னால் வரும் சொல்லை வேந்தன் என்று கொள்வது எவ்வாறு பொருந்தும். ஒரே பொருளுடைய இரு சொற்களை இரண்டு சொற்களை மட்டுங் கொண்ட வாசகத்திற் பயன்படுத்தினார்கள் என்று கொள்ள முடியாது.

எனவே கோ என்பதை பதவியினைக் குறிக்குஞ் சொல்லாகவும் வேதன் என்பதை முத்திரையின் உடைமைக்காரனது பெயராகவும் கொள்வதே பொருத்தமான விளக்கமாகும். கோ என்பது தொடக்க நிலையில் குறுநிலப் பிரிவுகளின் அதிபருக்குரிய பதவிப்பெயராக வழங்கியது. பிற்காலங்களில் அரசரையும் சக்கரவர்த்தி களாயினோரையும் கோ என்று அவர்களின் ஆவணங்கள் குறிப்பிட்டன.

கோ வேதன் என்ற தொடரில் வரும் இரண்டாவது சொல்லான வேதன் என்பது ஒருவனின் இயற்பெயராதல் வேண்டும். தென்னிலங்கையில், அகுறுகொட என்னும் இடத்திலே கிடைத்த, தமிழ்ப்பெயர்கள் பொறித்த நாணயங்களையும் இங்கு கவனிப்பது அவசியமாகின்றது. அவற்றிலே திஸ, பரத திஸ, உதிரன், மகாசாத்தன், கஜபன், திஸபுர தா(ட்)ட நாகரசந் என்ற பெயர்களே எழுதப்பட்டுள்ளன.

பொதுவாக நாணயங்கள், முத்திரைகள், மோதிரங்கள், மட்கலன்கள் என்பவற்றிலே உரிமைக்காரன் பெயர்களையும், சில சமயங்களில், அவற்றோடு மேலதிகமாகப் பதவிப்பெயர்களையும் எழுதுவது வழமை. ஆகையால் ஆனைக்கோட்டை முத்திரையிலுள்ள கோ வேதன் என்னும் சொற்களில் வேதன் என்பதை ஒருவனின் இயற்பெயராகவும் கோ என்பதை அவனுக்குரிய பதவிப் பெயராகவும் கொள்வது ஒரு பொருத்தமான முடிபாகும்.

கோ வேதன் என்ற வாசகத்தை எவ்வாறு உறுதிப்படுத்தலாம் என்பதும் விசாரத்திற்குரியதாகும். முத்திரையிலுள்ள மேல்வரியிற் காணப்படும் சித்திரங்களைச் சித்திர எழுத்துகளாகக் கொள்வது வெறுங் கற்பனையாகும். அவற்றில் வலமிருந்து இடமாகவுள்ள இரண்டு வடிவங்களும் குறியீடுகளாகவே கொள்ளத் தக்கவை. கேரளத்திலுள்ள எடகல் என்னுமிடத்திற் கடும்மி புத சேர என்ற வாசகத்தைத் தொடர்ந்து திருசூலம் போன்ற அடையாளம் அமைந்துள்ளது. அதனைத் தமிழ் நாட்டுத் தொல்லியல் துறையினர் "பனைமரம்" என்று கொள்ளத்தக்க குறியீடு என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை முத்திரையில் குறியீடுகள் மேல்வயிற் காணப்படுகின்றபொழுதிலும் அவற்றைச் சாசனத்தின் இறுதியான வடிவங்கள் என்று கொள்வது பொருத்தமாகும். சாசனம் கீழ் வரியிலுள்ள வலப் பக்கத்து முதலெழுத்துகளுடன் ஆரம்பமாகின்றது. வலமிருந்து இடமாக வாசிப்பதன் மூலமே கோ வேத என்ற சொற்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. மேல் வரியைச் சாசனத்தின் தொடர்ச்சியாகக் கொண்டு இடமிருந்து வலமாக நோக்குமிடத்து அவ்வரியிலுள்ள முதலெழுத்தைத் தமிழுக்குச் சிறப்பெழுத்தான ன வின் அடையாளம் என்று கொள்வதில் எதுவித சிரமம் இல்லை. உலோகத் துண்டத்தின் எல்லைப்புறமான கோணத்தில் அது அமைந்திருப்பதால் எழுத்திற்குரிய ஒரு வளை கோட்டினை அதில் எழுத முடியவில்லை.

இவ் வண்ணமாகச் சாசனத்தை நோக்குமிடத்து கோ வேதன் என்ற வாசகம் உறுதியாகின்றது. அதனையடுத்து அமைந்துள்ள வடிவங்கள் இரண்டும் எடகல்லிற் காணப்படும் சாசனத்திற் போலக் குறியீடுகளாக வருகின்றன. அவற்றைக் கோ வேதனின் பதவிக்குரிய இலச்சினைகள் என்று கருதலாம்.

ஆனைக்கோட்டை முத்திரையினை அடிப்படையாகக் கொண்டு கோ வேதன் வாணிப நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்பதை எம்மாற் புரிந்துகொள்ள முடிய வில்லை. ஆனால் அவனைப் பெருமகன் ஒருவனாகக் கொள்ள முடிகின்றது. கோ என்னும் அடைமொழி அவனது பெயரோடு இணைந்துள்ளதால் அவன் சிற்றரசனொருவன் என்பதை ஒப்புக் கொள்ளமுடியும்.

அந்த நிலையிலே, யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதனை அடுத்துள்ள தீவுபற்றிலும் ஆதி இரும்புக் காலத்திற் குரியதென்று கொள்ளப்படும் பெருங்கற் பண்பாட்டு மக்கள் ஏற்படுத்திய குடியிருப்புகள், காலப்போக்கிலே, சிற்றரசுகளாக உருவாகத் தொடங்கி விட்டன என்பதற்கு ஆனைக்கோட்டையிற் கிடைத்துள்ள எழுத்துப் பொறித்த முத்திரையும் வேறு சின்னங்களும் தகுந்த ஆதாரங்களாகும்.

இறுதியாகப் பரமன்கிராயிற் கிடைத்த கலவோடொன்றிலே எழுதப் பட்டுள்ள "வேளான்" என்னும் சொல்லின் முக்கியத்துவத்தை இங்கு பரிசீலனை செய்வது அவசியமாகின்றது. அதனைப் பற்றி ப.புஷ்பரட்ணம் மேல்வருமாறு விளக்குகிறார்: தமிழ் நாட்டிலுள்ள கொடுமணல் என்ற இடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது பெருங்கற்காலப் பண்பாட்டிற் குரிய இரு மட்பாண்ட ஓடுகளில் "வேள்" என்ற சொல் பெறப்பட்டுள்ளது. இவை பெருங்கற்காலப் பண்பாட்டுடன் வேளிர் ஆட்சியின் தோற்றத்தைத் தொடர்புபடுத்தக் காரணமாக அமைகிறது. அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரால் வடஇலங்கையில் பூநகரிப் பட்டாரத்திலுள்ள பரமன்கிராய் என்ற இடத்தில் மேற்கொண்ட கள ஆய்வின் போது பெருங்கற்கால மட்பாண்ட ஓடொன் றில் "வேள்" என்ற சொல் பெறப்பட்டது. இம்மட்பாண்ட ஓடு உடைந்த நிலையிற் காணப்படுவதனால் இதை ஒரு முழுச் சாசனமாகக் கொள்ள முடியவில்லை.

(தொடரும்)

பௌத்த பிக்குமார் அரசியலில் இருந்து விலக வேண்டும்

– அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை

அரசியல் நடவடிக்கைகளிலிருந்து பிக்குகளை விலக்கி வைக்குமாறு அரசியல் தலைவர்களிடம் அஸ்கிரிய மஹாநாயக்க தேரர் ஸ்ரீ புத்தரகித தேரர் தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை கண்டியில் எதிர்க்கட்சியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாசாவுடனான சந்திப்பின் போதே மஹாநாயக்க தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பிக்குமார்களுக்கோ அல்லது அவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கோ எதிரியல்ல. அவர்களை அரசியல் நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என நான் கூறமுடியாது. ஆனால் அரசியல் நடவடிக்கைகளில் பிக்குமார்கள் ஊக்குவிக்கப்படுவதை தடுக்குமாறு அரசியல் தலைவர்களிடம் தெரிவிப்பது சிறந்ததாகும் எனத் தெரிவித்தார். வெளிநாடுகளிலிருந்து அழுத்தங்கள் மற்றும் அவமானங்கள் இருந்தபோதும் அனைவரும் நாட்டிற்காக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

பிறநாடுகளின் உத்தரவுக்கமைய நாம் எப்போதும் செயற்படக்கூடாது. தலைவர் பிரேமதாஸ அரசியல் வாழ்வில் கண்டனங்கள், வீழ்ச்சிகள் என பலவற்றைக் கண்டவர். அவர் தைரியமாக பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து தீர்வுகளையும் கண்டவர் என தேரர் அவரைப் பாராட்டினார்.

அத்துடன் ஜனாதிபதி ராஜபக்ஷ கூட பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே இலங்கையின் ஜனாதிபதியாக திகழ்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.


வைத்தியத்துறை மாணவர்களை வெளியேற்றிய பல்கலைக்கழக நிர்வாகம்

மிஹிந்தலை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட முதலாம் வருட மாணவர்கள் நீதிமன்றத்தின் உத்தரவுடன் சனிக்கிழமை மாலை விடுதிகளில் இருந்து பொலிஸாரால் வெளியேற்றப்பட்டுள்ளதாக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கே.ஏ.நந்தசேன தெரிவித்தார்.

மருத்துவ பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடாது குழப்பங்களை உண்டு பண்ணி வருவதால் ஏற்பட்ட அமைதியின்மையை தொடர்ந்து மருத்துவபீடம் கால வரையறை இன்றி மூடப்பட்டுள்ள நிலையில் விடுதிகளில் இருந்து வெளியேறாமல் பலவந்தமாக விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளதாக உபவேந்தர் மேலும் தெரிவித்தார்.

அங்கிருந்து வெளியேறிய மாணவர்கள் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தினருக்கு எதிராக ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன் பின்னர் கலைந்து சென்றனர்.

சரத் பொன்சேகா வீட்டுக்காவலில் வைக்கப்படுவாரா?



சிறைத் தண்டனை அனுபவித்து வருகின்ற முன்னாள் இராணுவத் தளபதில் சரத் பொன்சேகாவை மார்ச் மாதத்திற்கு முன்னர் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருவதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

ஜெனிவாவில் மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு முன்னதாக அவர் விடுதலை செய்யப்படுவார் என்று விடுதலை செய்யப்பட்டதன் பின்னர் வீட்டுக் காவலில் வைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடா என்பது உட்பட மேலும் சில நிபந்தனைகளுடன் அவரை விடுவிப்பதற்கே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அமைச்சர்கள் மட்டத்தில் கூட உருவாகியிருக்கும் நிலையில் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவரும் விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் அவர் விடுதலை செய்யப்படவில்லை எனில், ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அரசாங்கம் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று இராஜதந்திர வழிமுறைகளில் இலங்கையை அமெரிக்கா எச்சரித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


இவ்வாறான நிலையில் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உருவாக்கப்பட்டுள்ள மனுவில் குறிப்பிட்டளவு கையொப்பங்களைப் பெறுவதற்கான முயற்சிகளும் பொன்சேகாவின் மகள் மேற்கொண்டிருந்த முயற்சிகளும் அரசாங்கத்திற்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே சரத் பொன்சேகா மார்ச் மாதமளவில் விடுதலை செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர் ஜனவரி இருபதாம் திகதி ஜனாதிபதியினால் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசு தயாரிக்கும் திரைப்படம்

கடந்த முப்பது வருட போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களை பயங்கர வாதத்தில் இருந்து மீட்டெடுப்பது தொடர்பான திரைப்படம் ஒன்று ஜனாதிபதி செயலக அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாத்தா எனும் பெயரைக் கொண்ட இத்திரைப்படம் கடந்த கால போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சமூகமயமாக்கலை கொண்டது என தெரிவிக்கப்படுகின்றது. மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு மேற்படி படத் தயாரிப்புக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.




tamil one

Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Sale Sale

KATPAKAM GROCERY

6970 Lisgar Drive, Unit: B1, Mississauga, ON. L5N 8C8

(Derry & 9th Line) 711 Gas Station க்கு அருகாமையில்

Sale January 14 th To January 31st

Tel: 905-785-0444

தரமான பொருட்கள், நியாயமான விலை



Vegetables

வற்றாளங்கிழங்கு	LB- .69¢
கத்தரிக்காய்	LB- .99¢
பாவற்காய்	LB- .99¢
வாழைக்காய்	LB- .99¢
மரவள்ளிக்கிழங்கு	LB- .99¢
கப்பல் வாழைப்பழம்	LB- .99¢
பயற்றங்காய்	LB- $1.99
வெண்டிக்காய்	LB- $1.99
போஞ்சி	LB- $1.99

Ceycan Delux பொன்னி அரிசி	8LB	- $6.99
Ceycan காஞ்சிபுரம் பொன்னி அரிசி	8LB	- $6.99
Ceycan புழுங்கல் அரிசி	8LB	- $6.99
Minar பஸ்மதி அரிசி	8LB	- $6.99
Noorjahan அரிசி	8LB	- $7.99
Meera பிரியாணி அரிசி	8LB	- $5.99
Red Ruby மொட்டை கறுப்பன்	8LB	- $4.99
Red Ruby முத்து சம்பா	8LB	- $5.99
மட்டா அரிசி	8LB	- $3.99
EDRO கட்டா சம்பல்		- $3.49
EDRO சீனி சம்பல்		- $3.49
ஆச்சி வத்தகுழம்பு		- $1.49
ஆச்சி Lemon Rice Paste		- $1.49
ஆச்சி Briyani Rice Paste		- $1.49
ஆச்சி Tamarind Rice Paste		- $1.49
ஆச்சி Mixed Veg Pickle		- $1.49
ஆச்சி Aavakkai Pickle		- $1.49

அவித்த கோதுமை மா	8LB	- $4.99
Deep ஆட்டா மா		- $8.99
Sakthi ஆட்டா மா		- $8.99
Swarna ஆட்டா மா		- $8.99
MD விளாம்பழம் Jam		- $1.99
Grace Corn Beef		- $1.99
Grace Sardine		- 0.59¢
Naanak நெய்		- $5.99
மைசூர் பருப்பு	8LB	- $4.99
துவரம் பருப்பு	4LB	- $5.49
கடலைப் பருப்பு	4LB	- $3.99
கொண்டல் கடலை	4LB	- $2.99
ரவை		- $2.99


Rabeena மிளகாய் தூள் Bag	- $3.99
Rabeena நல்லெண்ணை	- $5.99
Rabeena தேசிக்காய் ஊறுகாய்	- $2.49
Leela மிளகாய் தூள் Bag	$3.99
Ceycan மிளகாய் தூள் Bag	- $3.99
ஊதுபத்தி 5 For	- $1.00



உடன் மரக்கறிவகைகள், பழங்கள், மீன், இறைச்சி வகைகள் ஆடியோ, வீடியோ இன்னும் பல வகைப்பட்ட மளிகைப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா வழங்கும் வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் நான்காவது பரம்பரைக்கே கிடைக்கும்

- ஜே.வி.பி கூறுகிறது



விடுதலைப் புலிகளின் ஆயுத மற்றும் அரசியல் நடவடிக்கைகள் அனைத்தும் நந்திக் கடலுடன் நிறைவுக்கு வந்துவிட்டன. அத்தகைய நிலைமை மீண்டும் தோன்றாது என்பதே எமது நம்பிக்கையாகும். ஆனாலும் அரசாங்கமே மீண்டுமொரு ஆயுத கலாசாரத்துக்கான புறச்சூழலை உருவாக்கி வருகிறது என்று ஜே.வி.பி.யின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திசாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

வடக்கில் இந்தியாவின் 50 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்படுகின்ற வீடுகள் பாதிக்கப்பட்ட மக்களின் நான்காவது பரம்பரைக்கே கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது. சர்வாதிகார ஆட்சியைக் கொண்டிருந்த நாடுகளுக்கும் தலைவர்களுக்கும் ஏற்பட்ட நிலைமை என்னவென்பதை அனைவரும் உணர வேண்டும் என்று அவர் கூறினார்.ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உலகில் எந்தவொரு நாட்டிலும் மக்கள் வீதிக்கிறங்கியதால் ஆட்சி கவிழ்ந்து விடவில்லை. அதேபோல் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டங்கள் தீட்டப்பட்டதாகவும் சரித்திரம் இல்லை, சர்வாதிகாரத்தின் காரணத்தினாலேயே ஆட்சிக் கவிழ்ப்புக்கள் இடம்பெற்று வருகின்றன. இதனைப் புரிந்து கொள்ளாத அரசாங்கம் மக்கள் வீதிக்கிறங்கியது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதித்திட்டம் எனக் கூறுமேயானால் அரசாங்கம் அச்சமடைந்து விட்டது என்பதே அர்த்தமாகும்.

மேலும் நாட்டில் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்துக்கான தோற்றம் இடம்பெற்று வருவதாகக் கூறினால் அவ்வாறு கூறுவோரது மூளையை பரிசோதனைக்குட்படுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில் புலிகளின் ஆயுதப் போராட்டம் அவர்களின் அரசியல் நடவடிக்கைகளும் நந்திக்கடலுடன் நிறைவுக்கு வந்துவிட்டது. எனவே மீண்டும் அவ்வாறானதொரு பயங்கரவாதம் தோற்றம் பெறும் என்பதில் ஜே.வி.பி.க்கு சிறிதும் நம்பிக்கை இல்லை. எனினும் இவ்வாறு மீண்டுமொரு பயங்கரவாதம் பிரிவினைவாதம் தோற்றம் பெறுமேயானால் அது அரசாங்கத்தின் செயற்பாடுகளினாலேயே இடம்பெறும். நாட்டில் இடம்பெற்றுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை காரணம் காட்டி இவ்வாறு பொய்யான கதைகளைக் கூறி புலி முத்திரை இல்லாவிட்டால் வேறு வகையான முத்திரைகளைக் குத்தி இருக்கும் பிரச்சினைகளை மூடி மறைக்கவே அரசு முயற்சிக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கென வடக்கில் 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் ஒன்று இந்தியாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதில் இன்றுவரையில் 450 வீடுகளே அமைக்கப்பட்டிருக்கின்றன. மிகுதியான வீடுகளை நிர்மாணித்து நிறைவு செய்வதற்கு இன்னும் நூறு வருடங்கள் கூட ஏற்படலாம். அதாவது இந்திய வீட்டுத்திட்டம் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் நான்காவது தலைமுறைக்கே கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது வடக்கில் ஜனநாயகம் இல்லை. மீட்கப்பட்ட பிரதேசங்கள் என்று கூறி அங்கு தற்போது இராணுவ நிர்வாகமே இடம்பெற்று வருகின்றது. சாதாரண மக்களுக்கான சிவில் நிர்வாகம் அங்கு இல்லை.

அடிப்படை உரிமைகள், மனித உமைகள் அப்பட்டமாக மறுக்கப்படுகின்றன, மீறப்படுகின்றன. அந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. முழுமையான மீள்குடியேற்றம் இல்லை. மொத்தத்தில் அந்த மக்கள் அடக்கு முறைக்குட் பட்டுள்ளனர். ஊடக சுதந்திரம் மறுக்கப்படுகின்றது.

இவ்வாறான நிர்வாகத்தை நீடித்துக் கொண்டிருப்பதன் மூலம் அவர்களின் சமூக வாழ்வு பாதிக்கப்படுகின்ற அதேவேளை பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் விலகிப் போகின்றன. இந்நிலைமைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதன் மூலம் நாட்டில் மீண்டுமொரு பயங்கரவாத புறச்சூழல் ஒன்றை ஏற்படுத்தி அதற்குள் அந்த மக்களை தள்ளிவிடவே முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன என்றார்.

(A15ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி மக்களை....

"முன்னர் போர் துரத்தியது. இப்போது கடன்துரத்துகிறது" என்று ஒரு கடனாளி வேடிக்கையாகச் சொன்னார். அவர் இப்படிச் சொன்னபோதும் அவருடைய இந்தப் பேச்சினுள்ளே ஒருவித துயரம் இழையோடியிருப்பதைக் காணலாம். போரின்போது கைகளை, கால்களை, கண்களை என்று உடல் உறுப்புகளை இழந்தவர்கள் கூட ஓட முடியாத நிலையில் கடனுக்காக ஓடிக் கொண்டிருக்கும் நிலையைக் காணமுடியும். ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும் என்ற நிலையிலேயே இவர்கள் வங்கிகளில் கடனாளியானார்கள். ஆனால், பட்ட கடனைக் கட்டக்கூடியவாறு உழைப்போ வருமானமோ இவர்களுக்கில்லை.

எவ்வளவுதான் முயன்றாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் போதிய வருமானத்தை யாராலும் எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருக்கும் சனங்களும் பாதிக்கப்பட்டவர்களே. ஆகவே, அவர்களிடம் தாராளமாகச் செலவைச் செய்யக்கூடியவாறான நிதிவளம் இருப்பதில்லை. நிதிவளம் இல்லாத இடத்தில் எப்படி அதிக வருவாயை எதிர்பார்க்க முடியும்? வருவாய் குறைந்த நிலையில் எப்படிக் கடனுக்கும் வட்டிக்குமான உழைப்பை எதிர்பார்ப்பது?

ஆனால் ஒன்று வங்கிகள் வந்த பிறகு, ஊர்களில் தவிச்ச முயல் அடிக்கிற நாள் வட்டி, அறா வட்டி, மீற்றர் வட்டிக்காரர்களின் கைகள் வீழ்ந்து விட்டன.

நாடே கடன் பட்டுக் கொண்டிருக்கும்போது குடிமக்கள் கடன்படுவதில் என்ன புதினம் என்று நீங்கள் கேட்கலாம். அப்படியான ஒரு கேள்வியைத்தான் "எத்தன்" என்ற படத்திலும் கேட்கிறார், விமல். கடனிலேயே நாடும் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், வாழ வேண்டியிருக்கிறது என்பதை மிகச் சுவாரஸ்யமாகச் சொல்லும் படம் இது.

ஆனால், படத்தைச் சுவாரஸ்யமாகப் பார்ப்பதைப்போல வாழ்க்கை இருப்பதில்லை. சேமிப்பையே தங்கள் வாழ்வாகக் கொண்டிருந்த ஒரு நிலை பெயர்ந்துள்ளதைப்போலவே தமிழர்களின் அடையாளங்களாக இருந்த பல சிறப்பம்சங்களும் போரினால் பெயர்ந்தும் சிதைந்தும் விட்டன. இவற்றை மீளுருச் செய்யும் காலம் எப்போது எந்த வடிவில் வருமோ!

எண்பது வயதை எட்டிப்பிடித்துள்ள சௌகார் ஜனாகி

பழம்பெரும் நடிகையான சௌகார் ஜனாகிக்கு கடந்த 12.12. அன்று வயது எண்பது. சிறந்ததொரு குணசித்திர நடிகையாக விளங்கிய ஜனாகி அமைதியாகச் சாதனைகள் பலவற்றைப் புரிந்து விட்டிருக்கின்றார். தற்போது பெங்களூரில் வசித்துவரும் சௌகார் ஜனாகி இதுவரை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் 385 திரைப்படங்களில் நடித்திருக்கின்றார் என்பது பிரமிப்பைத் தருகின்றது.

இது தவிர 300 தடவைகள் மேடையேறியுமிருக்கின்றார். சிறு வயதிலிருந்தே சௌகார் ஜனாகி கலையுலகில் நுழைந்துவிட்டார். தனது 11 ஆவது வயதில் தெலுங்கு வானொலிக் கலைஞராக விளங்கிய "சௌகார் ஜனாகி" மூன்று மாதக் கைக்குழந்தையுடன் விளங்கிய தாயாக திரையுலகில் காலடி எடுத்து வைத்து சாதனைகள் படைத்தார்.

நாகிரெட்டியாரின் விஜயா கம்பைன்ஸாரினால் தயாரிக்கப்பட்ட சௌகார் என்னும் தெலுங்குத் திரைப்படத்தில் நடித்ததன் மூலம் "சௌகார் ஜனாகி" என்று அழைக்கப்படத் தொடங்கினார். அப்படத்தில் அவர் என்.டி. ராமராவுடன் நடித்திருந்தார். அவரது முதல் படமான "சௌகார்" படத்திற்காக அவர் பெற்ற வருமானம் ரூபா. 2500 மட்டுமே.

தனக்குப்பிடித்த நடிகர்களாக சிவாஜியையும் சாவித்திரியையும் குறிப்பிடும் சௌகார் ஜனாகி தான் நடித்த திரைப்படங்களில் தனக்குப்பிடித்த படங்களாக 'சௌகார்', 'இருகோடுகள்', 'பாமா விஜயம்', 'காவியத்தலைவி', 'அன்னை', 'புதிய பறவை', 'ஒளிவிளக்கு', 'குமுதம்', 'பறவை', மற்றும் 'ரோயுலுமாரயி' ஆகியவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றார். மக்கள் திலகத்தின் ஒளிவிளக்கு திரைப்படம் யாழ் ராஜா திரையரங்கில் வெளிவந்தபோது 169 நாட்கள் ஓடி வெற்றிபெற்ற படம். பின்னர் இரண்டாவது முறையும் எண்பதுகளின் ஆரம்பத்தில் வெளிவந்து மீண்டும் நூறு நாட்களைக் கடந்து ஓடி வெற்றிபெற்றது.

இரண்டாவது தடவை வெளிவந்து 100 நாட்கள் ஓடிக்கொண்டிருந்த சமயம் மரணப்படுக்கையிலிருக்கும் எம்.ஜி.ஆரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகக் கடவுளை வேண்டி சௌகார் ஜனாகி 'ஆண்டவனே உன் பாதங்களைக் கண்ணீரால் நீராட்டுவேன்" என்று பாடுவார். அப்பாடலின் இடையில் 'உள்ளமதில் உள்ளவரை அள்ளித்தரும் நல்லவரை, விண்ணுலகம் வாவென்றால் மண்ணுலகம் என்னாகும்?' என்று வரிகள் வரும். அச்சமயத்தில் பலர் விசும்பி அழத் தொடங்கினார்கள்.அழுதவர்கள் அனைவரைம் எம்.ஜி.ஆரின் தீவிர பக்தர்களான ஆண் ரசிகர்கள்.



பொதுவாக் சிவாஜியின் திரைப்படங்களைப் பார்த்துப் பெண்கள் மூக்குச்சிந்தி அழுவதைப் பார்த்திருக்கின்றேன். ஆனால், எம்.ஜி.ஆரின் படமொன்றிற்கு அதுவும் ஆண் ரசிகர்கள் அழுவதை அப்போது தான் பார்த்தேன். இதன் காரணமாகவே அந்தப் பாடலுக்கு சௌகார் ஜனாகியும், எம்.ஜி.ஆரும் அழுத இரசிகர்களும் என் வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமொன்றின் பங்களாகிகளா கிவிட்டார்கள்.

அப்பொழுது நாங்கள் நினைப்போம் உண்மையிலேயே எம்.ஜி.ஆர். இறந்தால் என்ன நடக்கும்? அந்த வயதில் எங்களால் எம்.ஜி.ஆர், இறப்பதைப் பற்றியே கற்பனை செய்ய முடியாமலிருந்தது? ஆனால், என்னைக் கவர்ந்த சௌகார் ஜனாகியின் முக்கியமான திரைப்படங்களாக "காவியத் தலைவி', 'இருகோடுகள்', 'பாமா விஜயம்', 'எதிர் நீச்சல்', 'மோட்டார் சுந்தரம்பிள்ளை', 'உயர்ந்த மனிதன்', 'பாவை விளக்கு', 'பாக்கியலக்சுமி', போன்றவற்றைக் குறிப்பிடுவேன்.

காவியத் தலைவியில் தாயாகவும் மகளாகவும் நடித்துப் பலருடைய பாராட்டுக்களையும் பெற்றிருந்தார். அதிலும் மகளைத் தன் மகளெனக் கூற முடியாத நிலையில் எட்ட நின்று அவளது வளர்ச்சியை இரசித்து நிற்கும் காட்சிகளையும் தாய்க்காக வாதாடும் மகளின் நீதி மன்றக் காட்சிகளையும் அவ்வளவு இலகுவில் மறக்கமுடியாது. ஜெமினியும் அமைதியாக ஆர்ப்பாட்டமில்லாமல் நன்கு நடித்திருப்பார். அதுபோல் எதிர் நீச்சல் பட்டுமாமியை அவ்வளவு எளிதில் மறக்கமுடியுமா என்ன?

சௌகார் ஜனாகியின் சகோதரியான கிருஷ்ணகுமாரி தெலுங்குத் திரையுலகினைக் கலக்கி நடடிகைகளில் ஒருவரென்பது குறிப்பிடத்தக்கது. பேத்தியான நடிகை வைஷ்ணவியும் நல்லதொரு, தமிழ், மலையாள நடிகை. சௌகார் ஜனாகிக்கு இரு புதல்வியரும், ஒரு புதல்வனும் நான்கு பேரப்பிள்ளைகள், இரண்டு பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர். இவரது இரண்டாவது புதல்வியும் மகனும் அமெரிக்காவிலேயே குடியேறிவிட்டனர்.

சௌகார் ஜனாகியின் கலையுலகப் பங்களிப்பினைக் கௌரவிக்கும் முகமாக தமிழக அரசின் சிறந்த நடிகையாக (1969-1970) தமிழக அரசு அவரைத் தேர்ந்தெடுத்தது. தமிழக அரசின் கலைமாமணி விருது, நாகேஸ்வரராவ் விருது, சிவாஜி விருது, சிறந்த நடிகைக்கான பிலிம் ஃபெயர் விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். அது மட்டுமன்றி இவரது கலையுலகச் சேவையினைக் கௌரவிக்கும் பொருட்டு அரிஷோனா பல்கலைக்கழகம் இவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்துள்ளது.

ஓரிளந்தாயாக, வாழ்வைத் துணிச்சலுடன் எதிர்நோக்கிச் சாதனைப் படைத்தவர் சௌகார் ஜனாகி. 1950களிலிருந்து 30 வருடங்களுக்குக் குறையாமல் தென்னிந்தியத் திரைப்படத்துறைகளில் தனக்கென்று ஓரிடத்தை நிலைநிறுத்தியவர் சௌகார் ஜனாகி. தென்னிந்தியத் திரையுலகில் குறிப்பாக தமிழ்த் திரைப்பட உலகில் அவருக்கு நிலையான ஓரிடமுண்டு.

- ஊர்க்குருவி.

அன்பின் தொனி—281

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை- பிரம்டன்)

எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள்

கப்பலாட்கள் கப்பலை விட்டோடிப்போக வகைதேடி, முன்னணியத்திலிருந்து நங்கூரங்களைப் போடப்போகிற பாவனையாய்ப் படவைக் கடலில் இறக்குகையில், பவுல் நூற்றுக்கு அதிபதியையும் சேவகரையும் நோக்கி: இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப் பிழைக்கமாட்டீர்கள் என்றான். அப்பொழுது, போர்ச்சேவகர் படவின் கயிறுகளை அறுத்து, அதைத் தாழவிழவிட்டார்கள். பொழுது விடிகையில் எல்லாரும் போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதினாலுநாளாய் ஒன்றும் சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள். ஆகையால் போஜம்பண்ணும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், நீங்கள் தப்பிப் பிழைப்பதற்கு அது உதவியாயிருக்கும், உங்கள் தலையிலிருந்து ஒரு மயிரும் விழாது என்றான். இப்படிச் சொல்லி, அப்பத்தை எடுத்து, எல்லாருக்குமுன்பாகவும் தேவனை ஸ்தோத்திரித்து, அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான். அப்பொழுது எல்லாரும் திடமனப்பட்டுப் புசித்தார்கள். கப்பலில் இருநூற்றெழுபத்தாறு பேர் இருந்தோம். திருப்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலிலே எறிந்து, கப்பலை இலகுவாக்கினார்கள். பொழுது விடிந்தபின்பு, இன்னபூமியென்று அறியாதிருந்தார்கள். அப்பொழுது சமமான கரையுள்ள ஒரு துறைமுகம் அவர்களுக்குத் தென்பட்டது. கூடுமானால் அதற்குள் கப்பலையோட்ட யோசனையாயிருந்து. நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டுவிட்டு. சுக்கான்களுடைய கட்டுகளைத் தளரவிட்டு, பெரும்பாயைக் காற்றுமுகமாய் விரித்து. கரைக்கு நேராய் ஓடி. இருபுறமும் கடல் மோதிய ஒரு இடத்திலே கப்பலைத் தட்டவைத்தார்கள், முன்னணியம் ஊன்றி அசையாமலிருந்தது. பின்னணியம் அலைகளுடைய பலத்தினால் உடைந்துபோயிற்று. அப்பொழுது காவல்பண்ணப்பட்டவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு அவர்களைக் கொன்றுபோடவேண்டுமென்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள். நூற்றுக்கு அதிபதி பவுலைக் காப்பாற்ற மனதாயிருந்து, அவர்களுடைய யோசனையைத் தடுத்து. நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும், மற்றவர்களில் சிலர் பலகைகள் மேலும், சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க் கரையேறவும் கட்டளையிட்டான், இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரைசேர்ந்தார்கள். நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம். அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காகவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டார்கள்.

பவுலை தேவனென்று சொல்லிக்கொண்டார்கள்.

பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின்மேல் போடுகையில், ஒரு விரியன்பாம்பு அனலுறைத்துப் புறப்பட்டு அவனுடைய கையைக் கவ்விக்கொண்டது. விஷப்பூச்சி அவன் கையிலே தொங்குகிறதை அந்நியராகிய அந்தத் தீவார் கண்டபோது, இந்த மனுஷன் கொலைபாதகன், இதற்குச் சந்தேகமில்லை, இவன் சமுத்திரத்துக்குத் தப்பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்க வொட்டவில்லையென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு. ஒரு தீங்கும் அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங்கண்டு, அல்லது அவன் சடிதியாய் விழுந்து சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நெடுநேரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தும், ஒரு சேதமும் அவனுக்கு வராததைக் கண்டபோது. வேறு சிந்தையாகி. இவன் தேவனென்று சொல்லிக்கொண்டார்கள். தீவுக்கு முதலாளியாகிய புபிலியு என்னும் பேர்கொண்டவனுடைய நிலங்கள் அந்த இடத்திற்குச் சமீபமாயிருந்தது, அவன் எங்களை ஏற்றுக்கொண்டு. மூன்று நாள் பட்சமாய் விசாரித்தான். புபிலியுவினுடைய தகப்பன் ஜுரத்தினாலும் இரத்தபேதியினாலும் வருத்தப் பட்டுக் கிடந்தான், பவுல் அவனிடத்திற்குப் போய் ஜெபம்பண்ணி, அவன் மேல் கைகளை வைத்து. அவனைக் குணமாக்கினான். இது நடந்தபின்பு, தீவிலே இருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து. குணமாக்கப்பட்டார்கள். அவர்கள் எங்களுக்கு அநேக மரியாதை செய்து. நாங்கள் கப்பல் ஏறிப்போகிறபோது எங்களுக்குத் தேவையானவை களை ஏற்றினார்கள். மூன்றுமாதம் சென்றபின்பு, அந்தத் தீவிலே மழை காலத்திற்குத் தங்கியிருந்த மிதுனம் என்னும் அடையாளமுடைய அலெக்சந்திரியாபட்டணத்துக் கப்பலிலே நாங்கள் ஏறிப் புறப்பட்டு, சீரகூசா பட்டணத்தைச் சேர்ந்து. அங்கே மூன்றுநாள் தங்கினோம். அவ்விடம்விட்டுச் சுற்றியோடி, ரேகியுதுறைமுகத்துக்கு வந்து சேர்ந்தோம். மறுநாளில் தென்றற் காற்றெடுக்கையில் புறப்பட்டு, இரண்டாம் நாள் புத்தேயோலி பட்டணத்திற்கு வந்து, அங்கே சகோதரரைக் கண்டோம், அவர்கள் எங்களை ஏழுநாள் தங்களிடத்தில் இருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள, அந்தப்படி நாங்கள் இருந்து, பின்பு ரோமாபுரிக்குப் போனோம். அவ்விடத்திலுள்ள சகோதரர்கள் நாங்கள் வருகிற செய்தியைக் கேள்விப்பட்டு, சிலர் அப்பியுபுரம்வரைக்கும், சிலர் மூன்று சத்திரம்வரைக்கும், எங்களுக்கு எதிர்கொண்டுவந்தார்கள், அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான். நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது, நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாபதியினிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான்.

பவுல் மரணத்துக்கேதுவான குற்றம் செய்யவில்லை

மூன்றுநாளைக்குப்பின்பு, பவுல் யூதரில் பிரதானமானவர்களை வரவழைத்தான், அவர்கள் கூடிவந்திருந்தபோது, அவன் அவர்களை நோக்கி: சகோதரரே, நம்முடைய ஜனங்களுக்கும் நம்முடையமுன்னோர்களின் முறைமைகளுக்கும் விரோதமானதொன்றையும் நான் செய்யாமலிருந்தும், கட்டப்பட்டவனாக எருசலேமிலிருந்து ரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டேன். அவர்கள் என்னை நியாயம் விசாரித்தபோது மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் என்னிடத்தில் காணாதபடியினால், என்னை விடுதலையாக்க மனதாயிருந்தார்கள். யூதர்கள் அதற்கு எதிர்பேசினபோது," நான் இராயனுக்கு அபயமிடவேண்டியதாயிருந்தது, ஆயினும் என் ஜனத்தார்மேல் யாதொரு குற்றஞ் சாட்டவேண்டுமென்று நான் அப்படிச் செய்யவில்லை. இந்தக் காரியத்தினிமித்தமே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன். இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான். அதற்கு அவர்கள்: உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை, வந்த சகோதரரில் ஒருவனும் உன்பேரில் ஒரு பொல்லாங்கை அறிவித்ததுமில்லை, அதைப்பற்றிப் பேசினதுமில்லை. எங்கும் இந்த மதபேதத்துக்கு விரோதமாய்ப் பேசுகிறதாக நாங்கள் அறிந்திருக்கிறபடியால், இதைக்குறித்து உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டறிய விரும்புகிறோம் என்றார்கள். அதற்காக அவர்கள் ஒரு நாளைக்குறித்து. அநேகம்பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு அவனிடத்தில் வந்தார்கள். அவன் காலமே தொடங்கிச் சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசினான். அவன் சொன்னவைகளைச் சிலர் விசுவாசித்தார்கள், சிலர் விசுவாசியாதிருந்தார்கள். இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் ஒவ்வாமலிருந்து, புறப்பட்டுப் போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன வாக்கியமாவது. நீங்கள் காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்கள். இவர்கள் கண்களினால் காணமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும். நான் இவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படிக்கு. இந்த ஜனத்தின் இருதயம் கொழுத்திருக்கிறது, காதுகளினால் மந்தமாய்க் கேட்டுத் தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்று இந்த ஜனத்தினிடத்தில் போய்ச் சொல்லு என்பதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொல்லியிருக்கிறார் ஆதலால் தேவனுடைய இரட்சிப்பு புறஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும். அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றான். இப்படி அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தர்க்கம் பண்ணிக்கொண்டு. போய்விட்டார்கள். பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுவதும் தங்கி. தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு. மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்.

தொடரும் ..

அன்னை அபிராமியின் அருட்பார்வையை பெற்ற அபிராமிப்பட்டர்

(22.01.2012ம் திகதி அபிராமி பட்டர் விழாவாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரையை பிரசுரிக்கின்றோம்)

- கனடா. திரு அ.சிவானந்தநாதன்

தமிழ் தைமாதம் முதலாம் திகதி தைப்பொங்கல் திருநாளாகும். இது தைத்திருநாள், தமிழர் திருநாள், உழவர் திருநாள், நன்றித் திருநாள், மகரஜோதி திருநாள் என்ற சிறப்பினைப் பெறுகின்றது. தமிழர் திருநாளில் வரும் முதல் அமாவாசை தை அமாவாசை என்ற சிறப்பிற்குரியது. தை அமாவாசையில் விரதம் இருந்து இறைவனை வழிபட்டால் மிக்க பயன்கள் கிடைக்கப்பெறும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். தை அமாவாசை தெய்வீக சிறப்பிக்குரிய ஒன்றாகும்.

தமிழகத்தில் உள்ள திருக்கடவூர் என்னும் சிலதலத்தில் அன்னை அபிராமி தனது மெய்யன்பராகிய அபிராமிபட்டர் என்பவருக்கு அருட்பார்வை நல்கி அவரின் வாக்கினை உலகோருக்கு எடுத்துக்காட்டிய அற்புத நாளாகும். இதன் பயனாக பட்டர் பாடிய தெய்வீகப் பாடல்கள் கிடைத்துள்ளன. சிறப்பாக அபிராமி அந்தாதிப் பாடல்கள், திருக்கடவூர் கள்ளவாரணப்பிள்ளையார் பதிகம், அமுத கடேசுவரர் பதிகம், காலசம்ஹார மூர்த்தி பதிகம், அபிராமியம்மை பதிகம் முதலான நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தகைய நூல்களில் உள்ள தெய்வீகப் பாடல்களை மனமுருகி, கண்ணீர் மல்க, பக்தியோடு பாடி பொருள் உணர்ந்தால் அன்னையின் திருவருளை எளிதில் பெறுவதற்கு வாய்ப்புண்டு. இம்மாதம் 22.01.2012ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உலகில் உள்ள சைவ ஆலயங்களில் அபிராமிப் பட்டர் விழா மிகச்சிறப்பாக இடம்பெறும். இத்தினத்தில் சைவசமய மக்கள் பெருந்திரளாக ஆலயம் சென்று அற்புதமான தெய்வீக விழா நேரில் கண்டு ஆனந்தம் பெற்றால் உள்ளத்தில் மனநிறைவு கைகூடும்.

இத்தினத்தில் திருக்கடவூர் என்னும் தலத்தை நினைத்து திருவாயால் போற்றி வழிபாடு செய்வது சாலச்சிறப்பாகும். "மேலோர் துதித்தல் ஒழியாது ஓங்கும் நற்கடவூர் வீரட்ட நாயகனே" என்ற சிறப்பினை இத்தலம் பெற்றுள்ளது. கனடாவில் உள்ள எல்லா ஆலயங்களிலும் இவ்விழா மிகச்சிறப்பாக நடைபெறும். சைவமக்கள் இவ்விழாவில் பங்குகொண்டு வேண்டுதல் செய்தால் அவன் அருளால் நிறைவான வாழ்வு நீண்ட ஆயுளை பெறுவதற்கு



மெய் துணையாக உள்ளது. சிவதலமாகிய திருக்கடவூர் என்னும் பெருங்கோயில் இன்று உலகமெங்கும் ஓங்கு புகழ் கொள்வதற்கு அன்னை அபிராமியின் அருட்பார்வையே காரணமாகும். நம்பித் தொழுதால் அதிக வரம் பெறலாம். பரம் பொருளை இமைப்பொழுதும் மறவாது பூசிக்கும் சிறப்பிற்குரியவள். அவள் அருளால் அற்புதமான அருட்பார்வையைப் பெற்றுள்ளாள். இத்தலம் தமிழகத்தில் உள்ள மயிலாடுறையிலுள்ள காவிரி நதியின் தென்கரையில் அமைந்துள்ளது. அன்னை அம்பாள் சந்நிதி கிழக்கு நோக்கியுள்ளது. எழில்மிக்க அபிராமி என்னும் திருநாமத்தை கொண்டுள்ளாள்.

இவ்வன்னை மேலான அழகுடைய அருட்பார்வையை அற்புதமாகக்கொண்டவள். இத்தேவியை நேரில் கண்டு தரிசனம் செய்தால் எல்லையில்லாத தெய்வீக இன்பம் மேன்மை பெற்று விளங்கும் என்பது நிச்சயம். தன் அடியார்களைக் காப்பதில் மிக்க அக்கறையும் கொண்டவள். அவர்களின் விருப்பத்தை வாக்கினை நிறைவு செய்வதில் வல்லவள். தனது பக்தனாகிய அபிராமி பட்டரின் வாக்கினை காக்க அருள்புரிந்த அபிராமி அன்னை மிகப்பெருமைக்குரியவள். தனது பக்தர்களை உலகோருக்கு எடுத்துக் காட்டுவதில் நிகரற்றவள்.

தஞ்சாவூர் சருபோஜி மன்னர் இவ்வாலயத்தில் மிகுந்த பக்தி உடையவர். இவ்வாலயத்திற்கு வருகைதந்த சருபோஜி மன்னர், தேவி பக்தியில் மூழ்கியிருந்த அபிராமி பட்டரை நோக்க 'இன்று என்ன திதி" என்று கேட்டார். அதற்கு பட்டர் 'பௌர்ணமி' என்று பதில் அளித்தார். மன்னர் அகன்ற பின்னர் இன்று அமாவாசை என்பதை உணர்ந்தார். எனவே அபிராமி பட்டர் தனது தவறான வார்த்தை காத்து அருள்புரிய தேவியை வேண்டினார். அன்னை அபிராமி தனது பக்தனின் பக்தியை உலகோருக்கும் மன்னனுக்கும் காட்டி அருள விரும்பினாள்.

இதனால் தான் அணிந்த திருத்தோட்டினை கழற்றி வானத்தை நோக்கி எறிந்தாள். அது பூரண சந்திரன் போல் ஒளிச்சுடர் கொண்டு விளங்கியது. இந்தத் தெய்வீக் காட்சியை மன்னரும், மக்களும், அந்தணர்களும் நேரில் கண்டு அதிசயம் அடைந்தனர். அன்னையின் அருளால் அமாவாசையில் முழுமதி தோன்றியது. தனது பக்தனின் வாக்கினை காத்து உயர்ந்த பக்தியை வெளிப்படுத்திய அன்னை அபிராமி அற்புதமான பெருந் தெய்வமாகும்.

தைமாத அமாவாசையில் நடைபெறும் அபிராமிபட்டர் விழாவில் பங்குகொண்டு நாமும் அன்னையைப் போற்றி பக்தியோடு வழிபாடு செய்தால் அன்று தோன்றிய "முழு நிலா" மீண்டும் தோன்றுவதற்கு வழிபிறக்கும். அபிராமி பட்டரின் உயர்ந்த பக்தி நம்மில் நிலை பெற்றால் நிச்சம் நிகழும். எனவே அபிராமி பட்டரின் பரிபக்குவ நிலையை நாமும் பெறுவதற்கு இவ்விழா கலங்கரை விளக்காக உள்ளது.

இறைவன் மார்க்கண்டேயருக்கு வந்த மரணத்தை தடுத்து யமதர்மனை அழித்து பின்னர் அருள்புரிந்த தலம் திருக்கடவூர் ஆகும். அகத்தியர், புலஸ்தியர், வாசுகி, துர்க்கை வழிபட்ட தலம் இதுவாகும். இறைவன் பிரமனுக்கு உபதேசம் செய்த தலம். குங்குலியக்கலய நாயனார், காரி நாயனார் ஆகியோர் வாழ்ந்து தொண்டு செய்து முக்தி பெற்ற தலம். அபிராமி அந்தாதி பாடப்பெற்ற அருள்தலம். அன்னை அபிராமியின் கடைக்கண் பார்வை அருள்வளத்தை எடுத்துக் காட்டும் அதிசயத்தலம். எனவே ஆலயம் சென்று விழாவின் பங்குகொள்ளும் அனைவரும் அற்புதமான திருக்கடவூர் தலத்தை மறவாறு போற்றுவது சாலச்சிறப்பாகும். அருள் சுரக்கும் அன்னை அபிராமி என்றும் பெருமைக்குரியவள்.

புருட்ஸ் கபீ FRUITS HABY

தைப்பொங்கள் மலிவு விற்பனை
தொடக்கம் 01-01-2012 - 31-01-2012 வரை

வாடிக்கையாளர் மத்தியில் அபிமானம் பெற்ற **மார்சே மாருதி** ஸ்தாபனத்தினர் விஸ்தரிக்கப்பட்ட புதிய இடத்தில் **Fruits Haby** எனும் பெயரில் இயங்குகின்றனர்

வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புதுவருட, தைப்பொங்கள் வாழ்த்துக்கள்

மிளகாய்த்தூள் (URB, Naresh) $ 3.99 900 g	சிவப்பு பச்சை அரிசி $ 1.79 1 kg	மை. பருப்பு $ 3.99 8 lbs	கறுப்பு கடலை $ 4.99 8 lbs	Vegetable Oil (Alfa Brand) $21.99 16 li
Nupak மஞ்சல், வெள்ளை அரிச $ 6.99 8 kg	சிவப்பு அரிசி (Uruthira) $ 4.99 8 lbs	(No.817) பசுமதி அரிசி $ 9.99 8 lbs	பசுமதி அரிசி (Adora) $ 7.99 8 lbs	கைக்குத்தரிசி $ 4.99 8 lbs
அரிசி மா (Uruthira) $ 7.99 5 kg	மா (Five Roses) $ 15.99 20 kg	அவித்த மா (Uruthira) $ 5.99 10 lbs	கனவாய் $ 3.29 Box	பொன்னி அரிசி $ 6.99 8 lbs
உப்பு (Windsor) $ 0.89	தேங்காய் பால் பவுடர் $ 2.49	Vegetable Oil $ 4.49 3 li	நல்லெண்ணைய் (Niru, Ceycan, Uruthira) $ 5.99 750 ml	இட்லி அரிசி $ 6.99
ரின்பால் (Diamond) $ 1.99	வாழைப்பழம் $ 0.39 1 lb	மீன் ரின் (Nupak, Mackaral, Sardin) $ 1.49	கடலை ரின் பெரியது $ 0.99	மிளகாய்த்தூள் (Niru) $ 5.49 800 g
கரணைக் கிழங்கு $ 1.99	முருங்கைக் காய் $ 1.99	கத்தரிக்காய் $ 0.99	புளி $ 0.79	Soya Meat சக்கரை $ 0.89 400 g

8 lbs

றவை $ 3.99	வெள்ளை கடலை $ 6.99
சம்பா அரிசி $ 6.99	து. பருப்பு $ 7.99
க. பருப்பு $ 5.99	உ. பருப்பு $ 6.99

பால் மலிவு விலையில்

சகல மரக்கறி, பழவகைகள் மிகவும் மலிவுவிலையில்

2 for $ 1.00: பப்படம், சவர்க்காரம், செத்தல், மோர்மிளகாய், வெந்தயம்

5925, VICTORIA AVE. MONTREAL, 514-342-4229

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் இணைந்து கொண்டாடிய முப்பெரும் விழா-2012

புதுவை இராமன்

ஒவ்வொரு ஆங்கிலப் புத்தாண்டு பிறந்த ஜனவரி மாத இரண்டாவது வாரத்தில் பிறக்கும் தை மாத முதல் நாளான மகர சங்கராந்தி எனும் பொங்கல் பண்டிகை மிகவும் தொன்மை வாய்நத இந்துக்களின் பண்டிகையாகும்.இங்குள்ள தமிழர்கள் தங்கள் தங்கள் இல்லங்களிலும், இங்குள்ள ஆலயங்களிலும் ஒவ்வொரு வருடமும் கொண்டாடத் தவறுவதிலலை. அதுபோன்றே இங்குள்ள பல்வேறு தமிழ் சமூக அமைப்புகளும் டொரொன்டோவின் ஒவ்வொரு பகுதியிலும் பொங்கல் விழாக்களை நடத்திவருகின்றன

அதற்குச் சான்றாக கடந்த 15.1.2012 மாலை ஸ்கார்பரோ கனடா கந்தசாமி ஆலயத்தில், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் மற்றும் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் ஒழுங்கு செய்திருந்த தமிழ்புத்தாண்டு, பொங்கல் விழா மற்றும் திருவள்ளுவர் பிறந்த நாள் வைபவம் என முப்பெரும் விழா எடுத்து, தைப் பொங்கல் பொங்குதல், தமிழ் மரபுக் கலைகளான ஆடல், பாடல், 2006ம் ஆண்டு முதல் 2011 வரை பிறந்த குழந்தைகளின் தமிழ்ப் பெயர்களுக்கும், தமிழ்ப் பெயர் மாற்றம் செய்தவர்களுக்குப் பரிசளிப்பு, தமிழ் பண்பாட்டு கையேடு, தாயக விவசாயிகளுக்கு ஏர் கலப்பை, தடி மற்றும் பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்குவதற்கான நிதி சேகரிப்பு என மிகவும் பொருத்தமான வகையில் இந்த ஆண்டு முற்றிலும் வித்யாசமானதொரு விழாவை நடத்தி தமிழர்களின் பண்டிகைகளுக்கு கூடுதல் பெருமை சேர்த்து விட்டார்கள் என்றே கூறலாம்.





15.1.2012 அன்று நடைபெற்ற முப்பெரும் விாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக அமையும் விதத்தில் விழா அரங்கின் வரவேற்புப் பகுதியில் பூர்ண கும்பம், வெற்றிலைப் பாக்கு பழங்களுடன் அமைத்து வருகை புரிந்த அனைவரையும் இரு அமைப்புக்களைச் சார்ந்த நிர்வாக சபை உறுப்பினர்கள் இன்முகத்துடன் பொங்கல் நல் வாழ்த்துக்களைக் கூறி வரவேற்றார்கள். மங்கள வாத்யம் ஒலிக்க மங்கள விளக்கை தமிழீழ சங்க முன்னாள் தலைவரும், உ.த.ப.இயக்கத்தின் உலகளாவிய கல்விப் பொறுப்பாளரும். (கனடா) தாயகத் தமிழர்களின் மறுவாழ்வ அமைப்பின் தலைவருமான திரு வி.எஸ். துரைராஜா அவர்கள் ஏற்றி தொடங்கி வைத்தார்.. மேலும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேசத் தலைவர் திரு வேல் வேலுப்பிள்ளை மற்றும் கனடாக்கிளைத் தலைவர் திரு சிவா கணபதிப்பிள்ளை ஆகியோர் இவ்வமைப்பின் கடந்த காலப் பணிகளையும், சாதனைகளையும் சர்வதேசக் கிளைகளுடன் செய்து வருவதை அனைவரிடம் பகிர்ந்துகொண்டும், அதுபோன்றே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு ஈழவேந்தன் அவர்கள் "Is there a future for Tamils' என்ற தனது ஆங்கிலம் மற்றும் தமிழ் கட்டுரைப் பிரதியை





(25ம் பக்கம் பார்க்க)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03
-
04
-
1926



மறைவு
29
-
01
-
2006

கொழும்பைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை மானிப்பாயை வாழ்விடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர். ஸ்ரீபதி மகேஸ்வரி

(தர்மகர்த்தா புளியங்கண்டு பிள்ளையார் தேவஸ்தானம், முருகமூர்த்தி பிள்ளையார் தேவஸ்தானம்)


திதி :- 23-01-2012

ஆறாண்டு காலம் மாறாத காலம்
தீராத துயரம் தேறாத உள்ளம்
நூறாண்டு காலம் மறவாத உறவு
நமக்குள் ஏனம்மா இந்தப் பிரிவு
நேரான பாதை நாம் வாழ உலகில்
ஒளியாக நின்று வழி காட்டு தாயே

தங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
24 - 05 - 1958



மறைவு:
03 - 02 - 2011

குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து
எம்மை வளர்த்து வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
ஓர் ஆண்டு ஆனாலும் உங்கள் நினைவு
எங்களை வாட்டுகின்றது அப்பா
காலனே தன்னுடன் அழைத்திட்ட செய்தி கேட்டு
நாங்கள் துடி துடித்து விட்டோம் அன்று ஆனால்
என்றும் உங்களுடன் வாழ்ந்த அந்த இனிமையான
நினைவுகளுடன் இருக்கின்றோம் அப்பா...

எங்கள் அன்புத்தெய்வமே அப்பா
அப்பா அப்பா எங்கள் உள்ளம் உருகுதப்பா...
எங்கள் கண்கள் சொரியுதப்பா - நீங்கள்
எங்களை விட்டு பிரிந்து ஒராண்டு ஆனாலும்
உங்கள் நினைவுடனே இருக்கிறோம் அப்பா...

காரைநகரை பிறப்பிடமாக கொண்டவரும்,
கனடாவை வதிவிடமாகக் கொண்டவருமான

அமரர். கந்தையா ஆதித்தன்

உங்கள் நினைவால் வாடும்
அம்மா, மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், சகோதரி மற்றும் உறவினர், நண்பர்கள்
(905) 201-6159

மரண அறிவித்தல்



மலர்வு
03-10-1928

உதிர்வு
17-01-2012

திருமதி
இராசலட்சுமி கனகராசா
(கந்தர்மடம்)

யாழ்ப்பாணம், கந்தர்மடம் குமாரசாமி வீதியை சேர்ந்த திருமதி இராசலட்சுமி கனகராசா அவர்கள் 17-01-2012 செவ்வாய் அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா கனகராசாவின் அன்பு மனைவியும்,
காலஞ்சென்ற திருமதி. கனகம்மா குமாரசாமி மற்றும் கோமதி, கந்தசாமி,
குருமூர்த்தி ஆகியோரின் சகோதரியும்,
காலஞ்சென்ற அமராவதி, மற்றும், சிறிவரதராசன் (பிரேமன்-ஜேர்மனி),
ரோகினி (யாழ்ப்பாணம்), ஜமுனா (லண்டன்), சிவானந்தன் (யாழ்ப்பாணம்),
கேசவன் (Toronto-கனடா) ஆகியோரின் பாசமிகுதாயாரும்,
சிவபாதசுந்தரம், நிர்மலா, பாலஸ்கந்தன், அருட்செல்வநாதன், நிர்மலா,
பிரேமிளா, லலீந்திரா ஆகியோரின் மாமியாரும்,
பிரதீபன், அருந்ததி நவநீதன், லாவண்யா சுரேஷ், மைதிலி, சங்கர், நிதர்சனா,
சிந்துஜா குமரேஷ், கார்த்திக், உபேந்திரா, பானுசன், அகிலன், அஜந்தா,
ஜனனி, தனஞ்செயன், கஜானனன், லக்சிகா ஆகியோரின் பாட்டியும்,
துஷாயினி, தட்ஷாயினி, காவியன், கோபிஷாந்த், கிரிஷான்ந், ஆகியோரின்
பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் 18-01-2012 ம் திகதி புதன்கிழமை அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புகளுக்கு:
மகள் ரோகினி (தங்கா - யாழ்ப்பாணம்) (0094) 21-2228287
மகன் கேசவன் (கனடா) - 416-5190796
மகள் ஜமுனா (லண்டன்) - (0044) 7440051670
(0044) 7925061800

உலகமெங்கும் கடந்த ஆண்டில் 103 ஊடகவியலாளர்கள் படுகொலை

கடந்த ஆண்டில் உலகமெங்கும் 103 ஊடகவியாளர்கள் கொல்லப்பட்டதாக வியன்னாவில் தலைமையகத்தை கொண்டு செயற்படும் சர்வதேச பத்திரிகை நிறுவகம் (ஐ.பி.ஐ) அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது. அதிகளவில் ஊடகவியலாளர்களின் மரணங்களை சந்தித்த நாடாக மெக்ஸிக்கோ விளங்குகிறது.


அங்கு கடந்த ஆண்டில் 10 ஊடகவியலாளர்கள் பலியாகியுள்ளனர். மெக்ஸிக்கோவுக்கு அடுத்த நிலையிலுள்ள ஈராக்கில் கடந்த ஆண்டு 9 ஊடகவியலாளர்கள் உயிரிழந்துள்ளார்கள். உலகில் ஊடகவியலர்களுக்கு பாதுகாப்பற்ற நாடுகள் வரிசையில் ஹொண்டுரஸ், பாகிஸ்தான், ஜேமன், லிபியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் இடம்பிடித்துள்ளன.

உள்நாட்டில் நடைபெறும் சம்பவங்களை செய்தியாக வெளியிட்டமைக்காகவே இந்தப் படுகொலைகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக ஒரு சில சம்பவங்களை மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலகில் அதிகளவில் ஊடகவியலாளர்களின் மரணங்களை சந்தித்த ஆண்டாக 2009ம் ஆண்டு உள்ளது. அந்த ஆண்டில் 110 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர்.

தன்னைப் பற்றி விமர்சனங்களால் கவலையடைந்துள்ள ஒபாமாவின் துணைவியார்





அமெரிக்க வெள்ளை மாளிகையில் தனது செயற்பாடுகள் குறித்து விபரிக்கும் புதிய புத்தகம் ஒன்று தன்னை ஒரு கோபமுள்ள கறுப்புப் பெண்ணாக சித்தரிக்க முயற்சிப்பதாக அமெரிக்க முதல் பெண்மணி மிசெல் ஒபாமா சாடியுள்ளார். "நியூ யோர்க் டைம்ஸ்" நிருபர் ஜோடி கன்டோரால் எழுதப்பட்ட "தி ஒபமாஸ்" என்ற மேற்படி நூல் வெள்ளை மாளிகையிலான மிசெல் ஒபாமாவின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் தகவல்களை உள்ளடக்கியுள்ளது. அந்நூல் மிசெல் ஒபாமாவுக்கும் முன்னாள் அலுவலர்கள் தலைவர் ரஹ்ம் இமானுவேலுக்குமிடையே பிணக்குகள் நிலவியதாக விபரித்துள்ளது.

இந்நிலையில் "சி.பி.எஸ். செய்தி சேவைக்கு மிசெல் ஒபாமா அளித்த பேட்டியில் தான் முதல் பெண்மணியாக இருப்பதை விரும்புவதாகவும் ஆனால் தன்னைப் பற்றிய விமர்னங்கள் தொடர்பில் கவலையடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு முன் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய ரஹ்ம் இமானுவேல் தன்னுடைய அன்புக்குரிய நண்பர் எனவும் அவருக்கும் தனக்குமிடையே ஒரு போதும் தர்க்கமெதுவும் ஏற்படவில்லை எனவும் மிசெல் ஒபாமா கூறினார். இமானுவேல் தற்போது சிக்காகோ மேயராக பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அரசியல் கூட்டங்களின் போது தனது கணவர் பராக் ஒபாமாவின் பின்னணியில் இருந்து அவரது முடிவுகளில் செல்வாக்கு செலுத்துவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கும் அவர் மறுப்புத் தெரிவித்தார்.

"நான் அவரது (ஒபாமாவினது) நெருங்கிய நண்பியாகவுள்ளேன். அவர் பெரிதும் நம்பிக்கை வைத்துள்ளவர்களில் ஒருவராகவும் உள்ளேன். அவர் தன்னைச் சுற்றி திறமையான பலரை கொண்டுள்ளார். அதற்காக நாங்கள் இருவரும் கலந்துரையாடல் எவற்றிலும் ஈடுபடவில்லை எனக் கூறவில்லை" என மிசெல் ஒபாமா கூறினார். பராக் ஒபாமா ஜனாதிபதியாக அறிவிக்கப்பட்டது முதற்கொண்டு தன்னை கோபமிக்க கறுப்புப் பெண்ணாக சித்தரிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளதாக மிசெல் ஒபாமா குறிப்பிட்டார்.

திருப்பதியில் இனிமேல் முக்கிய பிரமுகர்களுக்கு முக்கியத்துவம் வழக்கப்படமாட்டாது

திருமலையில் சாமி தரிசனம் செய்யவரும் வி.ஐ.பிக்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் நடவடிக்கையை ரத்து செய்ய ஆலோசித்துள்ளேன். இது குறித்து விரைவில் தேவஸ்தான சபை உறுப்பினர்களுடன் பேசி முடிவு எடுக்கப்படும் என திருப்பதி தேவஸ்தான சபையின் தலைவர் பாபிராஜு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வைகுண்ட ஏகாதசி தினத்தன்று சொர்க்கவாசல் திரிசனம் செய்ய வந்திருந்த மாநில அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், நீதிபதிகள் உள்ளிட்ட வி.ஐ.பிக்கள் மூன்று பிரிவுகளாக பிரித்து வைகுண்டம்-1, வழியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். வி.ஐ.பி, டிக்கெட் பெற்ற மேலும் சிலர் வைகுண்டம் 17,25 வளாகம் மற்றும் செல்லார் கியூ வரிசை வழியாகவும், கோயிலுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இதன் போது வி.ஐ.பி.க்களை கோயிலில் சாமி தரிசனம் செய்யவிடாமல், தொலைதூர தரிசனம் செய்வித்து அனுப்பி விட்டதாக அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், மேலும் முக்கிய அதிகாரிகள் பலரும் திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் மீது மாநில அரசிடம் புகார் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தெய்வ சன்னிதியில் அனைத்து பிரிவு பக்தர்களும் ஒன்று என்ற எண்ணத்துடன், வைகுண்ட ஏகாதாசி தினத்தன்று சாமி தரிசன விவகாரத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே இந்த அனுபவத்தை கவனத்தில் கொண்டு, இனி எதிர்காலத்தில் தவறுகள் நடக்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்நிலையில் திருமலையில் சாமி தரிசனம் செய்ய வரும் வி.ஐ.பி.க்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதை ரத்து செய்ய வேண்டுமென முடிவு செய்துள்ளேன். இது குறித்து, தேவஸ்தான சபையின் ஆலோசனைக் கூட்டத்தில் உறுப்பினர்களுடன் ஆலோசித்து அதற்கான முடிவு மேற்கொள்ளப்படும் என்றார்.




•Buy •Sell •Lease



Sasi Chelvaratnam
Sales Representative
Direct: 416.858.4828



Ravi Raveendran
Real Estate Broker
Direct: 416.817.8479



Justin William
Real Estate Broker
Direct: 416.803.7344

•Residential •Commercial •Investment



- Immaculate House
- 4 Bedrooms & 4 Washrooms
- Apx 3000 Sq Feet
- Over $60000 in Upgrade
- Close to Shopping Malls and Amenities...




- Beautiful House In A Prime Location
- All Brick 4 Bedroom House
- Hardwood Floors In Principal Rooms
- Close To Schools, Shopping
- Don't Miss This




- Spotless 4+2 Bedroom House
- Super Location
- Double Door Entrance
- Short Walk To Public Transit
- Fin Basement With 2 Bedrooms



- Absolutely Gorgeous House
- Immaculate 4Bedroom Detach House
- Thousand Spend on Upgrade
- Best Neigborhood in Ajax
- Over 3000 Sq Feet/few years old




- Brand New Townhouse Built By Tridel
- 3+1 Bedroom/3washroom
- Easy Access to TTC,Hwy 401.
- Million Dollar Facilities
- Call for more Details....



- Tridel Built Condo
- 2Bedroom/2 Washrooms
- High demand uptown Location
- Steps To School,Shopping...
- Good for Investores...




- 4 Bedroom Detached House
- Newly Renovated Home
- Finished Basement with 2Bedroom
- Approx 2000 Sq Ft
- Close To Parks, Shopping & Transit




- House In Demanding Location
- 4 Bedroom Detached
- Few Years Old/Appx 2400 Sq.Ft
- Upgraded With Many Newer Features
- Attached 2 Car Garage..




- Brand New Tridel Built Condo
- I Bedrooms. 1 Washrooms
- Million Dollar Facilities
- Steps To TTC, Mall, Schools..
- High Demanded Downtown Area ...



- Great Investment Property
- The High Demand Area
- Over 5000 Sq f Buil(Almust 3acres).
- Zoned for Many Uses
- Call Us for details....



- Well Established Esso Gas Satation
- With Touchless Car Wash
- Business With Property
- Gross Revenue Over 200 K.
- Don't Miss This Opportunity



- 2 Commercial Anchored Tenants
- 4 Residential Apartments
- Good Return Of Income
- Heart Of Oshawa Down Town
- Call For More Details

HomeLife GTA Realty Inc., Brokerage*

5215 Finch Ave East , Suite 203, Scarborough, On. **Office: 416.321.6969**

This is not intend to solicit properties currently listed for sale *Independently owned and operated ** conditions apply

சுரபி

1052 Birchmount Road,
Scarborough, ON.
Tel : 416-285-8518 \ 285-7609
Fax : 416-285-8693

From Jan 20 - To Jan 31 இவ்வார மலிவு விற்பனை

CHEAPEST IN TOWN

கரும்புச் சீனி
4 lb . . $1.99

அரிசி வகைகள்

பிரியாணி அரிசி / Briyani Rice 8 lb................$2.99
தரமான ஊர்க் குத்தரிசி / Quality Village Rice 4 lb...........$1.99
தரமான சம்பா அரிசி / Top Quality Samba Rice 4lb.....$3.99
தீட்டாத சிவப்பு பச்சை அரிசி / Un Bleached Red Raw Rice 8 lb..$3.99

மா வகைகள்

கோதுமை மா / Five Roses 8 lb....................$2.99
Whole Wheat Flour 4 lb................................$1.99
நன்றாக அவித்த கோதுமை மா / Steamed Flour 8 lb..................$4.99
வறுத்த சிவப்பரிசி மா / Red Rice Flour 4 lb.................$2.99

தரமான நீளமான பசுமதி அரிசி

Super Quality Basmati Rice (Real)

- 10 lbs $7.99 (Pr. of India)

மேலும் பல பொருட்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

போதிய வாகனத் தரிப்பிட வசதிகள்

மாம்பழச் சாறு / Mango Yougurt 500 ml 2 for.................0.99¢

ஊறுகாய் / Pickles ....0.99¢

பேரீச்சம்பழம் / Dates 2 lb................................$2.99

செட்டிநாடு மிளகாய்த் தூள் or Island Style மிளகாய்த் தூள் 900 gr............................$2.99

அப்பளம் / Papadam 2 for (200 gr)...............0.99¢

மோர் மிளகாய் / Butter Chilli 2 for...............................0.99¢

செத்தல் மிளகாய் / RedChilli 2 for...............................0.99¢

Homo Milk 4 lit.............. $4.99
தயிர் / Organic Yogurt...$1.99
தக்காளிப் பழம் / Tomato lb..................................0.69¢
பச்சை தேசிக்காய் / Lime 10 for...............................0.99¢
வாழைப் பழம் / Banana lb..................................0.39¢
தோடம் பழம் / Orange lb..................................0.49¢
கீரை ....0.99¢
பீற்றூட் ... 0.39¢

Pakoda

Roasted Chick Peas 2 for.............................0.99¢
Mixer 900 gr................$2.99

we reserved the right to limit quantities

கடன் தொல்லையினால் வருந்துகிறீகளா ?
GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஒர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்................

ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை

இன்றே அழையுங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு

(416) 556-9287

Credit Revolving Center

(GTA Square)

CREDIT REVOLVING CENTRE

5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

மொன்றியல் விளக்குப் பூசை சிறப்பாக நடைபெற்றது





மொன்றியலில் ஸ்ரீஅம்மாபகவான் பாக்மெற்றோ சற்சங்கம் பிறந்திருக்கும் புத்தாண்டில் சகல மக்களும் நோய்நொடி இன்றி, வளமோடு, ஆரோக்கியமாக குடும்பமாக குதூகலமாக வாழ விளக்குப் பூசை ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். மிகவும் சிறப்பாக ஸ்ரீஜி அவர்கள் பூசையைச் செய்தார். ஆன்மிக நெறியில் தியானமும் தெய்வீகமும் கலந்த தீபாரதனையும் தீபமேற்றலும் சிறப்பாக அமைந்தது.

மண்டபம் நிறைந்த பெருந்திரள் மக்களின் ஆதரவோடு நடைபெற்ற தமிழர் திருநாளில் கியூபெக் பாராளமன்ற உறுப்பினர் ஜெரி ஸ்கலோவோனொஸ் பாரியாருடன் கலந்துகொண்டு வாழ்த்தினார்





தமிழர் ஒளி - துர்க்காபதி இணைந்து வழங்கிய தமிழர் திருநாள் 2012 மொன்றலில் மிகப்பெரிய வெற்றி சூடிய விழாவாக வரவேற்புபெற்றது. இவ்விழாவில் gerry sklavounos (National Assembly and Chairman of the committee on health and social services) பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அவ்விழாவில் தமிழர் ஒளி மூத்தோர் இணைத் தலைவி திருமதி வதனி சிறிஸ்கந்தராசாவும். தமிழர் ஒளி தலைவர் திரு சிவாகனகரட்னம் அவர்களும் **Gerry Sklavounos**,அவர் பாரியார் ஜெனிகா **(Janica Sklavounos)** இருவருக்கும் பொன்னாடை போர்த்து கௌரவித்தனர். தமிழாழியின் தலைவரும் துர்க்காபதி கல்வி நிலையத்தின் அதி-பருமான திரு தமிழ்ச்சுடர் க. உயிரவனின் சிறப்புப் பேச்சும் இடம்பெற்றது. யாழ் -22 கடும் குளிரும், மண்டபம் நிறைந்து வழிந்த பெருவிழாக தமிழர் திருநாள் கொண்டாடப்பட்டது. மண்டபம் நிறைந்து வழிந்தது, வெளிப்புறத்தில் இடம் இன்றி வரிசையாக காத்திருந்த விழாவாக தமிழர் திருநாள் 2012 அமைந்திருந்தது.

75 நிகழ்ச்சிகள் ஒரே மேடையிடையில் தொடர்ச்சியாக 8 மணித்தியாலங்கள் மேடையேற்றி சாதனைபடைத்தது 14-01-2012 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு 419 சென்றோக் கலையரங்கில் ஆரம்பமாகி இரவு 2.30வரை நீடித்த இவ்விழா மொன்றியல் மக்களுக்களின் பெரும்மதிப்பபைப்பெற்றது.

போராட்டம் மௌனித்த காலத்திற்கு பின் மக்களின் மனங்களை வெற்ற பெருவிழாகும், தமிழர் ஒளி இணையம் , துர்க்காபதி கல்வி நிலையம், தமிழர் ஒளி மூத்தோர் இணையம், தமிழாழி, அம்மாபகவான் , நாட்டிய ஸ்ருங்கா, கீத்தனாலயம், வான்மதி நுண்கலைக்கூடம், உட்பட சங்கீத மைந்தர்கள், லங்கன் ஸ்ரார், பிலோ ரைடெஸ், பிறவுண் சடோ , ஆகிய அமைப்புக்களின் ஒருங்கமைந்த ஒற்றுமை விழா இதுவாகும். நாடகம், வில்லுப்பாட்டு, உரைச்சித்திரம் அதிரடி நடனங்கள், பாம்பாட்டம், குறத்திநடனம், கிராமிய நடனம். கோலாட்டல் 75 க்கும் அதிகமான நிகழ்சிகள் சிறப்பாக மேடை யேறின.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா



மணிபல்லவம், மணித்தீவு என்றழைக்கப்படுகின்ற சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்கும் நயினாதீவு சக்தியின் அருள்பெற்ற தீவாக விளங்குவதோடு மூர்த்தி, தலம். தீர்த்தம் என்னும் சிறப்புக்களைக் கொண்ட நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் இந்திய சிற்பக் கலைஞர்களால் புதிதாக அமைக்கப்பெற்ற அதி சுந்தர, நவதள, நவகலச 108 அடி இராஜகோபுரத்தினதும் புதிதாக வடிவமைக்கப்பெற்ற ஆலயத்தினதும் புனராவர்த்தன, அஷ்டபந்தன, உத்தமோத்தம தரயத் திரும்சத் (33) குண்ட மஹாயாக பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி திங்கட்கிழமை இரவு மஹா யாகம் ஆரம்பிக்கப்படுமெனவும் அம்பிகை அடியார்கள் 25ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணி முதல் 27ஆம் திகதி மாலை 6.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்தலா மெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆலயத்தின் பிரதம சிவாச்சாயார் சிவஸ்ரீ பரமசாமி முத்துக்குமாரசாமிக் குருக்களின் தலைமையில் மஹா கும்பாபிஷேகக் கிரியைகள் அனைத்தும் நடைபெறவுள்ளன. நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினரால் சிறப்பான முறையில் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அம்பிகை அடியார்களின் நலன்கருதி சுகாதார வசதிகள், மோட்டார் படகுச்சேவைகள் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அறங்காவலர் சபை உறுப்பினர் ப.க. பரமலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ்வாலயம் ஆகம முறைப்படி கிழக்கு நோக்கியவாறு, சமுத்திரத்தை நோக்கி, திராவிட முறைப்படி அமைக்கப்பெற்ற ஆலயமாகத் திகழ்கின்றது. இங்கு எங்குமே காணப்படாத புதுமையும் அற்புதம் கொண்ட சுயம்புவாய் அமைந்துள்ள ஐந்து தலையுடைய நாகத்தையும் அம்பாளையும் கொண்டுள்ள கர்ப்பக்கிரகத்தையும் காணலாம். உலகிலே புராண, இதிகாசங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஸ்ரீ புவனேஸ்வரி சக்திபீடமெனப் போற்றப்படும் அதிசக்தி வாய்ந்த பீடம் மணித்தீவு என்று சொல்லப்படுகின்ற நயினாதீவிலுள்ள ஸ்ரீநாகபூஷணி அம்பாள் எழுந்தருளியுள்ள பீடமெனக் கூறப்பட்டுள்ளது.

"யோகாஸ்" சந்திரன் - கனடா.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு....

(.A39..ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொருவருக்கும் வழங்கி ஒரு டொலர் நிதியாகப் பெற்று தாயகத்து உறவுகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக உதவிட முன்வந்ததும் மிகவும் பாராட்டுதலுக்குரியதாக அமைந்தது.

அன்றைய விழா நிகழ்ச்சிகள் அனைத்தையும் திரு குகதாசன் அவர்கள் முறையே தொகுத்தளித்துச் சிறபித்தார். தமிழர்களின் கலாச்சார மரபிற்கேற்ப மங்கள விளக்கேற்றல் - தமிழ் மறை ஓதல் - தமிழ்த் தாய் வாழ்த்து – கனேடிய தேசிய கீதம் மற்றும் அமைதி வணக்கத்துடன் விழா தொடங்கியது. முதல் கலைநிகழ்வாக நிருத்தியகலாஞசலி நாட்டியப்பள்ளி மாணவிகளின் வரவற்பு நடனத்தைத் தொடர்ந்து, தமிழ்ப் படைப்பாளிகள் கழக செயலாளர் திரு தியாகலிங்கம் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். இந்தோ கனடா டான்ஸ் அகாடமி மாணவிகளின் கரகாட்ட நடனமும் இடம் பெற்றது.

தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மார்க்கம் நகரசபை உறுப்பினர் திரு லோகன் கணபதி அவர்கள் திரு நக்கீரன் போன்றவர்களின் மனிதாபிமான சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். அனைவருக்கும் புத்தாண்டு, பொங்கல் நல் வாழ்த்துக்களைக் கூறி, தான் மேற்கொண்ட முயற்சிக்கு ஏதுவாக மார்க்கம் நகர சபை முதன் முதலாக தமிழரின் தைப் பொங்கல் விழாவை பெருமைப்படுத்தும் விதத்தில் ஜனவரி மாதத்தை தமிழர் மரபு மாதமாக பிரகடனப்படுத்தியதைப் பற்றியும், அதற்கேற்ப 14ம் திகதி பொங்கல் விழாவை மிகவும் கோலகலமாக தொடங்கி வைத்ததையும் கூறினார்.

அடுத்தாக 2006 ஆண்டு முதல் 2011 வரை பிறந்த தமிழ் பெயர் சூட்டப்பட்ட சிறார்களுக்களின் பெயஙர்கள் தேர்வு செய்யப்பட்டு 33 நாட்களே ஆகிய கரிகாலன் என்ற குழந்தை தேர்வு செய்யப்பட்டு, 500 டொலர் பரிசு வழங்கியபோது அதனைப் பெற்றுக்கொண்ட குழந்தையின் தந்தை திரு அருள்தீபன் அவர்கள் அத்தொகையை மறுவாழ்வு அமைப்பிற்கு நன்கொடையாக வழங்கியது அனைவரின் நெஞ்சைத் தொட்டுவிட்டது. தொடர்ந்து 10 தமிழ் பெயரிட்ட குழந்தைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா 100 டொலர் பரிசும் பாராட்டுச் சான்றிதழ்களும் பல முக்கிய பிரமுகர்களால் வழங்கப்பட்டது. ஆரரன் என்ற குழந்தையின் தந்தை திரு காசிநாதன் அவர்களும் தனக்கு அளிக்கப்பட்ட பரிசுத் தொகையை நன்கொடையாக வழங்கிவிட்டார்.

இறுதி கலை நிகழ்ச்சிகளாக இந்தோ கனடா நடனப்பள்ளி வழங்கிய தில்லானா, சக்தி நடனப்பள்ளி வழங்கிய உழவு நடனமும் அனைவரையும் மகிழச்செய்தன. அன்று நடைபெற்ற ஆடல் பாடல்கள் யாவும் இனிய தாயகத்தைப் பற்றிய தமிழ்ப்பாடல்களாக அமைந்து நமது கிராமியக்க கலைகளின் உன்னதத்தை படம் பிடித்துக்காட்டி, தாயக உணர்வை ஏற்படுத்திவிட்டது என்பதே நிஜம்.

இறுதியாக திரு நக்கீரன் தங்கவேல் அவர்கள் விழா அமைப்பாளர்களையும், குறிப்பாக திரு ஈழவேந்தன் ஆற்றி வரும் தன்னலமற்ற ஊடகசேவையையும், உ.த.ப.இயக்கம் கனடாக்கிளை, தமிழ்ப் படைப்பாளிகள் கழக செயற்பாட்டாளர்களான குகதாசன், சோமசச்சிதானந்தன், விஜேயந்திரா, ராசநாதன், தியாகலிங்கம், ராஜ்குமார், சிவா கணபதிப்பிள்ளை, வேல் வேலுப்பிள்ளை, வைரமுத்து சொர்ணலிங்கம், திரு குணநாதன், மகாலிங்கம் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களின் அன்றைய விழா ஏற்பாடுகள், அவர்கள் ஆற்றி வரும் பணிகள் ஆகியவற்றை பெரிதும் பாராட்டி, தமிழ்ப் பெயர் சூட்டவேண்டியதின் அவசியத்தையும் எடுத்துரைத்ததோடு இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிர்களின் வாழ்வை நிமிர்த்த உலக வங்கியால் மட்டுமே முடியும், அதற்காக புலம்பெயர்ந்த தமிழர்கள் கைகட்டிக்கொண்டு இருக்க முடியாது. இங்குள்ள மறுவாழ்வு அமைப்பு மேற்கோண்டு வரும் உழவாரப் பணிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஒரு மண்வெட்டி மற்றும் கத்திக்கான செலவாகும் தொகையான 15 டொலர்கள் அன்பளிப்பு வழங்கி உதவிட அனைவரும் முன்வருவெண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

தமிழ் படைப்பாளிகள் கழக உறுப்பினர் திருமதி பவானி தர்மகுலசிங்கம் அனைவருக்கும் நன்றி கூறி இந்த ஆண்டு முப்பெரும் விழாவை நிறைவு செய்தார்.

Women Rights in India after Independence

By Satheesan Kumaaran

The status of women in India has been subject of many great changes over the past few millennia. From a largely unknown status in ancient times through the low points of the medieval period, to the promotion of equal rights by many reformers, the history of women in India has been eventful. Many improvements are taking place in India, unlike in the past.

The current President of India is the first female who contributed to the independence of India from Britain, and India produced a female Prime Minister earlier, and women are working as scientists, surgeons, lawyers, physicians, politicians, etc., unlike never before.

Different types of feminist movements have appeared in the Third World as well as in the First World. For example, some middleclass-based feminist movements emerged at the same time as nationalist niovements campaigning for independence from colonial powers in India.

Practical gender interests, therefore, are generally expressed as social and economic demands. These sorts of activities correspond to the category 'the politics of everyday life'. They can take the form of spontaneous protests, the most obvious being food riots of the sort which occurred in many Third World countries in the 1980s, sparked by the imposition of harsh structural adjustment packages.

They can also take the form of more organised campaigns and activities. These are often not exclusively women-only, but women often make up the majority of the members. Movements organising around practical gender interests frequently focus around consumption issues, often organising in a particular location or community.

Some activities which can be characterised in this way involve the pressurising of the state or political parties, for example, campaigns in poor areas to get the state, whether on a local or national level, to provide services such as water, electricity, and improved health care.

Other activities operate more autonomously, often focusing around collective survival strategies, like communal kitchens providing food on a collective basis, setting up workshops to produce goods for sale as part of income-generating schemes, e.g. bakeries, craft workshops, credit unions such as SEWA in India.

Other examples include women's centres which offer crèches, advice, and meeting rooms. While these sorts of activities are often based in poor urban areas, there are examples of women's movements operating in rural areas, particularly peasant and landless women.

Another classic example of women activism is about a different and more subtle form of state authoritarianism displayed in the wake of the Bhopal disaster in December 1984, when a gas leak from a Union Carbide pesticides factory left over 10,000 dead and hundreds of thousands injured.

The Government of India passed an Ordinance proclaiming itself the sole legal representative of the survivors in their struggle both to obtain compensation and–perhaps even more importantly from their point of view–to prosecute the company for the negligence and recklessness which had caused the disaster.

In 1989, the government came to a settlement with Union Carbide which not only accepted a paltry sum as compensation, but also agreed to drop all criminal charges against the company, much to the outrage of the gas victims it was supposed to be representing.

Thousands of infuriated survivors, predominantly women, proceeded to make the long journey to the Supreme Court in Delhi in order to demonstrate against the settlement, which was in fact overturned when a new government came to power. It was remarked by many observers that most of the men appeared to have become disheartened and apathetic as a result of the long-drawn-out, frustrating legal proceedings, whereas most of the women never gave up their quest for justice.

The present accomplishments of women could not be achieved without the active participations of women and their contributions to society and is as immense as never before in the contemporary world. Although most women work and contribute to the economy in one form or another, much of their work is not documented or accounted for in official statistics.

Women plow fields and harvest crops while working on farms. Women weave and make handicrafts while working in household industries. Women sell food and gather wood while working in the informal sector. Additionally, women are traditionally responsible for the daily household chores (e.g., cooking, fetching water, and looking after children).

Since Indian culture hinders women's access to jobs in stores, factories, and the public sector, the informal sector is particularly important for women. There are estimates that over 90 percent of workingwomen are involved in the informal sector. The informal sector includes jobs such as domestic servant, small trader, artisan, or field laborer on a family farm. Most of these jobs are unskilled and low paying and do not provide benefits to the worker. More importantly, however, cultural practices vary from region to region.

Though it is a broad generalization, North India tends to be more patriarchal and feudal than South India. Women in Northern India have more restrictions placed on their behavior, thereby restricting their access to work. Southern India tends to be more egalitarian. Women have relatively more freedom, and women have a more prominent presence in society.

Cultural restrictions, however, are changing, and women are freer to participate in the formal economy, though the shortage of jobs throughout the country contributes to low female employment. But in the recent years, conditions of working women in India have improved considerably. More and more women find themselves in positions of respect and prestige; more and more workplaces are now populated with women who work on equal terms as men. Working is no longer an adjustment, a mere necessity; but a means to self worth and growth.

Women have now not only found their place in better careers, but are also party to governance. In recent years, there have been explicit moves to increase women's political participation. Women have been given representation in the Panchayati Raj system as a sign of political empowerment. There are many elected women representatives at the village council level. At the central and state levels, too, women are progressively making a difference. Today, we have women Chief Ministers in five large states of India. The Women's Reservation Bill is slated to further strengthen political participation.

India, unlike the past, is producing great, talented women and recognizing women as potential resources, setting aside the old religious myths about women relieving women activists who work hard to uplift the women empowerment in all sectors equal to men. So, all these are really a fascinating in the post-independence era.

(The author can be reached at e-mail: satheesan_kumaaran@yahoo.com)

(A8ம் பக்கத் தொடர்ச்சி)

தூணாய் நின்ற ....

என்பதை யாராலும் மறுக்க முடியுமா? சீக்கியர் சொல்வதை மத்திய அரசு கேட்டே ஆக வேண்டிய சூழ்நிலை. சீக்கியர் இல்லையென்றால் இந்திய இராணுவம் பலமற்றதாகப் போய்விடும்.

வந்தோரை வாழ வைப்பதே தமிழ் நாடென்று பழமொழிகளைக் கூறிக்கொண்டு சோம்பேறிகளாக வாழ்பவர்களே தமிழர்கள் என்றால் மிகையாகாது. மக்களை வழி நடத்த முற்போக்கு சிந்தனையாளர்கள் முன்வர வேண்டும். மக்களுக்கு தகுந்த படிப்பினைகளைக் கொடுத்து அவர்களைச் சிறந்த பிரஜைகளாக ஆக்க வேண்டிய பொறுப்பு முற்போக்குவாதிகளுக்கு உண்டு.

நெடுமாறன் போன்றவர்களின் தலைமையில் இளைஞர் மற்றும் யுவதிகள் பட்டாளம் ஒன்றிணைய வேண்டும். திருவள்ளுவர் போன்ற மகான்களைப் போற்றுவதற்குப் பதில் ஷேக்ஸ்பியர் போன்றவர்களை புகழ்பாடுவதுதான் தமிழர்களின் வழக்கம். இதன் மூலமாக தமிழையும் தமிழர்களையும் நாமே ஓரம் கட்டுகிறோம் என்றே பொருள். அனைத்தையும் அறிவதில் எந்தவிதமான பிழையும் இல்லை. எம்மை நாம் தாழ்த்திக் கொண்டு மற்றவர்களை உயர்த்திக் காட்டுவதுதான் நமது பண்பாடாக இருக்கிறது.

தமிழர்களின் பங்கு அளப்பரியதே

இந்திய விடுதலைப் போரில் தமிழகம் செலுத்தியிருக்கிற பங்கு அளப்பரியதாகும் எனக் குறிப்பிட்டுள்ளார் நெடுமாறன். அவர் மேலும் கூறுகையில், "தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிய மோகன்தாஸ் காந்தியின் அறப்போராட்டங்களுக்குத் துணையாக நின்று அவரை மகாத்மா காந்தியாக ஆக்கியவர்கள் தமிழர்கள். அவர் அழைப்பை ஏற்றுச் சிறை புகுந்தவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அவர்களில் ஒருத்தியான தில்லையாடி வள்ளியம்மை தனது உயிரைத் தியாகம் செய்து காந்தியடிகளின் அறப்போராட்டத்துக்கு முக்கியத்துவத்தை ஏற்படுத்தினார்."

"தமிழ்நாட்டைச் சேர்ந்த ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜ் போன்ற பல தலைவர்களும் எண்ணற்ற தொண்டர்களும் காந்தியடிகளை உளமாறப் பின்பற்றி எண்ணற்ற தியாகங்களைச் செய்தார்கள். அண்ணலின் அழைப்பையேற்று அறப்போரில் தடியடிக்கு ஆளாகி உயிர்நீத்தான் திருப்பூர் குமரன். நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூரில் முதலாவது இந்திய சுதந்திர அரசை நிறுவி, இந்திய தேசிய ராணுவத்தை அமைத்த போது அவருக்குத் தோள்கொடுத்துத் துணை நின்றவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்."

நெடுமாறன் அவர்களின் கூற்றுக்கள் அனைத்துமே உண்மையே. இருப்பினும், தமிழர்கள் அன்றும் காந்தி போன்றவர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள் என்பதே உண்மை. நேரு இரண்டாம் நிலையில் இருந்து போராடினார். காந்திக்கு பல வழிகளில் உதவிய தமிழர்களை நேரு இருந்த இடத்திற்கு அண்மையில் கூட வைத்திருக்கவில்லை காந்தி. வெறும் போராட்ட சக்திகளாகவே தமிழர்களைப் பாவித்தார்களே தவிர தமிழர்களை உயர் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக வைத்திருக்கவில்லை.

நெடுமாறன் மேலும் எழுதியுள்ளதாவது, "முதலாவது சுதந்திர இந்திய அரசு அமைக்கப்பட்டபோது நிதியமைச்சர் பொறுப்பைத் தமிழரான ஆர்.கே.சண்முகம் செட்டியாரிடம் பிரதமர் நேரு ஒப்படைத்ததைத் தொடர்ந்து, முதலாவது கவர்னர் ஜெனரலாக ராஜாஜி, மத்திய அமைச்சர்களாக டி.டி.கிருஷ்ணமாச்சாரியார், ஓ.வி. அளகேசன், ஆர். வெங்கட்ராமன், சி. சுப்பிரமணியம் போன்ற பலர் பெரும் பொறுப்புகள் வகித்துச் சிறப்பாகத் தொண்டாற்றி தமிழகத்துக்குப் பெருமை ஈட்டிக்கொடுத்தார்கள்."

"அவர்களுடன் நமக்குக் கருத்து மாறுபாடு இருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருபோதும் தமிழுக்கோ, தமிழினத்துக்கோ, தமிழகத்துக்கோ சிறுமை தேடித் தரவில்லை. அகில இந்திய கட்சிகளின் தலைவர்களாகவும் பல தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள். காங்கிரஸ் தலைவராகக் காமராஜ், முஸ்லிம் லீக் தலைவராக "காயிதே மில்லத்" முகமது இஸ்மாயில், பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவராக உ. முத்துராமலிங்கத்தேவர் மற்றும் பி.கே. மூக்கையாத் தேவர் போன்ற பலர் பொறுப்பு வகித்து அந்த பதவிகளுக்குப் பெருமை தேடித் தந்தார்கள்."

நெடுமாறன் அவர்கள் கூறுவது நூற்றுக்கு நூறு சதவீதம் உண்மையே. எதற்காக தமிழர்களுக்கு நேரு அவர்கள் முக்கியத்துவதத்தை தனது அரசாங்கத்தில் அளித்தார் என்பதை ஆராய வேண்டும். சீக்கியர் மற்றும் மலையாளிகளின் அதிகாரங்கள் இன்று எந்தவகையில் அகில இந்திய அளவில் இருக்கிறதோ, அதைப்போலத்தான் அன்று தமிழர்களின் பலம் இருந்தது. தமிழர்கள் பல நாடுகளில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய செல்வாக்கு இந்திய நாட்டிற்கு அன்று தேவைப்பட்டது.

நேரு அவர்கள் பரந்த சிந்தனையுடனேயே அவ்வாறான நிலையை அன்று எடுத்தார். இந்து சமுத்திரத்தின் குரல்வளையாக இருப்பது தமிழகம். பூகோள அரசியல் மற்றும் இராணுவ நலன்களுக்கு ஏற்ற இடமாகவே தமிழகம் இன்றும் இருக்கிறது. இந்திய இராணுவப் பலத்தை அதிகரிப்பது என்பது இன்றியமையாத தேவையாக அன்று இந்திய நடுவன் அரசிற்கு இருந்தது.

ஒட்டுமொத்த இந்து சமுத்திரத்தையும் இந்திய கடற்படை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டுமென்பது நேருவின் கனவு. இதனை நிறைவேற்ற தமிழகத்தின் ஆதரவு தேவை. இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, பிஜி, மொரிசியஸ், பர்மா, தென் ஆபிரிக்கா, அந்தமான்/நிகோபார் போன்ற இடங்களில் தமிழர்களின் பிரசன்னம் அதிகமாக இருந்தது. அவர்களின் கடினமான உழைப்பினால், குறித்த நாடுகள் பொருளாதார ரீதியில் பல அனுகூலங்களை அனுபவித்தார்கள். இவ் மக்களின் செல்வாக்கை வைத்தே இந்தியாவின் உலக நாடுகளுடனான இராஜதந்திர நல்லுறவை மேம்படுத்தலாம் என்பதை அன்று நன்கே உணர்ந்தார் நேரு.

காலம் இன்று மாறிவிட்டது. உலகின் முக்கிய சக்தியாக இன்று இந்தியா வளந்துள்ளது. தமிழர்களின் தயவின்றி தனது செல்வாக்கை உலக அளவில் இன்று இந்தியா வைத்துள்ளது. தமிழர்களின் கடின உழைப்பு இன்று இந்திய அரசிற்கு தேவையில்லை. அன்று மக்கள் செய்த வேலைகளை இன்று இயந்திரங்கள் செய்கின்றன.

தமிழர்கள் இன்று வேண்டப்படாத இனத்தவராகவே இந்திய நடுவன் அரசினால் பார்க்கப்படுகிறார்கள். இவர்களின் வாக்குகள் கூட இந்திய தேசியக் கட்சிகளுக்கு இல்லையென்கிற நிலையே தமிழகத்தில் நிலவுகிறது. ஆக தமிழர்களை முன்னர் நன்றாகவே கசக்கி பிழிந்து அனைத்து சக்திகளையும் எடுத்துவிட்டு அவர்களை இக்கட்டான நிலைக்குள் தள்ளிவிட்டார்கள் பிற இனத்தவர்கள் என்பதே உண்மை. தமது இனத்தின் மீது பற்று அற்றவர்களாகவேதான் இன்றும் பல கோடித் தமிழர்கள் இருக்கிறார்கள்.


தூணாய் நின்ற தமிழன் துரும்பானதற்கான காரணங்கள் பல. இந்திய அரசியல்வாதிகளை மட்டும் குறைகூறிவிட்டு நாம் தப்பிக்க முடியாது. நமக்கு புண் வந்துவிட்டால் நாமேதான் மருத்துவமனை சென்று மருத்துவரைப் பார்க்க வேண்டும். நாம் வீட்டிற்குள் சோம்பேறிகளாக தூங்கிக் கொண்டிருந்துவிட்டு மருத்துவர் நமது வீடு வந்து புண்ணுக்கு மருந்து கொடுப்பாரென யதார்த்தத்திற்கு ஒத்துவராத கனவைக் காண்பது முட்டாள்த்தனம். நமது உரிமைகளை நிலைநாட்ட நாமே களம் காண வேண்டும். மற்றவர்கள் அதனை நமக்கு கொண்டுவந்து தரமாட்டார்கள் என்பதை தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்தால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும்.

..............இக்கட்டுரையின் தொடர்ச்சி அடுத்த வாரம்.................

இவ் ஆய்வு பற்றிய உங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல்: nithiskumaaran@yahoo.com

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02-01-1936

மறைவு
16-01-2007

அமரர். டாக்டர் வைத்திலிங்கம் தில்லைச்சந்திரன்

(ஹோமியோபதி வைத்தியர் கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

திதி: 20-01-2012

எம்மைவிட்டுப் பிரிந்ததேனோ
விண்ணுயரப் பறந்ததேனோ
உள்ளம் உருகுதையா - எம் கண்கள் சொரியுதப்பா
காலன் உம்மை கையிலேந்தி
காலங்கள் ஐந்து ஆனதேனோ
யாரை நோவோம்! நாம் ஆறுதல் கொள்வோம்
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உங்கள் ஆசியை என்றும்
எதிர்பார்த்திருக்கின்றோம் அப்பா


எம் தெய்வத்தின் ஆத்மா சாந்திபெற
எம் கண்ணீர் பூக்களால் அஞ்சலி செய்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

தகவல்:
மனைவி - 416-264 5073

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
13 - 06 - 1921



இறப்பு:
14 - 01 - 2010

அமரர். திரு. மருதையினார் பசுபதிப்பிள்ளை

(வேலணை மேற்கு, ஊர்காவற்றுறை)

கனவுகள் கலைந்தாலும்
நினைவுதான் நீங்காதையா
உணர்வுகள் எமக்குள்ளே
உரமற்றுப் போனாலும்
உங்கள் உருவமெங்கள்
உயிரினில் நிழலாடுதையா
ஆண்டுகள் இரண்டு ஆனபோதும்
ஆறவில்லை எம் துயரம்
மாள்வது நியதியென்று
மறந்திடவோ முடியவில்லை
தேம்பியழும் எங்களைத்
தேற்றிடவோ நீங்களில்லை
வானிழந்த பயிரெனவே
வாடுகின்றோம் நாமிங்கே
ஆண்டவன் திருவடியில்
சேர்ந்து விட்ட உங்களாத்மா
சாந்தி பெற வேண்டுமென
என்றென்றும் வேண்டுகின்றோம்...

தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(416) 287-6269

16ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
மலர்ந்தது

22
-
07
-
1947



விண்ணுலகு
விரைந்தது

22
-
01
-
1996

அமரர். தம்பாப்பிள்ளை பாலசுப்பிரமணயிம்

(புங்குடுதீவு 1ம் வட்டாரம்)


திதி - 25 - 01 - 2012

அப்பாவே எங்கள் ஆருயிர் தந்தையே
மண்ணுலகை விட்டு மறைந்திட்ட நாள்முதல்
கண்கள் நித்தம் கண்ணீரால் நிறைகிறதே
ஆண்டுகள் பலகடந்தும் ஆறமுடியவில்லை
மண்ணில் நல்மைந்தனால் அவதர்த்தீர
கண்ணில் மணிபோல் கருதி எமை வளத்தீர
உடன்பிறப்புகள் உள்ளம் நிறைந்தீர
பெற்ற பிள்ளைகளை பிரியமுடன் வளர்த்தீர
ஆசைகொண்டு தாத்தாவென அழைத்திட
தங்கநிற பேரர்கள் பேத்தி தவியாய் தவிக்கின்றனர்
நாடு விட்டு நாடு வந்தும் எங்களுக்கு
நீங்களின்றி எம்வாழ்வில் நிம்மதி ஏதப்பா
நல்லவர்கள் வாழ்வதில்லை நாமறிந்த உண்மை
வல்வனாய் வாழ்ந்ததை எம் ஊரறியும்
மண்ணைவிட்டுத் தான் அப்பா மறைந்தீர
எம்மனங்களை விட்டு மறையவில்லை

அப்பாவின் நினைவுகளை இதயங்களில் சுமந்து வாழ்ந்திடும்
அருமை மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல்: சஞ்சய் பாலா (மகன்) 647-202 0771

31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
04-01-1944

ஆண்டவன் பிடியில்
21-12-2011

அமரர் நல்லதம்பி இரத்தினசபாபதி
(Jaffna Brass Stores, Colombo)

மலரினும் மென்மையான்
வானினும் தூய்மையான்
அலையிலும் ஓய்விலான்
ஆற்றினும் கடுகலான்
நிலையினிற் செம்மையான்
நினைவினிற் பசுமையான்
தொலைவழி போயினும்
தோற்றுவார் நெஞ்சிலே.

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 6ம் வட்டாரத்தை வாழ்விடமாகவும் கொழும்பில் பிரபல வர்த்தகராகவும் தற்போது கனடா மார்க்கம் நகரில் வாழ்ந்து அமரத்துவமடைந்த நல்லதம்பி இரத்தினசபாபதி அவர்களின் இறுதிக்கிரியைகளிலும், மலர் வளையங்கள் வைத்தும், மலர் மாலைகள் அணிவித்தும், மலர் அஞ்சலி செய்தும் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் தொலைபேசிகள் மின்னஞ்சல் மூலம் ஆறுதல் வார்த்தைகள் தெரிவித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின் போது பரமன் புகழ் பாடியவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறிய குருமார்களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனைத்துக் கிரியைகளை நடாத்தி வைத்த அந்தணப் பெரியோர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ம் நாள் நினைவையொட்டி 20-01-2012 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், ஞாயிற்றுக்கிழமை 22-01-2012 அன்று கனடா கந்தசுவாமி கோவிலில் நடைபெறவிருக்கும் நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உங்கள் நினைவில் துயருறும்
அன்பு மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்

Home: 905-472-9908
Siva: 647-339-5460

UTHAYAN
உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

(416) 752-1524 (416) 752-6703

உதயனை www.canadauthayan.ca இல் பார்வையிடலாம்

உதயம்: 824 | Chief Editor: R N Logendralingam | 20.01.2012 FRIDAY

தாம் நடத்திய தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடல் தொடர்பாக தமிழர் வர்த்தக சம்மேளனத்தினர் மகிழ்ச்சி தெரிவிப்பு.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ஸ்காபுறோ காரைக்குடி உணவக மண்டபத்தில் கனடா தமிழர் வர்த்தக சம்மேளனம் நடத்திய தமிழ் ஊடகவியலாளர்களின் ஒன்றுகூடல் மற்றும் இராப்போசன விருந்து ஆகியன தமக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக சம்மேளனத்தின் தலைவர் திரு. மைக் அகிலன் செயலாளர் திரு சாந்தலிங்கம் ஆகியோர் உதயனுக்கு வழங்கிய சிறப்பு பேட்டியின் போது தெரிவித்தனர். மேற்படி ஒன்றுகூடலில் அனேகமான தமிழ் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை தொடர்ந்தும் சம்மேளனத்திற்கு வழங்குவதாக உறுதியளித்தனர். இங்கே காணப்படும் படத்தில் அனைத்து ஊடகவியலாளர்களும் உள்ளனர். (படம்: நினைவுகள்.கொம்)



எழுத்தாளர் குரு அரவிந்தனின் தாயார் கொழும்பில் காலமானார்



பிரபல எழுத்தாளரும் உதயன் பத்திரிகையின் நெருங்கிய நண்பருமான குரு அரவிந்தனின் தாயார் திருமதி. பாக்கியலட்சுமி குருநாதபிள்ளை அவர்கள் 10-01-2012 கொழும்பில் காலமானார் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசந்துறையை வதிவிடமாகவும் கொண்ட அன்னார் காலம் சென்ற நடேஸ்வராக்கல்லூரி, காங்கேயன்துறை கனிஷ்ஸ்ட பாடசாலை அதிபர் திரு. அ. குருநாதபிள்ளையின் அன்பு மனைவியும், எழுத்தாளர் குரு அரவிந்தனின் அன்புத் தாயாரும், முன்னாள் மகாஜனாக் கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் மாமியாருமாவார். கொழும்பில் இறுதிக் கிரிகைகள் நடைபெற்றன. அனுதாபம் தெரிவிக்க விரும்புவோர் குரு அரவிந்தன் - 905 861 9323 என்ற இலக்கத்தை அழைக்கவும்.

படைப்பாளிகள் கழகமும் பண்பாட்டு இயக்கமும் இணைந்து நடத்திய முப்பெரும் விழாவில் தமிழ் பெயர் கொண்ட குழந்தைகளுக்கு கௌரவம்



கடந்த 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்ப் புத்தாண்டு ,பொங்கல் திருவள்ளுவர் பிறந்த நாள் ஆகியவற்றைக் குறிக்கும் முப்பெருவிழாவில் தனிப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ள குழந்தைகளுக்கும் அவர்தம் பெற்றோர் களுக்கும் மதிப்பளிக்கப்பட்டது. இங்கே காணப்படும் படத்தில் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட லோகன் கணபதி தம்பதிகள் மற்றும் படைப்பாளிகள் கழகத்தின் தலைவர் திரு தங்கவேலு ஆகியோர் பெற்றோர் குழந்தைகள் ஆகியோரோடு காணப்படுகின்றனர். (படம்: செய்தி இணையத்தளம்)

லிபரல் கட்சியின் அரையாண்டு மாநாட்டில் ஒட்டாவா சென்று கலந்து கொண்ட தமிழ் பேசும் அன்பர்கள்



கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஒட்டாவா மாநகரில் நடைபெற்ற கனடா லிபரல் கட்சியின் மாநாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். இங்கே காணப்படும் படத்தில் அங்கு கலந்து கொண்ட தமிழ் பேசும் அன்பர்கள் சிலர் கட்சியின் முக்கிய உறுப்பினர் சீலா கொப்ஸ் அவர்களுடன் சேர்ந்து நிற்பதைக் காணலாம். (படம்- சத்தியன்)

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கனடா வருகின்றார்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தற்போது இலங்கை அரசுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கெடுத்து வருபவருமான திரு சுமந்திரன் இன்று மாலை கனடா வரவுள்ளதாக நமது கொழும்புச் செய்தியாளர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் அறிவித்துள்ளார். நாளை ஸ்காபுறோவில் தமிழர் பொது அமைப்பு ஒன்று ஏற்பாடு செய்துள்ள பொங்கல் விழாவில் கலந்து கொள்ளும் முகமாகவே அவரது கனடா விஜயம் அமைந்துள்ளதாகவும் மேற்படி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.